குருபாதம்

ஞானசம்பந்தம்

மலர் 15] துன்முகிஆண்டு ஐப்பசித்திங்கள் 10—11—56 [இதழ் 12

திருப்பனந்தாள், ஸ்ரீ காசிமடம்
ஸ்ரீ காசிவாசி, ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத சுவாமிகள் செந்தமிழ்க் கல்லூரியில்



தருமபுர ஆதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்
அவர்களின் திருவுருவப் படத்தை ஸ்ரீ காசிமடம், இளவரசு,
வி[illegible]வான், ஸ்ரீலஸ்ரீ மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் எழுந்தருளுவித்தல்

ஆசிரியர் வித்துவான், சோமசுந்தரத் தம்பிரான்
துணை ஆசிரியர் முத்து. சு. மாணிக்கவாசக முதலியார்
தருமபுர ஆதீனம்.

" ஞானசம்பந்தம் "

உட்பொருள்

		பக்கம்
1.	" ஞானசம்பந்தம் "	க
2.	ஹிந்துக்கள் மத மாற்றத்தில் சென்னை கவர்னர் கவலை	சு
3.	முப்பொருள் விளக்கம்	870
4.	கலித்தொகையிற் சில திருத்தங்கள்	874
5.	அடியவர் அநுபவம்	882
6.	வல்வில் வேட்டம்	886
7.	முருகாற்றுப்படை நக்கீரர் சங்ககாலத்தவரே	890
8.	திருவண்ணுமலைத் திருவிளக்கு	900
9.	தாயுமானவர் நெறி	907
10.	அடியார் பெருமை	911
11.	சிவோபாசனை	915
12.	பொய்கைநாடு கிழவன்	919
13.	இருபா இருபஃது	924
14.	கடிதங்கள்	931
15.	ஆதீனத்திலும் ஆதீன தேவஸ்தானங்களிலும்	936
16.	எதிர்காலம்	946
17.	மதிப்புரை	935,949

தருமபுர ஆதீன வெளியீடுகள்

1. திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம்

முதல் திருமுறை (ராப்பர்)	3—8—0
தபாற் செலவு	1—5—0
இரண்டாவது திருமுறை (காலிகோ)	5—0—0
தபாற் செலவு	1—8—0
மூன்ருவது திருமுறை (காலிகோ)	5-12—0
தபாற் செலவு	1—9—0

மானேஜர்,
தருமபுர ஆதீனம்,
தருமபுரம், மாயூரம் P. O.

நன்றியுரை

"ஞானசம்பந்தம்"

இவ்விதழொடு பதினைந்தாவது ஆண்டு ஆகின்றது இச் சஞ்சிகைக்கு. அடுத்த இதழ் முதல் 16 ஆவது ஆண்டு தொடங்குகின்றது. கட்டுரைகளால் "ஞானசம்பந்தம்" சிறந்து விளங்கச் செய்த அறிஞர் பலர்க்கும் எங்கள் நன்றி கலந்த வாழ்த்துப் பெரிதும் உரித்து.

சந்தாதாரர்கள் வழக்கம்போல ஆதரித்து வருவார்கள் என்று கருதுகின்றோம். அவர்கட்கும் எங்கள் வாழ்த்தும் நன்றியும் உரியனவாகும்.

புதிய சந்தாதாரர்கள் பலர் இவ்வாண்டில் சேர்த்து 'ஞானசம்பந்தம்' பெறுவார்கள் என்று நம்புகிறோம்.

ஆண்டுக் கட்டணம்

உள்நாடு	....	1—8—0
வெளிநாடு	....	2—0—0
ஆயுட் சந்தா	....	25—0—0

சேயலாளர்,
"ஞானசம்பந்தம்" காரியாலயம்,
தருமபுரம், மாயூரம் P. O.

உ
குருபாதம்
ஞானசம்பந்தம்
மலர் 15 } துன்முகி௵ ஐப்பசி௴ 10—11—56 { இதழ் 12

உ
திருச்சிற்றம்பலம்

போன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினுய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. — சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

"ஞானசம்பந்தம்"

தென்னுடுடைய சிவன் எந்நாட்டவர்க்கும் இறைவன் என்பது முதியோர் வாக்கு. மக்கள் உயிர்கள் - எப்பொழுதும் இன்பம் ஒன்றையே விரும்புகின்றன. அதில் உலக இன்ப மாய்க் கருவிகரணங்கள் அடையும் இன்பம் நிலையில்லாதன. நிலையான இன்பம் என்பது உயிர் அடையும் பேரின்பமாகும். அதுவும் நிலைத்திருக்கத் திருவருள் துணை நமக்கு இருக்க வேண்டுமென்ற உண்மையை எடுத்துச் சொல்லி நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்ற கொள்கையோடு செய்யும் தருமை ஆதீன தலைமைத் தொண்டு இந்த ஞானசம்பந்தம்.

சமய ஒழுக்கம், சமயக் கல்வி, சமய வாழ்வு இவை களுக்கு ஒரு திட்டமான வரம்பு செய்து மக்கள் வாழ்வில் ஒரு இன்பம் இருப்பதை எடுத்துக் காட்டிப் பின்பும் உயிர்க்கு அந்த இன்பம் விதையாக இருக்க நம் முன்னோர் வகுத்த வழிகளை மக்களுக்கு அடிக்கடி எடுத்துச் சொல்லி வருகிற தொண்டு எங்கள் தொண்டு. மக்கள் மனம் எப்பொழுதும் கடவுள் கொள்கையை மறந்திருந்தது இல்லை. வெளிப்பேச்சாகப் பேசினுலும் உள்ளுணர்வு மாத் திரம் அதனை மறக்க மறுக்கிறது. அவ்வளவு ஆழப்பதித்து

வைத்திருக்கிறார்கள் நம் முன்னோர்கள். நமது பழக்க வழக்கங்களினால், நாம் செய்யும் ஒவ்வொரு செயலும், உண்பதும் உறங்குவதும்கூட, கடவுள் நினைவோடு செய்யும் செய்கைகளாக நமக்குத் திட்டப்படுத்திவிட்டார்கள். கடவுள் கொள்கை உடையவர்கள் உலக வாழ்வில் சிறப்ப வாழ்ந்தவர்கள் - வாழ்கிறார்கள் என்பதை நாம் அறிந்திருக்கிறோம்.

சுத்தமாக வாழ்வது - செயலிலும், சொல்லிலும், அகத்திலும், புறத்திலும் - சமயக்கொள்கைக்கு முதல் இடம். இதனை வேண்டாம் என்று சொல்லவோ தள்ளவோ யாரும் மனங்கொள்ளமாட்டார்கள். அதிற் சிறிது குறைந்தாலும் அவர்களை அநாகரிகமுடையவர்கள் என்று ஒதுக்கி விடுகிறது சமூகம். ஆகவே சமூகத்தில் நல்ல வாழ்வு-நாகரிக வாழ்வு வாழ மேற்சொன்னவை வேண்டியதாகின்றன. அவ்விதம் வேண்டிய நமது சமய வாதிகள் பெரியோர்கள் நமக்கு வழி வகைகளைத் திட்டம் செய்திருக்கிறார்கள். அதனைத்தான் சமயக்கொள்கைகள் என்று பெயரிட்டு அழைக்கிறோம். ஒவ்வொருவரும் அவரவர் தகுதி-பக்குவம் இவைகட்கேற்பக் கடவுள் கொள்கையைக் கையாளுகிறோம். யார் யார் எவ்வெவ்விதத்தில் கையாண்டாலும் முடிவாகப் பல படி முறையாலும் உயர்ந்து உயர்ந்து உச்ச நிலையை நாம் அடைந்தே தீருவோம். எவ்வளவு இழிகுணம் உள்ளவர்களும் வெளியுலகப் பழக்க வழக்கங்களைப் பார்த்து இன்பத் தேட்டையில் இறங்காமலிருக்க முடியாது. அதில் தோயத் தோய மனம் தெளிந்து மற்றையோர் கண்டு அனுபவித்ததைத் தானும் அடைய வேண்டும்; இன்னும் அதிகமாகவும் அடைய வேண்டுமென்ற விருப்பம் இருந்து தூண்டி விடும். அந்த நிலையில் உலகியலில் வந்த மக்கள் உலக வாழ்வில் உள்ள இன்பத் துன்பங்களைக் கண்டுகொள்ளாமல் இருக்க முடியாது. அவ்விதமாகக் கண்டு கண்டு கழித்து முடிவில் நம் பெரியோர் - சமயவழி காட்டிகள் வகுத்த பாட்டையில் வந்து நிற்கத்தான் வேண்டும். அதில் உள்ள அமைதியான, துன்பம் கலவாத இன்பத்தைப் பருகி ருசி காணத் தொடங்குவர். தெவிட்டாத பேரின்ப நிலையை அடைந்தே தீருவர். யாருக்கும் எந்த உயிருக்கும் உய்வில்லை என்பது நம்முடைய

சமயக் கோள்கையல்ல. எல்லோரும் உய்யலாம், உய்யும் நேறியுண்டு என்பதே நம் முன்னேர் நமக்குச் சோல்லிச் சேன்ற சேய்தி. இதனைத் தாங்கி மக்களிடம் அளித்துவரும் தோண்டுதான் எங்களுடையது.

மக்கள் மனம் விரும்பிச் சான்றோரை நாடிச் சேன்று அவர் சந்தர்ப்பம் தேரிந்து அவர்கள் வாழ்க்கை முறையை உடனிருந்து தேரிந்து கைப்பிடித்து அவர்கள் நமக்குக் காலத்தில் வழங்கும் அமுத மோழிகளைக் கேட்டு உய்ந்த காலம் இப்போழுது மாறிவிட்டது. இயற்கையாகச் சமயப் பற்று இருந்தாலும் இப்போழுதுள்ள உலகச் சூழலில் அதற்காக வேற்றிடம் தேடிச்சேல்லச் சோம்பலடைகிறோம் நாம். ஆனுல் இருந்த இடத்தில் நமக்குக் கிடைப்பதாக இருந் தால் அதனை வரவேற்கவும் சேய்கிறோம். அந்தப் பணியைத் தான் ஞானசம்பந்தம் சேய்கிறது. சேன்ற ஆண்டு இருந்ததைவிட இப்போழுது இதற்கு ஆதரவு பேருகி வருவதைக் கண்டு நாங்கள் பேருமையும் கோள்கிறோம். இது மக்கள் சஞ்சிகை. ஆகவே அந்தப் பேருமை எங்க ளுடையது மாத்திரமல்ல. மக்களுடையதும்ஆம். அந்த ஆதரவு மேலும் மேலும் நம் தோண்டு சிறக்க ஊக்கு விக்கும் துணைக்கருவியாக இருக்கிறது. சேன்ற பல ஆண்டு களிலும் சமயம், மோழிப்பணிகளைச் சேய்து வருவதோடு சிறு கதைப் பகுதிகளையும் தாங்கி வந்திருக்கிறது. பேராசிரியப் பேருமக்களும், சமயச் சிறுவர்களும் இதில் ஆர்வத்தோடு கட்டுரை வழங்கி ஆதரவு சேய்திருக்கிறார்கள். பேராசிரியர் தேளிவுரைகளையும் எழுத்துப் பயிற்சித் தோடக்க உரைகளையும் மக்கள்பேற்று மகிழ்ந்து வாழ்த்திவருகிறார்கள் இப்போழுது பதினைந்தாவது ஆண்டு நிறைவுற்றுப் பதிருருவது வாலிப வயதை எட்டிப்பிடிக்கிற இந்த ஞானசம்பந்தமாகிய குழந்தை இதுவரை இருந்ததைவிட இன்னும் உயர்ந்த தோண்டுகளைச் சேய்ய இருக்கிறது. வாழ்க! வாழ்க!! வளர்க! வளர்க!! என்கிறது எங்கள் உள்ளம். சோக்கேசன் திருவருள் நமக்கு உறுதுணை நிற்கிறது. வாழ்க ஞானசம்பந்தம் வளர்க கற்போர் தோகை.

ஹிந்துக்கள் மத மாற்றத்தில் :: :: :: சென்னை கவர்னர் கவலை

சமுதாய அமைப்பின் குறைகளே காரணமென்கிறார்

தருமபுர ஆதீன சமயப்பிரசார நிலையத்தின்

3-ஆவது ஆண்டு விழா

"நமது மக்களில் பலர் தங்களது மதத்தை விட்டுப் பிற மதங்களில் சேருகின்றனர். இவ்விதம் மத மாற்றத்தைத் தடுக்க நாம் வழிகாண வேண்டும். நமது சமுதாய அமைப்பிலுள்ள சில குறைகள் அல்லது பலஹீனம் காரணமாகத்தான் இந்த மத மாற்றம் ஏற்படுகிறது" என்று சென்னை கவர்னர் ஸ்ரீ ஸ்ரீபிரகாசா நேற்று மாலை தெரிவித்தார்.

தியாகராயநகரிலுள்ள தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையத்தின் மூன்றாவது ஆண்டு நிறைவு விழா நேற்று நடைபெற்றது. விழாவிற்கு சென்னை கவர்னர் தலைமை வகித்தார்.

சங்கீத பூஷணம் ஸ்ரீ பி. சுவாமிநாத முதலியார் கடவுள் வணக்கம் பாடிய பிறகு ஸ்ரீ சோமசுந்தரத் தம்பிரான் கவர்னர் ஸ்ரீ ஸ்ரீபிரகாசாவுக்கு வரவேற்புரை வாசித்தளித்தார். 'இந் நிலையம் சென்னையிலும் சென்னையைச் சார்ந்த சிற்றூர்களிலும் மூன்றாண்டுகளாக சமயப் பிரசாரம் செய்து வருகிறது. தேவார வகுப்பும் இசை வகுப்பும் நடத்தி இளஞ்சிறார்கட்குத் தெய்வ பக்தியையும் கலையுணர்வையும் வளர்த்து வருகிறது. சமய, தத்துவ, இலக்கிய நூல்கள் நிறைந்துள்ள நூல் நிலையம் அமைத்துப் பொதுமக்கட்கு உதவி வருகிறது' என்று நிலையம் செய்துவரும் சேவையை ஸ்ரீ சோமசுந்தரத் தம்பிரான் விளக்கினார். பின்னர், அவர் தருமபுர ஆதீனம் 25-ஆவது மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அனுப்பியிருந்த ஆசிச் செய்தியையும் படித்தார். இரு மாணவிகளின் ஹிந்தி சம்பாஷணை பிறகு நடந்தது.

சமய வளர்ச்சி

ஸ்ரீ கே. பாலசுப்பிரமணிய அய்யர் அடுத்தபடியாகச் சில வார்த்தைகள் கூறினர். இந்தியாவில் தென்னிந்தியாவே அதிலும் குறிப்பாக சென்னேயே சமய அறிவுக்கு உரைவிடமாக இருப்பதையும், பக்தியையும் சமய அறிவையும் வளர்ப்பதில் மடங்கள் சிறந்த சேவை செய்து வருவதாயும், தருமபுர மடம் இந்த நிலேயத்தின் மூலம் சிறப்பான பணியாற்றி வருவதாயும் அவர் தெரிவித்தார். எல்லோரும் இன்புற்று வாழ வேண்டும் என்ற சிறந்த அடிப்படைத் தத்துவத்தைக் கொண்டுள்ள ஹிந்து மதம் சமுகத்தின் உயர்ந்த லட்சியங்களுக்கேற்றவாறு அமைந் திருப்பதாயும். ஹிந்து மதத்தைப் போற்றி வளர்ப்பது ஒவ்வொரு வருடைய கடமை என்றும், சகிப்புத்தன்மை என்ற பெரும் குணம் காரணமாக ஹிந்து மதம் பல எதிர்ப்புகளுக்கிடையேயும் தலேசிறந்து விளங்குவதாயும் அவர் கூறினர். சமய, மத சார்பற்ற நாடு இந்தியா என்று கூறுவதால் மதத்தில் அசிரத்தை என்ரு அல்லது நாஸ்திகத்தை வளர்ப்பது என்ரு பொருளல்ல என்றும், மத, சமய வளர்ச்சிக்கு இடமுண்டு என்றும் ஸ்ரீ பால சுப்பிரமணிய அய்யர் தெரிவித்தார்.

கவர்னர் பிரசங்கம்

கவர்னர் ஸ்ரீ ஸ்ரீபிரகாசா தமது தலேமை உரையில் இந்தியா வில் பல மதங்களும் ஒவ்வொரு மதத்திலும் பல பிரிவுகளும் இருந்து திகழ்ந்து வருவதால் சமய, மத சார்பற்ற நாடாக இருக்க வேண்டியிருப்பதாயும், ஆகையால் தனி முறையில் ஒவ்வொரு வரும் மதத்தைப் போற்றி வளர்ப்பது கடமையாகிறது என்றும், மதங்கள் பலவற்றிலும் ஹிந்து மதம் மிகச் சிறப்பானதாகையால் அது பற்றி நமது பொறுப்பு மிக அதிகமென்றும் தெரிவித்தார்.

சமயப் படிப்பை ஆதரிப்பவர்களுள் நான் ஒருவன். டாக்டர் அனிபெசன்ட் தோற்றுவித்த கல்வி நிலேயங்களில் நான் பயின்றவன். அங்கு சமயப் படிப்பு கட்டாய பாடமாக இருந்து வந்தது. ஆகையால் சமய அறிவின் அவசியத்தை நான் நன்கறிவேன். இன்றும் அதன் தேவையை உணர்கிறேன்; வற்புறுத்துகிறேன் என்றும் ஸ்ரீ ஸ்ரீபிரகாசா கூறினர்.

ஹிந்து மதத்திலிருந்து பலர் பிற மதத்தைத் தழுவி வருவதைக் கவர்னர் பிரஸ்தாபித்து அத்தகையதோரு நிலையைத் தடுப்பது அவசியமென்றும், ஹிந்து சமுதாயத்திலுள்ள சில குறைகளும் பலஹீனமும்தான் மத மாற்றத்திற்குக் காரணமாக இருக்குமென்றும், குறைபாடுகளை நீக்குவது அவசியமென்றும் வற்புறுத்தினர். வாழ்க்கையிலும் சமுதாயத்திலும் எளியவர்களாயுள்ளவர்களுக்காக கல்வி நிலையங்கள் நிறுவிப் பணியாற்றுவதில் சென்னை அலாதியான சிறப்படைந்திருப்பதாயும் ஆயினும் இன்னும் விரிவான பணியாற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டிருப்பதாயும், இதில் தருமபுரம் மடம் செய்துவரும் சேவை பாராட்டலுக்குரியதென்றும், அதுபற்றி இந்த விழாவில் கலந்து கோள்வது தமக்கு மகிழ்ச்சி அளிப்பதாயும் ஸ்ரீ ஸ்ரீபிரகாசா கூறினர். ஸ்ரீ சோமசுந்தரத் தம்பிரான் நன்றி கூறினர்.

—சுதேசமித்திரன் 27—10—56.

முருகக்கடவுள் துதி

உலகு குளிர எமது மதியில் ஒழுகும் அமுத கிரணமே
உருகும் அடியர் இதயம் நெகிழ உணர்வில் எழுநல் உதயமே
கலையும் நிறையும் அறிவும் முதிர முதிரு மதுர நறவமே
கழுவுதுகளர் முழுகநெடிய கருணைபெருகு சலதியே
அலகில் புவன முடியும் வெளியில் அளியுமொளியின் நிலையமே
அறிவுள் அறிவை அறியுமவரும் அறிய அரிய பிரமமே
மலையின்மகள் கண்மணியை அனைய மதலை வருக வருகவே
வளமை நழுவு பரிதிபுரியின் மருவு குமரன் வருகாவ

(குமரகுருபரசுவாமிகள்)

சென்னை, தருமபுர ஆதீன மடாலய தேவாலய
சமயப் பிரசார நிலய - 'வேளூர் தேவஸ்தான இறைபணி மன்றத்தின்'
மூன்ருவது ஆண்டு நிறைவு விழாவில்



சென்னை கவர்னர், கனம், ஸ்ரீ ஸ்ரீபிரகாசா அவர்களை
தருமபுர ஆதீனம்
வித்துவான், ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்
(சமயப் பிரசார நிலய விசாரணை) வரவேற்றல்.

சென்னை, தருமபுர ஆதீன மடாலய தேவாலய
சமயப் பிரசார நிலய - 'வேளூர் தேவஸ்தான இறைபணி மன்றத்தின்'
மூன்றுவது ஆண்டு நிறைவு விழாவில்



சென்னை கவர்னர், கனம், ஸ்ரீ ஸ்ரீபிரகாசா அவர்கட்கு,
தருமபுர ஆதீனம்
வித்துவான், ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்
வரவேற்பிதழ் வாசித்தளித்தல்.

முப்பொருள் விளக்கம்

வித்துவான், திரு. சி. அருணைவடிவேலு முதலியார் அவர்கள்,
தமிழாசிரியர், பச்சையப்பன் உயர்நிலைப்பள்ளி, காஞ்சிபுரம்.

(மலர் 15, இதழ் 11, பக்கம் 800 இன் தொடர்ச்சி)

"சார்பினிற் றோன்றும் எல்லாம்; தருபவன் இல்லை என்னின்
தேரின்இல் லதற்கோ தோற்றம்? உள்ளதற் கோ? நீ செப்பாய்.
ஓரின்இல் லதுவும் தோன்றாது; உள்ளதேல் உதிக்க வேண்டா;
சோர்விலா திரண்டு மின்றி நிற்பது தோன்று மன்றே."

"உள்ளதும் இலதும் இன்றி நின்றதோன் றுளதேல் உண்டாம்;
இல்லதேல் இல்லையாகும்; தோற்றமும் இசையா தாகும்;
உள்ளகா ரணத்தில் உண்டாங் காரியம் உதிக்கும்; மண்ணின்
இல்லதாம் படம்; கடாதி எழில்தரும் இயற்று வானால்."

என்பன சிவஞான சித்தித் திருமொழிகள்.

மாணுக்கன் :

இங்ஙனம் புத்தர் கூறுவனவெல்லாம் ஒவ்வாவாயினும், 'இல்லது தோன்றா தாகலானும், உள்ளதற்குத் தோன்ற வேண்டுவது இன்மையானும், உள்ளதும் இல்லதுமாய் நிற்கும் ஒரு பொருள் செய்வோனின்றித் தானே தோன்றும்' என ஆருகதர் கூறுவராகலின், அங்ஙனங் கொள்ள வமையாதோ?

ஆசிரியர் :

அமையாது; என்னையெனின், உண்மையும் இன்மையும் தம்முள் மறுதலையாகலின், அவ்விருதன்மையும் ஒருபொருட் கண்ணே ஒருங்குநிற்றல் கூடாதாகலின். ஆகவே, 'ஒரு பொருளே உள்ளதாயும் இல்லதாயும் நிற்கும்' என்றலும் பொருளில் கூற்றேயாமென்க.

மாணுக்கன் :

அற்றன்று; என்னையெனின், அவர், 'ஒருபொருளே உள்ள தாயும் இல்லதாயும் நிற்கும்' என்பதற்குக், 'காரணமாய் உண்டு

காரியமாய் இல்லை ' என்பதே கருத்தாகலின், அது பொருளில் கூற்றுமாறு இல்லையன்றோ ?

ஆசிரியர் :

அங்ஙனமாயின் அது நன்றேயாம். என்னையெனின், காரணமாய் நிற்பதும் காரியமாய் நிற்பதும் வேறு வேறு பொருளன்றி ஒரு பொருளேயாமாகலின், காரணம் உள்ளதாகவே காரியமும் உள்ளதாய், அது செய்வோனுற் செயற்படும் பொருளேயாய் முடியுமாகலின்,

" ஒருபொருள் ஒருவ னின்றி உளதில தாகு மேன்னின்,
தருபொருள் உண்டேல் இன்றுந் தன்மையின்று ; இன்றேல் உண்டாய்
வருதல் இன்று ; இலது காரியம் ; முதல்உள தாகும் என்னின்,
கருதுகா ரியமும் உண்டாய்த் தோற்றமும் கருத்தா வால்ஆம். "

என்பது சிவஞான சித்தி.

இதனுன், ' இல்லது தோன்றும் ' என்றலும், ' இல்லதும் உள்ளதும் அல்லாத பொருள் தோன்றும் ' என்றலும், ' இல்லதும் உள்ளதும் ஆகிய பொருள் தோன்றும் ' என்றலும் பொருந்தாவாயினமையின், ' உள்ளதே தோன்றும் ' எனப்பட்டுத், ' தோன்றுவன யாவை, அவையெல்லாம் அத் தோற்றத்திற்கு முன்பும் உள்ளனவேயாய்ச், செய்வோனுல் செயற்படும் ' என்பது முடிபாம் என்க.

மாணுக்கன் :

அற்றேல், ' இல்லது தோன்றுது ' என்பதுபற்றி, ' உள்ளதே தோன்றும் ' எனின், ' உள்ளதாயின் தோன்ற வேண்டுவது எற்றுக்கு ? ' என்னும் வினுவிற்கு விடை யாது ?

ஆசிரியர் :

நுண்ணிதாய் (சூக்குமமாய்) உளதாதலும், பரிதாய் (தூலமாய்) உளதாதலும் என உளதாதல் இருவகைத்து. அவற்றுள் நுண்ணிதாய் உளதாதலாகிய நிலையில் உள்ள ஒரு பொருள்,

அந்நிலையினின்றும் நீங்கிப் பரிதாய் உளதாம் நிலையை அடைதற்பொருட்டுத் தோன்றல் வேண்டும் என்க.

சற்காரிய முறை

இங்ஙனமாகவே, ‘தோன்றும் பொருள் அத் தோற்றத்திற்கு முன்பும் உள்ளதேயாம்’ என்பதற்குப் பொருள், ‘நுண்ணிதாய்க் காணப்படாத நிலையில் உள்ளது’ என்பதேயன்றிப் ‘பரிதாய்க் காணப்படும் நிலையில் உள்ளது’ என்பதன்று. ஆகவே, ‘தோன்றும் பொருள் தோற்றத்திற்கு முன்பும் உளதாயின், காணப்படல் வேண்டும்’ எனத் தடைநிகழ்த்தலும் பொருந்தா தாயிற்று. இன்னும், ‘மண்ணிற் குடம் தோன்றுதற்கு முன்னும் அதன்கண் குடம் உளதாயின், வனைதலாகிய முயற்சிக்குப் பயன் என்னை என்னும் தடைக்கு, ‘நுண்ணிதாய் நின்றது பரிதாய் வெளிப்படுதலே பயன்’ என்னும் விடையும் இதனானே பெறப் பட்டது. இவ்வாறாகவே, ‘தோன்றுதல்’ என்பதற்குப் பொருள், ‘கட்புலனாகாது நின்றது அந்நிலையினின்றும் நீங்கிக் கட்புலனாம் நிலையை அடைதல்’ என்பதேயன்றி, ‘முன்பு இல்லதாய்ப் பின்பு உளதாதல்’ என்பதன்று என்பது போந்தது.

இனி, இல்லது தோன்றாமை போலவே, உள்ளது கெடுதலும் இன்று. அதனான், ‘அழிதல்’ என்பதற்குப் பொருள், ‘கட்புலனாம் நிலையின் நின்றது அந்நிலையினின்றும் நீங்கிக் கட்புல னாகாத நிலையை அடைதல்’ என்பதேயன்றி, ‘முழுவதூஉங் கெட்டொழிதல்’ என்பதன்றாயிற்று. இது பற்றியே இறுதி எய்துதலை மெய்கண்ட நூல்கள் பெரும்பாலும் ‘ஒடுங்குதல்’ என்றே கூறும்.

‘இல்லது தோன்றாது; உள்ளது அழியாது’ என்பது பெரியதோர் உண்மை. குடம் தோன்றிற்றெனின், அது முன்பு மண்ணின் உளதாய் நின்று தோன்றிற்றே யன்றி, யாண்டும், இல்லதாய் இருந்து பின்பு தோன்றிற்றன்று. அங்ஙனமே குடம் அழிந்ததெனின், அது மீண்டும் முன்னை நிலையை அடைந்ததன்றி, யாண்டும் இல்லா தொழிந்த தன்று. இங்ஙனமே தோன்றும் பொருள்களெல்லாம் முன்பே உள்ளனவாய் வெளிப்படுதலும், அவை அழியுங்கால் நுண்ணியவாய் மறைந்து போதலும் உடையனவன்றி, இல்லனவாய்த் தோன்றுதலும், இல்லனவாய்

ஒழிவனவும் அல்ல என்க. ‘இஃது எது போலும்’ எனின், நீர் வேண்டி நிலத்தை அகழ்ந்தக்கால் நீர் வெளிப்படுதல், அஃது அதற்கு முன்பே ஆண்டு உளதாய் வெளிப்படுதலும், தூர்த்த வழி அந்நீர் ஆண்டுக் கரந்து நின்றது போலும் என்க.

இல்லது தோன்ருது, உள்ளதே தோன்றுதல் பற்றித், ‘தோற்றம் எய்தும் பொருள்கள் எல்லாம் அவ்வாறு தோன்று தற்கு முன் தத்தம் முதனிலைப் பொருள்களில் உள்ளன’ என்றல் ‘சற்காரிய முறை’ எனப்படும். இச் சற்காரிய முறையே, “ஒருவனே டொருத்தி” என்னும் சிவஞான சித்திச் செய்யுளில், “வருமுறை வந்து நின்று போவது” என்புழி, “வருமுறை” எனக் குறிக்கப்பட்ட தென்க.

இச் சற்காரிய முறையால், ‘குடம், ஆடை முதலிய செயற் கைப் பொருள்களாகிய காரியங்கள், தாம் தோன்றுவதற்கு முன்னும் மண், நூல் முதலிய இயற்கைப் பொருள்களாகிய தத்தங் காரணங்களில் நுண்ணியவாய் உள்ளன’ எனக் கோள்ளப்படும். அங்ஙனம் கோள்ளாக்கால், நெல்லினின்றும் கமுகு தோன்ருது நெல்லே தோன்றுதலும், மண்ணின் ஆடை யும், நூலிற் குடமும் தோன்ருது மண்ணிற் குடமும், நூலின் ஆடையுமே தோன்றுதலும், ஆவின் சென்னியினன்றி முயலின் சென்னியிற் கோடு தோன்ருமையும், எள்ளினன்றி மணலிற் கசிவு தோன்ருமையும், மற்றும் இவைபோல்வனவாகிய கட்டளைக்கு ஒரு காரணங் கூறுதல் இயலாது. இச் சற்காரிய முறை இல்லையேனின், உலகம் மேற்காட்டிய கட்டளையின் நில்லாது வேண்டியவாறே செல்லும் என்க.

சற்காரிய முறை உளதாகவே, முளை தோன்றுதலும், முன்பு வித்தின்கண் உளதாய் நின்று தோன்றுவதன்றி, முன்பு இல்லாத தாய்ப் பின் தோன்றுவதன்ரும். ஆகவே, வித்தின் முளை தோன்று தலும் ஒன்று கெட மற்ருென்று தோன்றுதலாகாது. முன்பு உள்ளது தோன்றுதலேயாம். அதனுன், தோன்றுவன யாவை, அவை யெல்லாம் முன்பு உள்ளனவாய்ச் செயற்படுவனவே யன்றி வேறன்மையான், அவற்றுள் ஒன்றேனும் செய்வோனை யின்றி அமையா தென்க.

கலித்தொகையிற் சில திருத்தங்கள்

பண்டித-வித்துவான், திரு. மு. அருணாசலம் பிள்ளை அவர்கள்
தமிழ் விரிவுரையாளர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்,

இனி, இப்பாட்டின் உரைமுடிவில், "இது கோச்சக வெண்பாவும் தனிச்சொல்லும் ஐஞ்சீரடுக்கிய கோச்சக வெண்பாவும் ஐஞ்சீரடுக்கிய குறு வெண்பாட்டும் சொற்சீரடியும்...........சுரிதகமும் பெற்ற கோச்சகக்கலி" என இப்பாட்டின் இலக்கண அமைதி கூறுமிடத்தில், சொற்சீரடியும் எனப் புதிதாக நுழைத்திருப்பதும் வேண்டாதது இது, மிகையாக இணைக்கப்பட்ட 'இஃதோன்று கூறு' என்பதனையும் பாட்டின் இலக்கண அமைதியுடன் சேர்த்தற்குப் புதிதாகப் புகுத்தப்பட்டதாகலின் இதுவும் விலக்கத்தக்கதேயாம்.

இனி, "இஃதோன்று கூறு" என்னுஞ் சொல்லை என்பவோ என்பதன் பின்னே கூட்டிப்பொருள் கூறுக" என்று எழுதப்பட்டுள்ள விளக்கவுரை முதற் கோச்சக வெண்பாவின் உரைக்குக் கீழ் இருப்பது பொருத்தமாகும். ஆங்குப் பதிப்பிக்கப் பட்டிருப்பின் இத்தவறுகள் நேர்ந்திருக்கமாட்டா.

8. "நின்னை நோதக்கதோ இல்லைமன்" (பா. 7. அ. 22)

என்பதற்குத் 'தாய் மிகவும் நோவத்தக்கதோரு காரியம் இல்லைகாண்' என்ற உரையிருத்தலால் இப்பாடம் 'அன்னைநோதக்கதோ இல்லை மன்' என்றிருக்கவேண்டும்.

9. "மண்ணிமா சற்றநின் கூழையுள் ஏறவன்
கண்ணிதந் திட்ட தேனக்கேட்டு" (பா. 7. அ. 30, 31)

என்ற அடிகளுக்கு, "கழுவி அழுக்கற்ற நின்னுடைய மயிரிடத்தே ஏற அவன் கண்ணியைத் தந்ததென்று பிறர் சொல்லக் கேட்டு" என்றே எல்லாப்பதிப்புக்களிலும் உரை காணப்படுகின்றது.

இங்ஙனம் உள்ளவாறே கொள்ளின் தந்ததாகிய வினை முதல் இன்னதெனத் தோன்றவில்லை. "நின் கூழையுள் ஏறு அவன் கண்ணி தந்திட்டது" என்று மூலபாடத்தில் வினை முதல் தெளிவாகக் குறிக்கப்பட்டிருத்தலால் அதற்கேற்ப உரையில் 'ஏற' என்றிருப்பதை ஏறு எனத் திருத்துதல் வேண்டும்.

முல்லைக்கலி 8ஆம் பாட்டில்,

10. ஆயர் எமரானால் ஆய்த்தியேம் யாம்மிக" (அடி. 9)

என்பதற்கு "எஞ்சுற்றத்தார் ஆயரானால் யாங்கள் மிகவும் ஆய்த்தியரேம்" என்று பொருள்கூறி' 'ஆய்த்தியேம் யாமாயின் என்றும் பாடம்' என நச்சினார்க்கினியர் வேறுபாடமுங் காட்டி யுள்ளார். இப்பாட பேதத்தில் 'மிக' என்னும் சொல் நின்ற விடத்து 'ஆயின்' என்னுஞ் சொல் அமைந்திருத்தலே வேறு பாடு; பிறிதில்லை. இச்சிறு மாற்றத்தை அறிவிக்கும் அளவிற்கே வேறு பாடங் காட்டப்பட்டதாகக் கொண்டு அமையினும் அமையலாம். அன்றி, இவர் உரையெழுதி யிருப்பதற்கேற்ப 'ஆய்த்தியரேம்' என்பது இவர் கொண்ட பாடம் எனவும், அச்சொல்லும் மாறியுள்ளது என்பதை அறிவித் தற்காகவும் "ஆய்த்தியேம்யாமாயின்" என்ற தொடர்மொழி வேறுபாடமாக எடுத்துக் காட்டப்பட்டது எனவுங் கொள்ளுதலில் இழுக்கில்லை. அங்ஙனம் கொண்டால் "ஆயர் எமரானால் ஆய்த்தியேம் யாமாயின்" என்பது வேறுபாடம் எனக் கருதலாம்.

11. "முல்லை முகையும் முருந்தும் நிரைத்தன்ன
பல்லும் பணைத்தோளும் பேரமருண்கண்ணும்
நல்லேன் யான்" (மு. பா. 8. அ. 15—17)

என்னும் இதன்கண், பல்லும் தோளும் கண்ணும் நல்லேன் என்று கூறப்பட்டிருத்தலால் 'பல் முதலியன சினை வினை முதலோடு முடிந்தது' என இலக்கணக்குறிப்புக் காட்டவேண்டிய தாயிற்று.

ஈண்டு உரையில் "பல்முதலியன" என்றிருக்கற்பாலது. 'முல்லை முதலியன' என்று கழகப்பதிப்பில் இருப்பது தவறாகும்.

12. "புனத்துளான் எந்தைக்குப் புகாவுய்த்துக் கொடுப்பதோ
இனத்துளான் என்னைக்குக் கலத்தொடு செல்வதோ"

(பா. 8, அ. 31-32)

என்ற பகுதிக்கு, "புனத்திடத்தானாகிய என் தமையனுக்கு உணவைக் கொண்டுசென்று கொடுக்குமதொன்றோ? பசுத் திரளிடத்தானாகிய என் தந்தைக்குக் கறவைக் கலங்கொண்டு செல்லுமதொன்றோ," என உரை காணப்படுகின்றது.

இதன்கண் எந்தை, என்னை என்னுஞ் சொற்களுக்கு முறையே என்தந்தை என்தமையன் என்று பொருள் கூறுதலே மரபு. இவ்வுரையில் அம்மரபு மாறியுள்ளது. இவ்வாறு மாற்றியுங் கூறலாமென ஆசிரியர் நல்லுருத்திரனாரே செய்யுள் யாத்தனரா? அல்லது யாதேனும் பொருள் நயங்கருதி நச்சினார்க் கினியர் மாற்றிக்கொண்டாரா? அன்றி, ஏடெழுதினோரால் நேர்ந்த பிழையா? என்பது சிந்திக்கத்தக்கது.

" தந்தையொடு ஐயன்மார் எல்லாம் ஒருங்கு "

(முல்-7-அ. 33-34)

" எந்தையும் யாயும் அறிய உரைத்தீயின் "

(முல்-11, அ. 22-23)

என்ற மூலபாடங்களையும், இவற்றின் உரைகளையும் நோக்கினால் நல்லுருத்திரனாரும் நச்சினார்க்கினியரும் பழைய முறைமை பிறழக் கூறினர் எனக் கொள்ளற்கு இடமில்லை. இனி, யாதேனும் பொருள்நயங்கருதி ஈண்டு நச்சினார்க்கினியர் மாற்றினராயின் அதனை விளங்க உரைத்திருப்பர். மேலும், ஆண்டில் முதிர்ச்சியுற்ற தந்தை ஓரிடத்திலிருந்து புனங்காத் தலையும் அவனின் இளையனான தன் தமையன் ஆனிரைமேய்த்து அலைந்து வருதலையும் மேற்கொண்டிருப்பதாக அவ்வாயர்மகள் கூறியதே அவரவர் பருவத்திற்கேற்ற செயலுமாகும். ஆதலால் இஃது ஏடெழுதினோரால் நேர்ந்த பிழையெனக் கருதி மரபு பிறழாதவாறு மாற்றிக்கொள்ளுதலே சிறந்த தாகும்.

13. "மாமருண் டன்ன மழைக்கட்சிற் றுய்த்தியர்
... ...
காமுற்றுச் செல்வாயோர் கட்குத்திக் கள்வனை ... ...
யாமேவன் செய்தும் நினக்கு"

(மு. 8, 46—51)

இப்பகுதிக்கு உரை கூறியபின், விளக்கம் எழுதுமிடத்து, "கட்குத்திக் கள்வன் என்றது, விழித்திருக்க மிண்டையைக் கோள்வான் என்னும் பழமோழி. ஓ அசை" என்று காணப் படுகிறது. இப்பகுதியில் ஓ காரம் வரவேயில்லை. வாராத தோன்றுக்கு இலக்கணக் குறிப்புக் காட்டுதல் வேண்டா. ஆயின், 'ஓ' அசை என்பது எவ்வாறு வந்ததேனின்.

'ஓர் கட்குத்திக் கள்வனை' என்ற மூலபாடத்திற்கு ஒரு கட்குத்தியாகிய கள்வன்' என்றே போருள் எழுதியிருத்தலால், அதன்கண் எஞ்சியுள்ள 'ஐ அசை' என்று குறித்திருக்கக்கூடும். அதுவே 'ஓ, அசை' என்று தவருக எழுதப்பட்டிருக்கலாம் என எண்ணுகிறேன்.

14. "ஆம்பற் குழலாற் பயிர் பயிர் எம்படப்பைக்
காஞ்சிக்கீழ்ச் செய்தே(ங் குறி" (மு. 8, 62—63)

என்பதற்கு, எம்முடைய புழைக்கடையில் காஞ்சி மரத்தின் கீழே குறியிடஞ் செய்தேம். ஆண்டு வருங்கால்................ நீசெய்யுங் குறியை ஆம்பலேன்னும் பண்ணையுடைய குழலாலே குறிசெய்து வருவாயாக என்ருள்" என்று உரையுள்ளது.

இதன்கண் ஆண்டு வருங்கால், நீ செய்யுங் குறியை, வருவாயாக—என்பன வருவித்துரைக்கப்பட்டன. 'பயிர் பயிர்' என்பதைத் தவிரப் பிறவற்றிற்கு நேரான உரை காணப்படு கின்றது. 'பயிர்தல்' என்பதற்கு அழைத்தல் என்பது போருள். அது தலைவன் குறியிடத்து வந்து நின்று புள்ளோலி யேழுப்பல் நீரிற் கல்வீழ்த்தல் முதலியவற்றுள் ஒன்ருல், தன் வரவை யறிவித்துத் தலைமகளை ஆண்டு வருமாறு அழைத்தலாகும். அஃது அகப்போருளில் குறிசெய்தல் என்று கூறப்படும்.

ஈண்டுப் 'பயிர் பயிர்' என்பது, 'உண்ணலும் உண்ணேன்' என்புழி உண்ணேன் என்பது முழுதுங் காரிய வாசகமாய் நிற்ப அத்தோடர் உண்ணுதலும் செய்யேன் எனப் போருள் தந்தாற் போலக் 'குறிசெய்' என்றுதான் போருள் தரும். இங்கு இதற்குக் 'குறிசெய்து' என்று போருள் கூறப்பட்டுள்ளது

தோல் - போருள் - களவியலில் 'மறைந்தவற் காண்டல்' என்னுஞ் சூத்திரவுரையில் இளம்பூரணர் எடுத்துக்காட்டிய இப் பகுதியில் 'பயிர் பயிர்த்து' என்ற பாடம் உள்ளது. அப்பாடமும்

இங்கு நச்சினார்க்கினியர் கூறும் உரையும் பொருத்தமாயிருத்தலால் 'பயிர் பயிர்' எனக் கலித்தொகைப் பதிப்புக்களிற் காணப்படும் மூலபாடம் 'பயிர் பயிர்த்து' என்றிருக்கலாம்.

காஞ்சிக் கீழ்க் குறிசெய்தேம். நீ ஆண்டுவருங்கால் ஆம்பற்குழலால் குறிசெய்வாயாக என்றில்லாமல், ஆம்பற்குழலாற் குறிசெய்து வருவாயாக என்று உரையிருக்கிறது.

தலைவன் இரவுக் குறிக்கண் வந்து ஏகுங்கால், ஆற்றின் கண் ஏதமின்றி ஊர் சேர்ந்தாயென்பதை யாங்கள் அறிந்து கொள்ளுதற் பொருட்டு நின் ஊர் சேர்ந்தபின் நின்கோடு குறித்திடுக என்று தோழி, தலைவியின் வருத்தந் தோன்றுமாறு தலைவனிடங் கூறுதல் உண்டு. அவ்வாறே, தலைவன் தன்னிடத்திலிருந்து புறப்படும் பொழுதே குறிசெய்து தன் வரவை அறிவித்துவிட்டுப் பின்பு குறியிடத்து வந்து நிற்குமாறு தோழி கூறுதலும் உண்டு எனக் கொள்வோமாயின், 'ஆண்டு வருங்கால் ஆம்பற்குழலாற் குறிசெய்து வருவாயாக' என்றிருக்கும் உரை பொருந்தும். இங்ஙனம் கூறுதலும் செய்தலும் இல்லையேனின் 'ஆண்டு வருங்கால் ஆம்பற்குழலாற் குறிசெய்வாயாக' என உரை யிருத்தல் வேண்டும். அப்போது 'ஆம்பற்குழலாற் பயிர் பயிர்' என்றே மூலபாடம் இருக்கலாம். 'குறிசெய்து வருவாயாக' என்று இப்போதுள்ளபடியே உரையிருக்கவேண்டுமாயின் ஆம்பற்குழலாற் பயிர் பயிர்த்து' என்று மூலபாடம் இருக்கவேண்டும்.

இவற்றுள் யாதேனும் ஒன்று பற்றி மூலமும் உரையும் தம்முள் மாறுபடாதிருக்குமாறு செய்தல் நல்லது. ஈண்டுள்ள உரைக்கும் இளம் பூரணர் கொண்ட பாடத்திற்கும் ஏற்ப, பயிர் பயிர்த்து' என மூல பாடத்தைத் திருத்துதல் எளிது.

15. முல்லைக்கலி 9ஆம் பாட்டில் 'இவள்தான்' என்னுந் தொடர் இருமுறை வந்துள்ளது. ஒன்று 13ஆம் அடியில் இவள்தான் திருந்தாச் சுமட்டினள்'; என்புழியுள்ளது. இதற்கு அவ்விடத்திற் பொருள் கூறப்பட்டிருக்கிறது. மற்றொன்று, 21ஆம் அடியில் 'இவள்தான், வருந்த நோய்செய்திறப்பினல்லால் மருந்தல்லள்' என்பது. இதற்கும் "இவள் தான் மனம் வருந்தும்படி நோயைச் செய்து போவதன்றி அந்நோய் தீர்க்கும் மருந்தல்லள்" என உரைகூறப்பட்டுள்ளது.

இவையன்றி 21ஆம் அடியாகத் தனியே குறிப்பிட்டு 'இவள்தான், என்பது மூலமாகவும், இவள்தானேன்று நேஞ் சோடு வினுயினுன்' என்பது அதற்குப் போருளாகவுங் கருது மாறு அச்சுப் புத்தகங்களிற் காணப்படுகின்றன.

'இவள்தான்' என மூன்ருவதோரு தோடர் சேய்யுளில் இல்லே. இருந்து விடுபட்டதாகக் கோள்ளலாமேனின் அதற்குக் கூறப்பட்டுள்ள உரை போருத்தமாக இல்லே. ஆகவே இம் மூலம், உரை ஆகிய இரண்டையும் கோள்ளுவதா தள்ளுவதா என்பது சிந்திக்க வேண்டியதாகும்.

மேலே இப்பாட்டின் 7ஆம் அடியில் மோரோடுவந்தாள் தகைகண்ட என்பதற்கு 'மோரோடுவந்தாள் அழகை நேஞ்சே நீ காண்பாயாக' என்று உரைசேய்த நச்சினுர்க் கினியர் 13ஆம் அடிமுதல் 20ஆம் அடிவரையிற் போருள் கூறியபின் எழுதிய விளக்கவுரையின் இறுதியில் 'கண்டீர் வினுவோடு சிவணிநின்ற அசை, இவள்தான் என்று நேஞ்சோடு வினுயினுன்' எனக் குறித்திருப்பதாகத் தேரிகிறது. 'இவள் தான்' (அடி13) என்று தலைவன் யாரிடம் சுட்டி வினுவினுன் என்ற வினுவிற்கு இது விடையாகும். பாங்கன் முதலான யாரிடத்தும் வினவவில்லே. தன்னேஞ்சோடு வினுயினுன் என்பது அவர் கருத்து.

'இவள்தான் என்று நேஞ்சோடு வினுயினுன் என்ற' விளக்க வுரை 13ஆம் அடிமுதல் 16ஆம் அடிவரையிலுள்ள கோச்சக வேண்பாவிற்கு எழுதிய உரையின் கீழ்க் குறிக்கப்படாமல் 20ஆம் அடிக்குப் பின் எழுதிய விளக்க வுரையுடன் சேர்த்து எழுதப்பட்டமையாலும், அடுத்த அடி 'இவள்தான்' என்று தோடங்குவதாலும், இதற்கு, பின்பு உரை யேழுதப்பட்டிருத்தலே நோக்காமலே இவள்தான் என்பது மூலமாகவும், இவள்தா னேன்று நேஞ்சோடு வினுயினுன் என்பது அதற்குப் போரு ளாகவும் கருதும்படி தனியே பிரித்துப் பதிப்பிக்கப்பட்டு விட்டன.

இவற்றுள் 'இவள்தான்' என்பதை விலக்கிவிட்டு 'இவள் தானேன்று நேஞ்சோடு வினுயினுன்' என்ற தோடரை இதற்கு முன்னுள்ள விளக்கவுரையுடன் சேர்க்கலாம்,

16. முல்லைக்கலி 14ஆம் பாட்டில்,

"அனைத்தாகச்,
சொல்லிய சொல்லும் வியங்கொளக் கூறு" (அடி 10-11)

என்ற பகுதிக்கு, "இவ்வதுவை தனக்கு உரித்தாக முயலும் படி நீ சொல்லிய சொற்றானும் முன்பு வரைவு கடாயவுஞ் சொல்லாத அவன் நினையாமல் நின் ஏவலை அவன் மனங்காரிய மென்றே கொள்ளும்படி கூறுவாயாக என்றாள்" என்று உரை காணப்படுகிறது. இதன்கண் 'வரைவு கடாயவுஞ் சொல்லாத' என்றிருப்பது பொருத்தமாகத் தோன்றவில்லை.

முன்பு, வரைவு கடாதற் பொருட்டு, ஆற்றது தீமை, காப்பின் கடுமை, நொதுமலர் வரைவு முதலாகத் தோழி கூறிய வற்றைப் பொய்யாகக் கருதித் தலைவன் வரைய முயன்றிலன் என்பதைத் தலைவி அறிந்தவளாதலின், இப்பொழுதும் அங்ஙனம் கருதாமல் உண்மையென்றே கருதுமாறு கூறு என்பாள், 'முன்பு வரைவு கடாய நின்சொல்லாக அவன் நினையாமல் நின் ஏவலை அவன் மனங் காரியமென்றே கொள்ளும்படி கூறுவாயாக" என்றாளாதலின், 'வரைவுகடாயவுஞ் சொல்லாத' என்றிருப்பது 'வரைவு கடாய நின்சொல்லாக, என்றிருப்பின் பொருந்தும்.

17. முல்லைக்கலி 15ஆம் பாட்டில்,

"அன்னையும் அத்தனும் இல்லரா யாய்நாண
அன்னைமுன் வீழ்ந்தன்றப் பூ" (அடி 8-9)

இவ்வடிகளுக்கு "அப்பூ...... நற்றாயும் தந்தை முதலி யோரும் இல்லிடத்தே யிராநிற்க நற்றாயுங் கேட்டு நாணும்படி யாகச் செவிலிமுன்னே வீழ்ந்தது" என்று உரை காணப் படுகிறது. இதில் 'அன்னையும் அத்தனும்' என்ற மூலத்திற்கு 'நற்றாயும் தந்தையும்' என்று சேர்த்திருப்பது வேண்டாதது. என்று இருக்கவேண்டுமேயன்றி 'நற்றாயுங் கேட்டுநாண, மேலும், 'யாய் நாண' என்பதற்கு 'நற்றாயுங் கேட்டு நாண' என்று அச்சுப்புத்தகங்களிற் காணப்படும் உரை பிழையாகும்.

18. "நெருப்புக்கை தொட்டவர் போல விதிர்த்திட்டு"
(மு. 15. அ. 11)

என்ற அடிக்கு ''நெருப்பைக் கையாலே தீண்டினவர்கள் அக்கையைப் பிதிர்க்குமாறுபோலக் கையைப் பிதிர்த்து'' என்று உரையுள்ளது. விதிர்த்தல், பிதிர்த்தல் என்ற சொற்களுக்குப் பொருள் வேறுபாடு உண்டு. விதிர்த்தல் என்பது ஈண்டு (விரைந்து) உதறுதல் என்ற பொருள் தருவது. அதற்குப் பிதிர்த்தல் என்று பொருள் கூறுதல் பொருந்தாது. ஆதலால், அக் கையை 'விதிர்க்குமாறுபோலக் கையை விதிர்த்து' என்று உரையிருப்பதே சிறப்பாகும்.

19. ''ஈங்கேவன் அஞ்சுவது'' (மு. 15, அ. 16) என்புழி,

'ஈங்கு' என்பதற்கு 'அவ்விடத்தே' என்று உரையிருப்பது 'இவ்விடத்தே' என்றிருக்கவேண்டும்.

'' ஞானசம்பந்தம் ''

அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் வெளியீடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திலிருந்து வெளிவருவது. சமயப்பொருள் முதலியவை குறித்த தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவசமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந்துணையானது. சந்தாத் தொகையைக் கீழ்க் கண்ட முகவரிக்கே அனுப்பிவைக்கவும்.

ஆண்டுக் கையொப்பம்

உள்நாடு	... ...	1—8—0
வெளிநாடு	... ...	2—0—0

செயலாளர்,
'' ஞானசம்பந்தம் '' காரியாலயம்
தருமபுரம், மாயூரம் P. O.

அடியவர் அநுபவம்

திரு. தா. ஐ. ஏசுதாஸ். எம். ஏ., எம். எல். ஐஎச். அவர்கள்,
மெய்ப்பொருளியல் விரிவுரையாளர், அண்ணுமலைப் பல்கலைக்கழகம்,
அண்ணுமலைநகர்.

(மலர் 15, இதழ் 11, பக்கம் 817 இன் தொடர்ச்சி)

ஆன்மாவின் கேவல அவத்தையை மேல் நாட்டு அடியவர்களும் ஆசிரியர்களும் துன்புறு நிலை (Via Purgativa) இருட்டறை அநுபவம் (Dark chamber experience) என்று கூறுவர். இந்த நிலையின் அகோரத்தன்மை இயேசு பெருமான் சிலுவையிலே மனிதராலும் பரம தந்தையாலும் கைவிடப்பட்டுப் பரிதவித்த நிலைமையாலும். அதற்குச் சில நாட்களுக்கு முன் கெத்செமெனே என்ற தோட்டத்தில் ஆன்ம வேதனைபட்ட சிலமணி நேர அவதியாலும் ஒருவாறு அறியப்படும். மேலும், இயேசுநாதர் கிறிஸ்தவக் கொள்கைப்படி மெய்யான மனிதனும் மெய்யான தேவனுமாவார். அவர் அநுபவித்த கேவல அவத்தை ஒன்றே அவரது மானுடத் தன்மையைக் காட்டுகின்றது எனலாம்.

அகப்பொருள் துறையில் கேவல அவத்தை தலைவி தலைவனைக் காணுது உள்ளமும் உடலும் வாடி இருக்கும் பாலைத் திணை போன்றது.

இனி, சகலாவத்தை. இந்நிலையில் ஆன்மா ஆண்டவன் அருளால் கலை முதலிய மாயையினின்று தோன்றும் தத்துவங்கள் தொடர்புள்ளதாகின்றது. எனவே, அவற்றின் உதவியால் அஞ்ஞானத்தோடு எதிர்த்து நின்று சிறிது விளக்கம் பெறுகிறது. நாம் முற்கூறிய யுத்த பரிபாஷையின்படி புறத்தே சுற்றி முடப்பெற்ற விளக்குகள் மிளிரும் (Brown-out) பட்டினம்போல் ஆன்மா இப்பொழுது இருக்கின்றது. முன்னிலையைவிட இந்நிலை உயர்ந்ததெனினும் சிறந்த நிலையாகாது. இச் சகலாவத்தை அந்நிய ஆதிக்கத்தினின்று விழிப்புற்ற, ஆனுல் விடுதலை அடையாத இந்தியாவின் நிலைபோன்றது.

உடம்போடு சேர்ந்த ஆன்மா அநுபவிக்கும் சகலாவத்தை ஆணவம் நீங்காத் தன்மையால் அறியாமை, தன்னயம், இச்சை,

வேறுப்பு, ஒன்றை வேறொன்றாய்ப் பாவிக்கும் தன்மை ஆகிய பஞ்சக் கிலேசங்களைக் கொடுப்பதாக உளது.

சகல அவத்தைப்படும் உயிர் பெறும் விளக்கம் பாசஞானம் எனப்பெறும். ஏனெனில் மாயா பாசத்தினின்று தோன்றும் கருவி கரணங்களை அதிட்டித்துக்கொண்டு மட்டுமே அது அறிவைப் பெறுகின்றது. தன்னைப்பற்றியும், தன் தலைவனாகிய கடவுளைப் பற்றியும் விளக்கம் பெறமுடியாது இருக்கிறது. இவ்வாறு பசு ஞானம், பதிஞானம் கை வரப்பெறாத உயிர் பாசஞானம் பெற்று உலக அறிவைப் பெறுவது ஒரு சிறிய அகல் விளக்கால் புற இருள் சற்று நீக்கப்படுவது போன்ற நிலையில் இருக்கின்றது. தண்ணீரில் மூழ்கி உயிரை இழக்கவிருக்கும் ஒருவன் ஒரு சிறு பற்றுக்கோடு பெற்று பெருமகிழ்வுறுவது போன்று இருக்கிறது. முன் நிலையாகிய கேவலத்தைவிட பின் நிலையான சகலம் மேலென மதித்து மகிழ்வுறுகிறது ஆன்மா.

மேல்நாட்டு அடியாரும் அறிஞரும் சகலாவத்தையைச் சிந்தனை நிலை (Via contemplativa) என்று குறிக்கின்றனர்.

சகலத்தில் ஆணவத்திற்கும் மாயைக்கும் போட்டா போட்டி நடக்கிறது என்றும் கூறலாம். ஆணவம் மறைப்பைச் செய்கிறது. மாயை விளக்கத்தைத் தருகின்றது. இந்த அநுபவம் மாறி மாறி அல்லது ஒருங்கே ஏற்படுகின்றது. இதனை ஈரெட்டான சமய அநுபவம் (Ambivalence i. e. Having either or both of two contrary values or qualities) எனக் கூறலாம்.

அடியவர் அநுபவத்தில் ஏற்படும் ஈரெட்டான அநுபவம் சகலத்தில் மட்டுமன்றிக் கடவுளைக் கண்டு அநுபவித்த பின்னான காலத்தும் ஏற்படக்கூடும். அடியவர்கள் வரலாற்றில் ஒரு சமயம் கடவுள் ருசியும் மற்றொரு சமயம் உலக ருசியும் மாறி மாறி வருவதைக் காண்கிறோம். சிவனைச் சிக்கெனப் பிடித்தேன், கடவுளைக் கண்டு கொண்டேன் என்று குதூகலிக்கும் அவர்கள், செய்வதொன்றறியேன், மாயத்தால் மயங்குகின்றேன் என்றும் கூறுகிறார்கள். விவிலியத்தின் பிற்பகுதியில் காணப்படும் கடிதங்களை எழுதிய தூயபவுல், சின்னப்பர் என்று அழைக்கப் பெறும் அடியாரும் ஈரெட்டான கடவுள்—உலக அநுபவத்தை அநுபவித்ததாகக் காண்கிறோம். அகப்பொருள் துறையில்

கடவுள் தொடர்பு தலைவியோடு நிகழும் கூட்டத்திற்கும், உலகப் பற்று, பரத்தையர் தொடர்புக்கும் ஒப்பாம்.

சகலநிலை அடியவர் அநுபவத்தில் இருவகையில் இடைநிலை யாகும். கேவலத்திற்கும் சுத்தத்திற்கும் இடையில் நிகழும் நிலையாக இருப்பதாலும், நிரந்தரமான மாறுதநிலை அன்ருதலா லும் இங்ஙனம் கூறலாம். அடியவர் அநுபவத்தில் அடியும் முடியும் அல்லாத மத்தியநிலை சகலநிலை.

இனி, சுத்த அவத்தை. இது பதியும் பசுவும் கலந்துள்ள நிலை. ஆன்மாவும் ஆண்டவனும் அத்துவிதமாக இருக்கும் நிலை. இந்த இரண்டற்ற நிலை சைவசித்தாந்த, கிறிஸ்தவ சித்தாந்த முறையில் கலப்பினுல் ஒன்ருயும், பொருள் தன்மை யால் வேருயும், தொழிற்பாட்டால் உடனுமாயும் இருக்கும் நிலை.

சுத்தாவத்தையில் ஆணவம் தன்சக்தியை இழந்து ஒடுங்கி நிற்கிறது. மாயாகரணங்கள், பசுகரணங்கள், சத்தியின் பேரரு ளால் பதிகரணங்களாக மாறிவிடுகின்றன. மல பரிபாகமும் இருவினைஒப்பும் கைவரப்பேற்றுச்சற்குருதரிசனம், சத்திநிபாதம் நிகழ்கின்றன. பழைய கருமங்களின் பலன்கள் புசிக்கப்பட்டு முடிகிறது. புதிய கருமங்கள் சேராதொழிகின்றன. இந்நிலையி லுள்ள அடியவர்கள் பதிஞானம் கைவரப்பேற்ற கருமயோகிகள் ஸ்திதப்ரஞ்ஞர், சீவன்முத்தர், அணைந்தோர், பரிசுத்தவான்கள் என அழைக்கப்படுகின்றனர்.

சுத்த அவத்தையில் அதற்குமுன் மறைப்புத் தொழிலைச் செய்துவந்துள்ள திரோதாயி அருள்பாலிக்கும் சக்தியாக மாறி விடுகிறது. திடீரேன்று ஒரு காற்று தோன்றி சூரியனை மறைத் திருக்கும் கருமேகத்தை அடித்துச்செல்லுமாறு போலக் குரு தோன்றி ஆணவத்தின் அதிகாரத்தை அகற்றிவிடுகிருர். வெப்ப மற்ற சூரிய ஒளியில் ஒளிக்குளிப்பு (Sun bath) செய்துகோண்டு இன்புறும் மாந்தர்போன்று ஆன்மா கடவுளொளியில் களிக் கின்றது. சுத்தஅவத்தை அளிக்கும் இன்ப சுகத்தை முத்தி நிச்சயம் என்ற நூலும் அதன் பேருரையும் பலவகையாகு விளக்குகின்றன.

அடியவர் அநுபவிக்கும் சுத்தநிலை பரிசுத்த பரிபூரணநிலை. சமாதான நல்வாழ்வை அநுபவிக்கும் ஒரு பட்டினம் இரவில் ஒளிப்பிரவாகத்தோடு (Flood Light) திகழும் நிலைக்கு இதனை ஒப்பிடலாம். விடுதலை பெற்ற இந்தியா பல துறைகளிலும் முன்னேற்றம் கண்டு சர்வோதயக் குறிக்கோளை அடைந்துள்ள நிலைக்கும் இதனை ஒப்பிடலாம். அகப்பொருள் துறையில் காதலனும் காதலியும் ஒன்றி இன்பம் நுகரும் நிலைபோன்றது சுத்தாவத்தை. மேல்நாட்டு அடியாரும் அறிஞரும் இந்த அநுபவநிலையை ஒன்றிய நிலை (Via Unitiva) என்றே குறிப்பிடு கின்றனர்.

சுத்தநிலையிலிருக்கும் ஆன்மா அதிலிருந்து வழுவாதபடி ஆலயவழிபாடு, தெய்வநாம உச்சரிப்பு, அடியவர்கள் கூட்டுறவு ஆகியவற்றைக் கடைப்பிடித்தல் நலம் என்று சன்மார்க்க நூல் களாலும் சமயத் தலைவர்கள் வாழ்வினாலும் அறியக்கிடக் கின்றது.

கேவலம், சகலம், சுத்தம் ஆகிய மூன்று காரண அவத்தை களும் முறையே தமோகுணம், ரஜோகுணம், சத்வகுணம் ஆகிய மூன்று குணங்களோடும், கீழால் அவத்தை, மத்தியால் அவத்தை, நின்மல அவத்தை ஆகிய பருமையான காரிய அவத்தைகளோடும் ஒப்பிடக்கூடியன.

நாம் இதுவரை கூறிய மூன்று காரண அவத்தைகளுக்கு உட்பிரிவுகளும் இருப்பதாகத் துகளறுபோதம், சித்தாந்த சாராவளி, திருமந்திரம் முதலிய அநுபவ நூல்கள் கூறுகின்றன. கேவலாவத்தையை மருட்கேவலம், சகலகேவலம், பிரளய கேவலம், விஞ்ஞான கேவலம், அருட்கேவலம் என ஐவகை யாயும், சகலாவத்தையைச் சகலத்திற்கேவலம், சகலத்திற் சகலம், சகலத்திற் சுத்தமென்று மூவகையாயும் (இவை ஒவ்வொன்றிலும் ஐந்து வகையாயும்), சுத்தாவத்தையைச் சீவன் முத்தி. அதிகார முத்தி, போக முத்தி, இலய முத்தி, பரமுத்தி என்று ஐவகையாயும் கூறுகின்றனர்.

வல்வில் வேட்டம்

வித்துவான், திரு, வி. சா. குருசாமி அவர்கள்,

ஆதீனப் பல்கலைக் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர், தருமபுரம்.

வில்லில் தொடுத்த அம்போன்று விரைந்து வரும் ஓசை அக் கானத்தையே அலறச் செய்கிறது. கொழுத்த யானைகளை யும் கொன்று வீழ்த்தவல்ல கூரிய கணை அது. விரைந்துவந்த அந்தக் கணை களிற்றின் உடலிலே நுழைந்தது. 'ஆ' எனப் பிளிறிக்கொண்டு கீழே வீழ்ந்து இறந்தது அந்தக் களிறு. களிற்றின் உடலைத் துளைத்துச் சென்ற அக் கணை அடுத்த இலக்காகப் புலியை வீழ்த்தியது. மேலும் அவ்வம்பு கலைமான் ஒன்றின் வயிற்றின்வழி ஊடுருவிச் செல்லுகிறது. விரைவும் வேகமும் குறையாத அவ்வம்பு மீண்டும் பன்றியொன்றின் உடலைப் பதம் பார்த்து உடும்பின் உடலிலே சென்று தைத்து நிற்கிறது. அம்பின் கூர்முனையில் அகப்பட்டு இறந்த உயிர்கள் யானை, புலி, மான், பன்றி, உடும்பு ஆகியன. இவை நிகழ்ந்த நேரமோ கணப்பொழுது. இறந்து படும் உயிர்கள் எழுப்பிய பேரிரைச்சல் காடெல்லாம் எதிரொலித்தது.

பழமரம் தேடிச் செல்லும் பறவை இனம் போல வள்ளலைத் தேடிச் செல்லும் ஒரு கூட்டம் அவ்வழியே வருகிறது. அக் கூட்டத்தின் தலைவர் வன்பரணர் என்னும் செந்தமிழ்ப் புலவர். விறலியர் பலர் அவருடன் வருகின்றனர். அம்பு ஒன்றால் பல இலக்குகளை எய்த அவ்வில் வீரன் யார்? என்ற வினா புலவர் மனத்தில் மீண்டும் மீண்டும் எழும்பியது.

அம்பு வந்த திசை நோக்கிச் செல்லுகிறார். வில்லெடுத்துக் கணை தொடுத்த வீரனும் வில்லளித்த வேட்டத்தைக் காண அவ் வழி வருகிறான். புலவர் அவனையே பார்க்கிறார். அவர் மனம் பலவாறு எண்ணுகிறது. வில்லேருழவராகக் காட்டிலே திரிந்து வேட்டையாடி விளைவுகொள்ளும் கொலைஞனா இவன்?

"இல்லை, இல்லை" என்றது அவர் மனம்.

" வேட்டையாடி விற்றுப் பிழைக்கும் விலேவனே ?" இருக்கமுடியாது. அவன் உடலில் அணிந்துள்ள அணிகலன் கள் ஒப்பற்றன. கோலேஞனும் விலேஞனும் அல்லன் என்று மனப் போராட்டத்திற்கோர் முடிவு காண்கிருர் புலவர்.

புலவர் தான் தேடிச் செல்லும் வள்ளல் ஓரி இவனுகத்தான் இருக்கவேண்டும் என்று நினேக்கிருர். அருகில் விறலியரை அழைத்து, " மத்தளத்தை எடுங்கள், யாழ் மீட்டுங்கள், இசை கூட்டுங்கள், முழவை முழக்குங்கள். பெருவங்கியம் எங்கே ? சல்லியம் எங்கே ? இசைக் கருவிகளேல்லாம் முழங்க வள்ளல் ஓரியீன் புகழை வாயாரப் பாடுங்கள் " என்று விறலியரை ஏவிப் பாடச் செய்கிருர் புலவர். ஓரியின் புகழ்க் கீதம் காட்டில் எதிரோலிக்கிறது.

வீரன் விறலியரின் இசைப் பாடலேக் கேட்டான். தன்புகழ் கேட்க நாணினனுய்த் தலேசாய்த்தான். முதுபேரும் புலவரேறே! வருக! சேந்தமிழின் திறம் பாடும் விறலியரே வாருங்கள் என்று அழைத்தான் அவர்களே. அவர்கள் எல்லோரும் வள்ளல் ஓரி இவனே எனக் கண்டு வணங்கினர். மீண்டும் வாழ்த்தினர். மன்னன் அவர்களே அருகிருத்தி, மானிறைச்சியையும், மதுவை யும் உணவாகத் தந்து, பசும்போற் குவியல்களேயும், பட்டாடை களேயும் பரிசிலாகக் கோடுக்கிருன்.

இந்நிகழ்ச்சி புறநானூற்றுள் வரும் ஒரு சுவையான இலக் கியக் காட்சி. பல இலக்குகளே ஓரம்பில் எய்யும் சிறப்பை வல்வில் வேட்டம் என்று சிறப்பித்துக் கூறுகிறது புறநானூறு. இவ்வாறே கம்பர் " இராமன் எய்த அம்பு மலேயுருவி, மண் ணுருவி, மரமுருவிற்றேன்பர் ".

" வேழம் வீழ்த்த விழுத்தோடைப் பகழி
பேழ்வாய் உழுவையைப் பெரும்பிறி துறீஇ
புழற்றலேப் புகற்கலே உருட்டி அயலது
ஆழற் புற்றத்து உடும்பிற் சேற்றும்
வல்வில் வேட்டம் வலம்படுத் திருந்தோன் " (புறம்)

கடுவிசைக்கவண்

வல்வில்போல் கவண் கல்லில் பல இலக்குகளேப் படுக்கும் சிறப்பைக் கலித்தோகை காட்டுகிறது.

இரவின் நடுப்போழுது. இடியும் மின்னலும் மாறி மாறித் தோன்றுகின்றன. மின்னொளியில் தினைப்புனத்தில் திருட்டு மேய்ச்சல் புரிகின்றன களிறும் பிடியும். யானைகளின் காலடிச் சத்தத்தைக் கேட்ட காவல் வேடன் விரைந்து மலைமேல் பலா மரத்தில் கட்டிய பரண் மீது ஏறுகிருன். கல்லெடுத்துக் கவண் வீசுகிருன்.

வீசிய கவண் கல் விரைந்து செல்கிறது. வேங்கை மரத்தில் பூத்த பூக்களைச் சிதறடிக்கிறது. பலாவின் கிளையில் பழுத்த பழங்களில் அளிந்தவற்றை உதிர்க்கின்றது. தேனடை ஒன்றைத் துளைக்கிறது சினைவிரிந்த மாமரத்தில் கோத்துக்கோத்தாகப் பூத்த மலர்களை உழக்குகிறது. வாழையிலைகளைக் கிழிக்கிறது. இவ்வாறு வேகந் தணிந்து வரும் கல் விழும்போழுதும் வேர்ப்பலாப் பழத்தில் வீழ்ந்து நடுவில் சென்று தங்குகிறது.

காட்டின் இயற்கை வளத்தையும் கவண் கல்லின் விசையையும் இப் பாடல் புலப்படுத்துகிறது. இவ்வாறு இலக்குகள் பலவற்றை எய்யும் கவண் ஆற்றலுக்கு கடுவிசைக் கவண் என்று பேயர் சூட்டுகிறது கலித்தோகை. கல் செல்லும் இடமேல்லாம் பயன் மரங்கள் பல நேருங்கியிருத்தலைக் காட்டி மலைவளங் கூறுமுறையில் இதுவோன்று :-

"இடியுமிழ் பிறங்கிய விரவுபெயல் நடுநாட்
கோடிவிடு பிருளிய மின்னுச்சேய் விளக்கத்துப்
பிடியோடு மேயுஞ் செய்புன் யானை
அடியோதுங் கியக்கங் கேட்ட கானவன்
நேடுவரை ஆசினிப் பணவை யேறிக்
கடுவிசைக் கவணையிற் கல்கை விடுதலின்
இறுவரை வேங்கையின் ஒள்வீ சிதறி
ஆசினி மேன்பழம் அளிந்தவை உதிராத்
தேன்செய் இருஅல் துளைபடப் போகி
நறுவடி மாவின் பைந்துணர் உழக்கிக்
குலையுடை வாழை கோடுமிடல் கிழியாப்
பலவின் பழத்துள் தங்கும் மலை." (கலி 41)

தெங்கம் பழம்

சிந்தாமணி என்னும் சேந்தமிழ்க் காப்பியம் ஏமாங்கத நாட்டின் இயற்கை எழிலைப் புனையும் போழுது தேன்னை மரத்தி

லிருந்து விழும் தேங்கின் பழம் செய்யும் செயல்களைக் கூறுகின்றது.

" காய்மாண்ட தேங்கின் பழம்வீழக் கமுகி னெற்றிப்
பூமாண்ட தீந்தேன் றொடைகீறி வருக்கை போழ்ந்து
தேமாங்கனி சிதறி வாழைப் பழங்கள் சிந்தும்
ஏமாங்கதமென் றிசையாற் றிசைபோய துண்டே "

(சிந்தாமணி)

விழுந்த தேங்கின்பழம், கமுகங்குலைகளைச் சிதறி தேனடையை உதிர்த்து, பலாப்பழத்தைப் பிளந்து மாங்கனிகளை உதிர்த்து வாழைப்பழங்களைச் சிந்தும் என்று கூறுவார்.

" குமரகுருபரன் "

திங்கள் வெளியீடு] [ஆண்டுச் சந்தா 1-8-0

விலாசம் :- நிர்வாக ஆசிரியர், உயர்திரு. T. M. குமரகுருபரன் பிள்ளை B. A., B. L., அவர்கள், " குமரகுருபரன் " ஆபீஸ், ஸ்ரீ வைகுண்டம். இவ் வெளியீடு ஏழாண்டுகளாகத் தொண்டு புரிகின்றது. சமயம், இலக்கியம், அறம் முதலியவற்றினை எளியநடையில் தெளியக்கொண்டு உலவுகின்றது. தருமையாதீனத்து முனிபுங்கவரும், ஸ்ரீ காசி மடத்து முதல்வருமான ஸ்ரீலஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் திருப்பெயரோடு வெளிவருவதால் அவர்கள் அருளிய நூல்களின் ஆராய்ச்சி விளக்கமும் ஏற்றுத் திகழ்கிறது. ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களின் ஆணையின்வண்ணம் " குமரகுருபரன் " இதழ் வெளிவருகிறது. எல்லோரும் பாராட்டிவரும் சிறப்புடையது. அன்பர் பலரும் வாங்கிப் பயன் அடைக.

– ஆசிரியர்

முருகாற்றுப்படை நக்கீரர் * * சங்ககாலத்தவரே

வித்துவான், திரு. செ. வேங்கடராமச் செட்டியார் அவர்கள்,
தமிழ்ப்பேராசிரியர், ஆதீனப் பல்கலைக் கல்லூரி, தருமபுரம்.

(மலர் 15, இதழ் 11, பக்கம் 837. இன் தொடர்ச்சி.)

இங்ஙனம் சொல்லாராய்ச்சி செய்த இவர், செய்யுட்களிற் கூறப்பட்ட பொருளாலும் நெடுநல்வாடை நக்கீரர்க்கும் முருகாற்றுப்படை நக்கீரர்க்கும் வேறுபாடுண்டு என்று காட்டுகின்றார். இருவரதுலகமும் வெவ்வேறாக உள்ளன என்று கூறுகின்றார்.

"நெடுநல்வாடை நக்கீரர் சங்கப்புலவர் பிறரோடொப்ப அரசர்கள் குறுநிலமன்னர் முதலியோரது ஆதரவில் வாழ்ந்து வந்தவர். பொருள் பரிசில் கருதி அவர்களைப் புகழ்ந்து பாடும் இயல்பினர் இப்பரிசிலின் பொருட்டுச் சேர, சோழ, பாண்டிய நாடுகளிலும் குறுநிலமன்னர் நகர்களிலும், வள்ளல்கள் ஊர்களிலும் சுற்றித்திரிந்து பாடி இருக்கின்றார். தெய்வங்களைக்கூட மக்கள் பிறப்புவரை யிழித்துக் கொணர்ந்து, தாம் பரிசிலின் பொருட்டுப் பாடுகின்ற அரசர்களை ஒப்பிடற்குரிய பொருளாக்கி விடுகின்றார். மகளிர் பொற்கலத்தில் ஏந்திக் கொடுக்கும் மதுவுண்டு களித்தலையே சிறந்த வாழ்வென அரசர்க்கு அறிவுறித்தி ஆசி கூறுகின்றார்.

இவ்வுலகத்திற்கும் ஆற்றுப்படை இயற்றிய நக்கீரர் மன உலகத்திற்கும் பெரிதும் வேறுபாடுண்டு. மறந்தும் பொருட் பரிசில் அவ்வுலகத்தில் இல்லை. அரசர்கள், சிற்றரசர்கள், வள்ளல்கள் யாரும் அங்கில்லை. முத்தியாகிய பரிசிற்கே தாமுயன்று பிறரையும் அவ்வழிச் செலுத்துகின்றார் ....அவனது திருவிளையாடல்களைப் புராணவுலகிற் கண்டு களிக்கின்றார். இவர் முற்கூறிய நக்கீரரின் முற்றும் வேறுவர் என்பது சொல்லவும் வேண்டுமோ? தாம் வழிபடு தெய்வத்தோடு மக்கட் பிறப்பினனொருவனை இந்நக்கீரர் ஒப்புக்கூறுவாரா என்பதையும்

தெய்வ பத்தியிற் சிறந்த இப்புலவர், 'மதுவைப் பொற்கலத் தேந்தி மகளிர் ஊட்ட மகிழ்ச்சியோடு இனிது ஒழுகுவாயாக' என ஓரரசனை வாழ்த்துவாரா என்பதையும் சிந்தித்தல் வேண்டும்'' என்பது அவரது வாதம்.

முருகாற்றுப்படை நக்கீரர் தெய்வத்தை மக்கட் பிறப்புவரை யிழித்துக் கொணர்ந்து அரசர்களை ஒப்பிடற்குரிய பொருளாக்கி இருக்கமாட்டார்' என்பது முதல்தடை. இதற்கு விடை காண்பாம்.

உவமை பொருளினும் சிறந்திருத்தல் வேண்டும் என்பது இலக்கணம். புலவன், தான் கருதிய கருத்தை நன்கு தெளிவு படுத்த வேண்டியே பெரும்பாலும் உவமையைக் கையாள்வான். மக்களிற் சிறந்தோனாகிய மன்னவனுடைய சீற்றமும் வலியும் புகழும் முன்னியது முடிக்கும் இயல்பும் பிறரறிய புலப்படுத்த வேண்டுமாயின், அவனினும் சிறந்தாராய் எல்லோரானும் அறியப் பட்ட சீற்றமும் வலியும் முதலிய பண்புகளையுடைய தெய்வங்களை ஒப்பிடுதல் முறைதானே! மன்னவனுக்குத் தெய்வத்தை ஒப்பாகக் கூறியது மன்னவனை யுயர்த்திக்கூறியதாகுமேயன்றித் தெய்வத்தைத் தாழ்வுபடுத்தியதாகுமா? அங்ஙனமாயின் 'பூவைநிலைத்துறை'யே குற்றமுடையதாகுமன்றோ? ''திருவுடை மன்னரைக் காணின் திருமாலைக்கண்டேன்'' என்று பத்திக் கடலிலாழ்ந்த நம்மாழ்வார் கூறியதும் திருமாலைத் தாழ்த்திய தாகவன்றோ முடியும்? அழுதடி அடைந்த அன்பராகிய மணிவாசகப்பெருமான், திருக்கோவையாரில் தலைவியின் கண் களைத் தலைவன் பாராட்டும் முறையில் பாடியுள்ள,

'' ஈசற்கு யான்வைத்த அன்பி னகன்றவன் வாங்கியவேன்
பாசத்திற் காரேன் றவன்தில்லை யினொளி போன்றவன் தோள்
பூசத் திருநீ றெனவெளுத் தரங்கவன் பூங்கழல் யாம்
பேசத் திருவார்த் தையிற் பெருநீளம் பெருங்கண்களே. ''

என்ற பாடலும் சிவபிரானை இழித்ததாக வேண்டுமன்றோ? மேலும் இம்முறையே நோக்கின் முருகாற்றுப்படை நக்கீரர், தாம் வழிபடு கடவுளாகிய முருகனுக்கு - ஞானவடிவினனாய் உலகங் கடந்து நின்ற முருகனுக்கு உலகப்பொருளில் ஒன்றாய் உருவமுடைய சடப்பொருளாகிய ஞாயிற்றை உவமையாக்கி,

" உலக முவப்ப வலனேர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண்டாங்கு
ஓவற விமைக்கும் சேண்விளங் கவிரோளி"

என்று கூறியது முருகனைத் தாழ்வு படுத்தியதாகும் என்பார்க்கு இவர் கூறலாவதோர் விடையின்மை யறிக. எனவே புலவன், தான் கருதிய பொருளை விளக்கத்தக்க உவமைகளைக் கூறுதல் மரபு என்பதும் அங்ஙனம் உவமை கூறுவதால் உவமானப் பொருட்கோ உவமேயப் பொருட்கோ தாழ்வொன்றும் வாரா தென்பதும் புலனாகும்.

எனவே நக்கீரர் நன்மாறனுக்கு உவமையாகத் தெய்வங்களைக்கூறிய காரணத்தால் முருகாற்றுப்படை நக்கீரரின் வேருவர் என்ற கருத்துப் பொருந்தாதென்பதும், அதற்கு மாருகத் தெய்வ நம்பிக்கையுள்ள முருகு நக்கீரரே தம் காலத்து வாழ்ந்த சிறந்த வேந்தனாகிய நன்மாறனுக்கு உவமையாகத் தெய்வங்களைக் கூறியிருக்க முடியும். ஆதலின் நன்மாறனைப் பாடிய சங்ககால நக்கீரரும் முருகு நக்கீரரும் ஒருவரே என்பதும் புலனாகும். இதனால் நன்மாறனைப்பாடிய நக்கீரரின் முருகு நக்கீரர் வேருவார் என்பதற்கு அவர் கூறிய சான்றே அவர் கூற்றை மறுப்பதற்குரிய சான்றானமை காண்க.

இனி, முருகாற்றுப்படை நக்கீரர் முருகன் திருவிளையாடல் களைப் புராண உலகிற் கண்டு களிக்கின்றார். ஆதலின் அவர் சங்ககால நக்கீரராகார் என்பது மற்றோர் தடை. இதற்கு விடை காண்பாம்.

புராணகதைகள் முருகாற்றுப்படையில் காணப்படுவதால் அதைப்பாடிய நக்கீரர் சங்ககாலத்தவரல்லர் என்றால் புராணங் களில் கூறப்படும் மாயோனையும், சேயோனையும், இந்திரனையும், வருணனையும் பற்றி,

" மாயோன் மேய காடுறை யுலகமும்
சேயோன் மேய மைவரை யுலகமும்
வேந்தன் மேய தீம்புன லுலகமும்
வருணன் மேய பெருமண லுலகமும்"

என்று கூறிய தோல்காப்பியரும் சங்க காலத்திற்குப் பிற்பட்ட வராதல் வேண்டும். மேலும்,

"இமயவில் வாங்கிய ஈர்ஞ்சடை யந்தணன்
உமையமர்ந் துயர்மலை யிருந்தன னாக" (கலி - 38)

எனவும்,

"ஓங்குமலைப் பெருவில் பாம்புநாண் கொளீஇ
ஒருகணை கொண்டு மூவெயி லுடற்றி" (புறநா - 55)

எனவும் சிவபிரான், இமயமலையை வில்லாக வளைத்து ஆதிசேடன் என்னும் பாம்பை நாணாக்கி ஒருகணை கொண்டு முப்புரமெரித்தார் என்ற புராண வரலாறு வந்துள்ள கலித்தொகையும் புறநானூறும் சங்ககாலத்தன அல்லவாதல் வேண்டும். மேலும்

"மாக்கடன் முன்னி,
அணங்குடை யவுணர் ஏமம் புணர்க்கும்
சூருடை முழுமுதல் தடிந்த பேரிசைக்
கடுஞ்சின விறல்வேள் களிறூர்ந்தாங்கு" (பதிற்றுப்பத்து)

எனவும்,

"பாயிரும் பனிக்கடல் பார்துகள் படப்புக்கு
சேயுயர் பிணிமுகம் ஊர்ந்தம ருழக்கித்
தீயழல் துவைப்பத் திரியவிட் டெறிந்து
நோயுடை நுடங்குசூர் மாமுதல் தடிந்து" (பரிபாடல்)

எனவும், முருகன் கடலிடைச் சென்று சூர்மா தடிந்தான் என்ற புராண கதையைத் தெரிவிக்கும் பதிற்றுப்பத்தும் பரிபாடலும் சங்க நூல்களாதல் கூடாவாம். புறநானூறும், கலித்தொகையும் பதிற்றுப்பத்தும், பரிபாடலும் புராண கதைகள் விரவிய வழியும் சங்ககாலத் தொகைநூல்களாதற்குத் தடையில்லாதபோது அவ்வகையான புராண கதைகள் விரவிய முருகாற்றுப்படை சங்க காலத்ததாதற்கு மட்டும் தடையுளதாமா? எட்டுத்தொகை நூல்கள் சங்ககால இலக்கியமே என்பது இவ்வாராய்ச்சியாளர்க்கும் கருத்தாகும். மேலும் சங்ககால நக்கீரர் பாட்டு என்று இவர் உடன்பட்ட

"ஏற்று வலனுயரிய எரிமரு ளவிர்சடை
மாற்றருங் கணிச்சி மணிமிடற் றோனும்"

என்று தோடங்கும் புறப்பாட்டும் ஞாலங் காக்கும் நாற்பெருந் தேய்வத்தைக் கூறிப் புராணத் தோடர்பு கோண்டுள்ளமையால் அப்பாடலும் சங்ககாலப் பாடல் அன்ருதல் வேண்டும். முருகன் திருவிளையாடல்களைப் புராண வுலகில் கண்டு களிக்கின்றமையால் முருகு நக்கீரர் சங்ககால நக்கீரரின் வேருவர் என்று இவர் கூறிய ஏதுவே இவர் சங்க காலத்தவராக மேற்கோண்ட நன்மாறனைப் பாடிய நக்கீரர்க்கும் ஏற்புடைத்தாய்ப் புராண கதைகளைக் கூறுவதால் அவரும் சங்க காலத்தவரல்லர் என்று பட்டு இவர் கருத்தோடு முரணுமாறறிக.

இனித் தேய்வ பக்தியிற் சிறந்த முருகு நக்கீரர், மதுவை போற்கலத்தேந்தி மகளிர் ஊட்ட மகிழ்ச்சியோடு இனிது வாழ்க என்று ஓரரசனை வாழ்த்தமாட்டார் என்பது இவர் கூறும் மூன்ருவது தடையாகும்.

நக்கீரர் இவ்வாறு கூறி நன்மாறனை வாழ்த்தியதற்குரிய காரணம் முன்னரே கூறப்பட்டுளது. முற்றுமுணர்ந்த பற்றற்ற முனிவரும் மன்னரை வாழ்த்துவதுண்டு.

"இறைஞ்சுக பெருமநின் சென்னி சிறந்த
நான்மறை முனிவ ரேந்துகை யெதிரே" (புறநா - 6)

என்பது காண்க. இம்முனிவர், தாம் பற்றற்று இருப்பதால் தம்மால் வாழ்த்தப்படும் மன்னனும் தம்மைப்போலவே பற்றற்று அரசு துறந்து தாம் பேற்ற இன்பம் பேறுக என்று வாழ்த்துதல் போருந்துமா? வாழ்த்தப்படுவோன் நிலைக்கேற்ப வேண்டுவ கூறி வாழ்த்துவதே போருத்தமும் முறைமையுமாகும். நக்கீரர், போருளும் இன்பமும் நிலையிலாதன என்பதை யறிந்தவர் என்பதை முன்னரே கண்டோம். ஆயின், நிலையாமைகண்டு பற்றற்ற நிலையைத் தாம் மேற்கோள்வதல்லது தம்மால் வாழ்த்தப்படும் நன்மாறனும் பற்றற்ற துறவியாக வேண்டும் என்று கூறி வாழ்த்துதல் ஏற்புடையதாகுமா? அங்ஙனம் அவர் வாழ்த்தி இருப்பின் உலகநடையறிந்தவர் ஆவரோ? மன்னவர் யாவரும் போருளும் இன்பமும் துறந்து மாதவராயிடின், மாதவர் நோன்பிற்கும் மடவார் கற்பிற்கும் காவல் சேய்யும் காவலனே இலனுய் உலகியல் நடைபேருதோழியும் என்பதை நக்கீரர் அறியாரோ? எனவே சீற்றமும் ஆற்றலுமுடையனுய்ப் பகைவர்

பலரைக் கொன்று பொருள் மிகப் படைத்த நன்மாறன், அப் பொருளால் அறனும் இன்பமும் அடைக என்று கூறி வாழ்த்திப் போர்மேற்செல்லும் அவன் கருத்தைக் குறிப்பால் மாற்றியுள்ளார். மதுவருந்தி மகிழ்தல் சங்ககாலத்து மன்னவர்க்குரிய மாண்புறு செயலாகவே மதிக்கப்பட்டு வந்தது. நக்கீரர், அந்நுகர்ச்சியைக் கூறுது இருக்க வியலுமா? வாழ்த்தப்படுவோன் நிலைக்கேற்ப— அக்கால நிலைக்கேற்ப நன்மாறனை வாழ்த்தியுள்ளாரேயன்றி அம் மதுவருந்தி மகிழ்தலில் நக்கீரர் விருப்பமுடையவர் அல்லர். மேலும் முருகாற்றுப்படையில்,

"கானவர்
நீடமை விளைந்த தேக்கட்டேறல்
குன்றகச் சிறுகுடி கிளையுடன் மகிழ்ந்து
தொண்டகச் சிறுபறைக் குரவையயர" (194-197)

எனக் குன்றத்துக் கானவர் மதுவுண்டு மகிழ்ந்தாடுதலையும் அவரோடு வேலன் ஆடுதலையும் இவ்வாராய்ச்சியாளர் கூறும் பத்தியிற்சிறந்த முருகு நக்கீரர் கூறவில்லையா? மதுவருந்தி மகிழ்க என்று மன்னவனை வாழ்த்திய காரணத்தால் நன்மாறனைப் பாடிய நக்கீரர் பத்தியிற் சிறந்த முருகு நக்கீரர் ஆகார் என்று இவர் மறுக்கக் கூறிய ஏதுவே 'மதுவருந்தி மகிழ்க' என்று நன்மாறனை வாழ்த்திய நக்கீரரே, முருகாற்றுப்படையில் மது வருந்தி மகிழ்ந்தாடும் நிகழ்ச்சியைச் சிறப்பித்துக் கூறியிருக்க முடியும் என உடன்பாட்டிற்குரிய ஏதுவாய் இவர் கருத்தோடு மாறு கொள்ளுதல் காண்க. கடவுளைக் குறித்துப் பத்தியால் பாடும் முருகாற்றுப்படையில் மதுவருந்தும் கானவர் — சிறப் பிக்கப்படும்போது மன்னனைப் பாடும் பாட்டில் மதுவருந்தி மகிழ்க என்ருல் குற்றமாகுமா? அது கானவர் நிலைக்கேற்பக் கூறியது எனின் இதுவும் மன்னவர் நிலைக்கேற்பக் கூறியது தானே? என்க. எனவே மன்னனை மதுவருந்தி மகிழ்க என்ற காரணத்தால் சங்ககால நக்கீரர் முருகு நக்கீரர் ஆகார் என்று அவ்வாராய்ச்சியாளர் கூறியமறுப்புப் பொருந்தாததாதல் காண்க.

இதுகாறும் கூறியவாற்ருன் அவ்வாராய்ச்சியாளர் சொல் லாட்சி பற்றிக் கூறிய முவகைத் தடைகளும் பொருள்பற்றிய முவகைத் தடைகளும் நிலைபெறவில்லை என்பதும் முருகுநக்கீரர் சங்ககால நக்கீரரே வேறல்லர் என்பதும் தெள்ளிதிற் புலப்படும்.

இனி, அவ்வாராய்ச்சியாளரே, " முருகாற்றுப்படை இயற்றிய நக்கீரர் மிகமுற்பட்டவராக இருக்க வேண்டும் என்பது ஆற்றுப் படையின் நடையை நோக்கிய அளவிலேயே எளிதில் ஊகிக்கத் தகும். இதன் நடை சங்கச் செய்யுட்களின் நடையோடு ஒத்துளது, " என்று புகழ்ந்து கூறியுள்ளார். எனவே முருகாற்றுப் படையின் நடை சங்ககாலத்து நடையே என்பதை ஆராய்ந்து நிறுவவேண்டியதில்லை.

இனி, நெடுநல்வாடைக்கும் முருகாற்றுப்படைக்கும் உள்ள ஒற்றுமையைக் காண்பாம்.

" வையகம் பணிப்ப வலனேர்பு வளைஇ "

என்று தொடங்குகின்றது நெடுநல்வாடை.

" உலக முவப்ப வலனேர்பு திரிதரு "

என்று தொடங்குகின்றது முருகாற்றுப்படை. வையகம், உலகம் என்ற இரண்டு சொற்களும் ஒரே பொருளுடைய சொற்கள். அவ்வாறே உவப்ப என்பதும் பனிப்ப என்பதும் மகிழ என்ற ஒரே பொருளுடைய சொற்களாம். பனிப்ப என்பதற்கு குளிர்ப்ப என்பதன்றோ பொருளெனின்? ஒக்கும். குளிர்ச்சி நம்நாட்டில் மகிழ்ச்சி தருவதாதலின் அச்சொல் மகிழ்ச்சியையும் குறிப்ப துண்டு. வேனில் வெப்பத்தால் வெதும்பிய உயிர்கட்கு மழை குளிர்ச்சியால் மகிழ்ச்சி விளைத்தல் இயல்பன்றோ? மேலும், 'மனங்குளிர்ந்தது என்புழியும் குளிர்ச்சி அப்பொருட்டாதல் காண்க. வலனேர்பு என்ற சொல் இரண்டு பாடலினும் வந்துள்ளது. திரிதரு, வளைஇ என்ற இரண்டு சொற்களும் ஒரு பொருளனவே என்பது தெளிவு. எனவே இரண்டு பாடலினும் முதலடிகள், சொல்லினும் பொருளினும் ஒற்றுமையுடையவாய் அவ்விரண்டு பாடலும் ஒருவரால் செய்யப்பட்டனவே என்பதற்கு முத்திரை வைத்தாற்போன்று அமைந்துள்ளமை காண்க.

" திருநிலை பெற்றதீதுதீர் சிறப்பிற்
றருமணல் ஞெமிரிய திருநகர் "

என்பது நெடுநல்வாடை (88-90)

" திருவீற்றிருந்த தீதுதீர் நியமத்து
மாடமலி மருகிற் கூடல் "

என்பது முருகாற்றுப்படை (70-71)

இவை இரண்டு பகுதியும் மதுரையைக் குறிப்பனவே. முன்னது அகப்பொருள் கூறும் பகுதியாதலின் ஊரின்பெயர் வெளிப்படக் கூறவில்லை. பின்னது ஆற்றுப்படையாகிய புறத்திணைபற்றிய தாகலின் 'கூடல்' என வெளிப்படக் கூறப்பட்டுளது. இவ்விரண்டு பகுதியினும் உள்ள சொற்பொருள்களின் ஒற்று மையைக் காண்க.

" வரைகண்டன்ன தோன்றல வரைசேர்பு
வில்கிடந்தன்ன கொடிய பல்வயின்
வெள்ளியன்ன விளங்குஞ் சுதையுரீஇ
மணிகண்டன்ன மாத்திரள் திண்காழ்ச்
செம்பியன்றன்ன செய்வுறு நெடுஞ்சுவர் "

(நெடுநல்வாடை 108-112)

" மீன்பூத்தன்ன தோன்றலர் மீன்சேர்பு
வளிகிளர்ந்தன்ன செலவினர் வளியிடைத்
தீயெழுந்தன்ன திறலினர் தீப்பட
உருமிடித்தன்ன குரலினர் விழுமிய "

(முருகாற்றுப்படை 108-112)

இவ்விருபகுதியிலும் அமைந்துள்ள செய்யுள் நடையில் எத்துணை ஒற்றுமை காணப்படுகின்றது காண்மின்! ஒவ்வோரடியின் இரண்டாஞ்சீரினும் அன்ன என்ற உவம உருபை அமைத்து மூன்றுஞ்சீரில் பொருள்முடிய வைத்து நான்காஞ்சீரில் அடுத்த அடியிற் கூறப்படும் கருத்திற்குத் தோற்றுவாய் செய்துள்ள அழகு, படிக்குந்தோறும் இன்பமூட்டி இவ்விருபகுதியும் ஒருவரால் செய்யப்பட்டனவே என்பதைக் காட்டுகின்றதன்றோ? மேலும்,

" வரைகண்டன்ன தோன்றல வரைசேர்பு "

" மீன்பூத்தன்ன தோன்றலர் மீன்சேர்பு "

என்ற இருபாடல் அடிகளினும் உள்ள சொல்லொற்றுமையை யோர்க.

" கருவொடு பெயரிய காண்பினல்லில் " (நெடுநல்வாடை 114)

" நாவலொடு பெயரிய பொலம்புனை யவரிழை " (முருகாற் 181)

இவ்விருபாடல் அடிகளினும் வடசோல்லானன்றி வழங்கப்படாத கர்ப்பக்கிரகம், சாம்பூநதம் என்ற பேயர்களைத் தமிழால் விளங்க வைக்கும் தன்மை ஒத்திருத்தல் காண்க. கருவோடு பேயரிய இல் எனவே கர்ப்பக்கிரகம் என்பதும் 'நாவலோடு பேயரிய போலம்' எனவே சாம்பூநதம் என்றபோன் என்பதும் விளங்குதல் காண்க.

இனி, முருகன்பால் முறுகிய அன்பினராய் முருகாற்றுப்படை இயற்றிய நக்கீரர், அகப்பாட்டுப் பாடும் போழுதும் தமக்கு முருகன்பாலுள்ள அன்பைத் தேரிவித்துள்ளார். மாலை நேரத்தில் வானத்தில் சேவ்வானம் பரந்து காணப்படுகின்றது. மீனருந்திய கோக்குகள் அச்சேவ்வானத்தைத் தீண்டிஞற்போன்று வரிசையாகப் பறந்துசேல்கின்றன. அத்தோற்றத்தைக்கண்ட நக்கீரருக்குச் சேந்நிறமுள்ள முருகனுடைய மார்பில் விளங்கும் ஆரம் நினைவிற்கு வருகிறது. அதையே யுவமையாக்கி,

''நேடுவேள் மார்பின் ஆரம் போலச்
சேவ்வாய் வானந் தீண்டி மீனருந்தும்
பைங்காற் கோக்கின் நிரைபறையுகப்ப'' (அகநா - 120)

எனப்பாடி மகிழ்கின்றார். இதில் சேவ்வானம் முருகன் போலக் காட்சி தருகின்றது என்றும் வேண்ணிறமான கோக்குகள் வரிசைபடப்பறந்து அச்சேவ்வானைத் தீண்டிச்சேல்லும் தோற்றம் அம்முருகன் மார்பிலணிந்த வேண் பூமாலைபோலக் காட்சி தருகின்றதேன்றும் உவமையை விரித்துக் கோள்க. சேந்நிறமுள்ள முருகன்பால் நக்கீரர்க்கு உள்ள முறுகிய அன்பு, அவன் நிறத்தையுடைய சேவ்வானத்தைக் கண்டபோழுது அம்முருகனை நினைப்பிக்கின்றது என்பதை இப்பாடலில் காண்கின்றோம். கடவுள் அன்பிற்குச் சிறிதும் இயைபில்லாத அகப்பாடலைக் கூறும்போழுதும் நேய்தல் நிலத்தில் காணப்படும் இயற்கைக் காட்சியில் முருகனைக் காண்கின்ற நக்கீரர், அம்முருகனுடைய பண்புகள் யாவுந் தோன்ற முருகாற்றுப்படை என்னும் அரும் பேரும் பாடலை யியற்றி யிருத்தல் இயல்பன்றோ? மேலும்

''அணங்க லோம்புமதி வாழிய நீயேனக்
கணங்கேழு கடவுட்கு உயர்பலி தூஉய்ப்
பரவினம் வருகஞ் சேன்மோ தோழி'' (நற்றி - 358)

என்புழித் தலைமகள் கூற்ருகக் கணங்கெழு கடவுட்குப் பலி தூவுவதைப்பற்றிக் கூறியுள்ளமை காண்க. நக்கீரர் பாடலில் வருந்தலைவன் கடவுளைக்காட்டி இக்கடவுள் சான்ருக நின்னைப் பிரியேன் என்று தேளித்தான் என்பதும் பின்னர் அவன் அச்சூள் போய்த்தானுகத் தலைவி, தலைவனுடைய தவற்றுக்காக அக் கடவுள் அவனை வருத்தக் கூடுமாதலின் அக்கடவுட்கு உயர்ந்த பலிதூவி அவனை வருத்தாதே என்று பரவி வேண்டிக்கோள்ளச் சோல்லலாமா எனத் தோழியை அழைக்கின்ருள். இதனுல் நக்கீரர் அகப்பாட்டுப்பாடும் வழியும் தம் கடவுள் அன்பை எவ் வகையிலேனும் புகுத்திப் பாடவிழைந்திருக்கின்ருர் என்பது பேறப்படும். நக்கீரர் படைத்ததலைவனும் தலைவியும் கடவுள் நம்பிக்கையுடையராகவே காணப்படுகின்ருர். கணங்கெழு கடவுள் என்பதும் பூத கணங்களையுடைய முருகனையே குறிப்ப தாகக் கோள்ளலாம். இத்தகைய முருகன்பில் முறுகிய சங்ககால நக்கீரரே முருகாற்றுப்படை யியற்றியவராவர் என்பதற்கு ஐயமு முண்டோ? சோற்போருளோப்புமையானும் கடவுளன்பானும் வேருக்க முடியாதன, முருகாற்றுப்படையும் மற்றைச் சங்கப் பாடல்களுமாதலின் சங்ககால நக்கீரரே முருகாற்றுப்படை நக்கீர ராவர் என்பது தேளிவாதல் காண்க.

திருத்தங்கள்

ஞானசம்பந்தம் மலர் 15, இதழ் 11, பக்கம் 801 இல், ய, ம எழுத்துக்களும் என்று இருப்பதை யம எழுத்துக்களும் என்று கோள்க. வடமோழியில் யமாக்ஷரம் என்றதைக் குறிப்பது அது. இடையில் ஒரு காற்புள்ளி இருப்பது போருந்தாது.

இவ்விதழ் பக்கம் 880 இல் முல்லைக்கலி 15 ஆம் பாட்டின் விளக்கத்தில் கடைசி நான்கு வரிகளை இவ்விதம் திருத்தி வாசித்துக்கோள்க. இதில் அன்னையும் அத்தனும் என்ற மூலத் திற்கு, நற்ருயும் தந்தையும், என்று சேர்த்திருப்பது வேண்டாதது. மேலும் ‘ யாய் நாண, என்பதற்கு ’ நற்ருயுங் கேட்டு நாண, என்று இருக்கவேண்டுமேயன்றி, நற்ருயுங் கேட்டுநாண, என்று அச்சுப் புத்தகங்களிற் காணப்படும் உரை பிழையாகும்.

முத்து. சு. மாணிக்கவாசக முதலியார்.

திருவண்ணமலைத் திருவிளக்கு

திருச்சிற்றம்பலம்

உண்ணமுலை யுமையாளோடு முடனாகிய வொருவன்
பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன வருவித்திரண் மழலைம்முழ வதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை வழுவாவண்ண மறுமே

திருச்சிற்றம்பலம்

அகண்டாகாரசச்சிதானந்த பரிபூரண சுயம்பிரகாசப் பொருளாய் விளங்கும் ஸ்ரீகைலாயபதியானவர் இந்த உலகத்தினுள் ஆங்காங்கிருக்கும் ஆன்மகோடிக ளுய்யும் பொருட்டுத் திருக்கோயில் கொண்டிருக்கின்ற பல ஸ்தலங்களுள் ஆளுடைய பிள்ளையாராகிய திருஞானசம்பந்த சுவாமிகள், ஆளுடைய வரசுகளாகிய திருநாவுக்கரசு சுவாமிகள், ஆளுடையநம்பிகளாகிய சுந்தரமூர்த்திசுவாமிகள், ஆளுடையவடிகளாகிய மாணிக்கவாசக சுவாமிகள் என்னும் இந் நால்வர்கள் அருளிச்செய்த தேவார திருவாசகங்களை உடையனவாய்ச் சோணாடு முதலிய தேசங்களில் இன்ன இன்ன நாட்டில் இத்தனை இத்தனை ஸ்தலங்களென்று முன்னோர்கள் ஏற்படுத்தின கிரமப்படியே நடுநாட்டுக்குள்ளிருக்கும் ஸ்தலங்களுள் விசேஷமாகிய திருவண்ணமலையென்னுந் திருப்பதியும் ஒன்று.

இது கிருதயுகத்தில் அக்கினி மலையாகவும், திரேதாயுகத்தில் மாணிக்க மலையாகவும், துவாபரயுகத்தில் பொன்மலையாகவும், கலியுகத்தில் கல்மலையாகவும் திருவுருக்கொண்டு, அருணாசலம், சோணாசலம், கௌரிநகரம், தேசுநகரம், முத்திநகரம், ஞானநகரம், சிவலோகம் என்பன ஆதியாய பல பெயர்களை யுடையதாய், சிவபெருமானே கிரிருபமா யிருக்கப்பெற்றதாய், பார்வதியார் திருவவதாரமானதும், திருக்கண்புதைத்ததும், மகிடாசுர மர்த்தனஞ் செய்ததும், இடப்பாகம் பெற்றதும், சந்திர வம்சத்தனாகிய வச்சிராங்கத பாண்டியன் பேறு பெற்றதும், அக்கினி வம்சத்தனாகிய வல்லாளராஜன் புத்திரசோகந் தீர்த்ததும், இந்திரதீர்த்த முதலாகிய அநேக தீர்த்தங்களுள்ளதும், ஆதித்தனுக்குத் தரிசனங் கொடுத்ததும், சூரியவம்சத்தனாகியு

பிரதத்வராசனுல் அனேக காணிக்கைகள் பெற்றதும், அஷ்ட வசுக்களும் பிரமன் முதலானவர்கள் பாவந்தீர்த்ததும், புளகாதி பன் பேறு பெற்றதும், அன்பர்கள் வரம் புரிந்து நற்கதி யடையப் பெறுவதும், மகாஸ்தலமென்றும் நினைக்க முத்திதரும் தலமென் றும் புராணத்திற் சொல்லப்படுவதுமாகிய சிறந்த தலமாம்.

பரமசிவம் மலையுருவமானதற்குக் காரணம் யாதெனின், ஒரு கற்பத்தில் மஹாவிஷ்ணுவும், பிரமதேவனும் தான்தான் பிரமமென்று வாதித்துப் போரிட்டதைத் தீர்க்கும் பொருட்டுச் சிவபெருமான் அக்கினிமலையாய் அவர்கள் மத்தியில் நின்று கலகத்தைத் தீர்த்தருளி அவர்கள் வேண்டுகோளினுல் ஒரு சிறிய மலையாயுருக்கொள, அதைக்கண்ட பிரமதேவனும், மகா விஷ்ணுவும் சுவாமியை நோக்கி இம்மலையினுச்சியில் ஒரு சோதி எந்நாளுந் தெரியும்படி கிருபை செய்யவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். அதற்குச் சிவபெருமான் அங்ஙனமாகுக என்றருளினர். அன்றியும், கார்த்திகை மாதத்தில் வரும் கார்த்திகை நக்ஷத்திரத்தில் இம்மலையினுச்சியில் ஒரு சோதி காண்பிப்போம். அச்சோதியைத் தரிசித்தவர்கள் தரித்திரமும் வியாதியும் நீங்கி இஷ்டகாமியங்களைப் பெற்று வாழ்வார்கள். இவையல்லாமல் அரசர்களும் தவசிகளும் தரிசிப்பார்களாகில் இடையூறின்றி வாழவார்கள். அன்றியும் இதைத் தொழுதவர் களுக்கும் தரிசித்தவர்களுக்குமே யல்லாமல் அவருடைய கோத்திரத்தில் இருபத்தோரு தலைமுறைக்கும் மோக்ஷங் கொடுப் போம் என்று திருவாய் மலர்ந்தருளினுர்.

மேலும் இம்மலை ஜனனமரணமென்னும் வியாதிக்கு மருந்து போல இருப்பதினுல் மலைமருந்தென்றும் அழல்வண்ணமா யிருப்பதினுல் அருணுசலமென்றும் பெயர் பெறக்கடவது. இந் நாமத்தை ஒரு தரஞ் சொன்னவர்க்குப் பஞ்சாக்ஷரத்தை மூன்று கோடி தரம் உச்சரித்த பலன் வருமென்று அருளிச்செய்தார் (திருமாலுக்கும் நான்முகனுக்கும் அண்ணுதமலை யாதலின் அண்ணுமலை என்று தமிழிற் பெயர் வழங்கலாயிற்று.)

அதற்குப் பிரமனும் மகாவிஷ்ணுவும் ஆனந்தமடைந்து சிவபெருமானைப் பார்த்துத் தேவரீர் இவ்வாறு மலைக்கோலமா யிருந்தால் அடியேங்கள் எப்படிப் பூசை செய்யக்கூடும்? ஆகை யால் இந்த மலையின்கீழ் ஒரு சிவலிங்கமூர்த்தியா யெழுந்தருள

வேண்டுமென்று வேண்டிக்கொண்டார்கள். சிவபெருமான் அப்படியே சிவலிங்கமூர்த்த மாவோமென்று அந்த மலையி னுள்ளே மறைய, உடனே அம்மலையினிடத்தில் சிவலிங்கந் தோன்றியது. அதைக்கண்டு பரமானந்தராய் மயனென்னுந் தேவதச்சனுல் ஓராலயங் கட்டுவித்தார்கள். அப்போது அந்த இடத்தில் வளப்பம் பொருந்திய நகரமும் முந்நூறு தீர்த்தங் களும் உண்டாயின. அல்லாமலும் ஆகாயகங்கை கிணறு களாகவும், கற்பக விருக்ஷங்கள் மரங்களாகவும் வந்திருந்தன. தேவர்களும் ரிஷிகளும் மனிதர்களாக வந்து பிறந்தார்கள். அரம்பா ஸ்திரீகள் தாசிகளாகப் பிறந்தார்கள். ஆகையால் எல்லா ஸ்தலங்களும் உடலென்றும், அருணசல ஸ்தலம் முக மென்றும் அதில் சிவபெருமான் கண்ணென்றும் இந்த ஸ்தலத் தின் பெருமையை அளவிட்டுச் சொல்லுதற் கருமையென்றும், இரண்டாம் சம்புவாகிய நந்திகேசுரர் மார்க்கண்டேய முனி வருக்கு அநுக்கிரகஞ் செய்தார். அக்காலத்தில் சிவபெருமான் திருவாய் மலர்ந்தருளியபடி அம்மலையின்மேல் கார்த்திகை மாதத்தில் கார்த்திகை நக்ஷத்திரத்தில் சோதி தரிசனமாகிக் கொண்டுவந்த பாவனையாக இப்போதும் அந்த மலையின்மேல் தீப தரிசனமாகின்றபடியால் அத்தினத்தில் இந்திர தீர்த்தம் முத லாகிய தீர்த்தங்களில் ஸ்நானஞ்செய்து, கிரியை வலம் வந்து, தங்கள் சக்திக்குத் தக்கபடி தர்மங்களையுஞ் செய்து அருண சலேசுரரைத் தொழுது, தீபதரிசனமுஞ் செய்து, துதிப்பவர்கள் அளவிலாச் சம்பத்தையும் மோக்ஷத்தையும் அடைவார்கள். இவை அன்றியும்,

ஆதிவாரத்தில் அந்த மலையை வலஞ்செய்பவர்கள் சூரிய மண்டலத்தைப் பிளந்து சுவபதத்தைத் தமக்கு இடமாகச் சேர்த்துக்கொள்வார்கள்.

சோமவாரத்தில் வலம் வந்தவர்கள் தேவேந்திரனைப்போல ஏழுலகத்தையும் ஆண்டு சிவசாருப்பியத்தை அடைவார்கள்.

மங்களவாரத்தில் வலஞ்செய்பவர்கள் தங்கள் கடனையும் தரித்திரத்தையும் சங்கிலித் தொடர்போல் வருகின்ற ஏழு பிறப் பையும் நீக்குவார்கள்.

புதவாரத்தில் சிவபெருமானைப் பிரதட்சிணஞ் செய்வோர்கள் நாலு வேதங்களையும் ஆறு சாஸ்திரங்களையும் அறுபத்து நான்கு கலைகளையும் தெளிந்து தேவர்களாய்ப் பின் முத்தியை அடைவார்கள்.

குருவாரத்தில் வலம் வந்தவர்கள் திரிமூர்த்திகளும் புகழத் தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் மேலாவார்கள்.

சுக்கிரவாரத்தில் வலஞ்செய்தவர்கள் விஷ்ணு பதத்திற் சேர்வார்கள்.

சனிவார வுதயத்தில் வலம் வந்தவர்களுக்கு நவக்கிரகங்களும் பதினோராமிடத்தின் நற்பலனைக் கொடுக்கும். சிவநிசியிலும் வருஷப் பிறப்பிலும் ஐப்பசி முதலாகிய மூன்று மாதங்களிலும் வலம் வந்தவர்களுக்கு மேற்சொன்ன பலன்களிலும் அதிகமான பலன் சித்திக்கும்.

உருவந் தெரியாமல் சித்தரும் தேவரும் இத்திருமலையை வலஞ்செய்வதால் மற்றவர்கள் கிரிப்பிரதட்சிணஞ் செய்யும் போது, வாகனத்தின்மே லேறிக்கொண்டு வாராமலும், போர்வை போர்த்துக்கொள்ளாமலும், குடை பிடித்துக்கொள்ளாமலும், தாம்பூலம் தரிக்காமலும், வேறொரு சிந்தனை யில்லாமலும், மனத்தினால் வந்தனஞ் செய்து அருணசலேசுரரையே சிந்தித்துக் கொண்டு மிகுந்த பயபக்தி யுள்ளவர்களாய் நடைகொள்ள வேண்டுமென்றும், அந்த நாளில் விரதமிருந்து சிவதரிசனஞ் செய்து ஆலயத்திற்குப் போகின்றவர்கள் அவ்விடத்திலிருக்கும் ஆதிசைவாசாரியர்களைக் கொண்டு வில்வார்ச்சனை முதலியவைகளைச் செய்வித்தால், தங்கள் கையினாற் செய்த பேறு கிடைக்குமென்றும் பிரமதேவர் சனகரிஷிக்குச் சொன்னார்.

ஓதிமா மலர்கள்தூவி யுமையவள் பங்கா மிக்க
சோதியே துலங்கு மெண்டோட் சுடர்மழுப் படையி னானே
யாதியே யமரர் கோவே யணியணா மலையு ளானே
நீதியா னின்னை யல்லா னினையுமா நினைவி லேனே.

திருச்சிற்றம்பலம்

II

ஸ்ரீ கைலாயத்தில் உலகமாதாவாகிய பார்வதியாரோடு சிவ பெருமான் எழுந்தருளியிருக்கும்போது அவ்விடத்தில் ஏற்றி யிருந்த நெய்த் தீபங்களில் ஒரு தீபம் அணைந்து போகின்ற தருணத்தில் ஓர் எலியானது அதிலிருந்த நெய்யை உண்ணப் போனபோது, அவ்வெலியின் முகமானது, அணைந்துபோகிற வர்த்தியை தூண்டிய மாத்திரத்தில் பிரகாசம் அதிகப்பட்டது. அதற்குச் சிவபெருமான் கிருபைகூர்ந்து அவ்வெலிக்கு மானிட சரீரமும் அரசும் மற்றப்பேறுந் தந்து, பூமியில் பிறந்து சகல ஐசுவரியத்தையும் அநுபவித்திருக்கக் கட்டளையிட்டனர். அச் சக்ரவர்த்தியார் ஒருநாள் சிவதரிசனத்துக்குப்போக எத்தனித்துத் தன் இராச சின்ன முதலிய சகல ஆடம்பர விபவத்துடன் சிவாலயத்திற்குட் பிரவேசித்துப் பிரதட்சிணம் வருகையில் அவ்விடத்தில் ஏற்றியிருந்த தீபநெய்யின் ஒரு துளி இந்தச் சக்கிாவர்த்தியின் தேகத்தில் ஒழுகினது. அதனுல் அந்தச் சக்கிரவர்த்தியின் தேகமுழுமையும் இரணங்கண்டு வேகுகாலம் வருத்தப்பட்டுக்கோண்டிருக்கும்போது ஒருநாள் சிவபெருமான் கிருபைகூர்ந்து " சக்கிரவர்த்தியே நீ அகங்காரியாகையால் இத் தீங்கு நம்மாலுனக்குண்டாயிற்று. நீ இன்றுமுதல் நெய் முதலிய பொருள்களால் ஆலயங்களுக்குத் தீபமேற்றுவையாஞல் உனக்கு இந்த இரணந்தீர்ந்து சாயுச்சிய பதங்கிடைக்கு "மென்று அசரீரியாய்த் திருவுளம் பற்றியதைக் கேள்வியுற்ற சக்கிர வர்த்தி ஆநந்தமடைந்து அந்தக் கட்டளையின்படியே அன்று முதல் சிவாலயங்களிலும் மற்ற இருள்சூழ்ந்த ஆரணியங் களிலும் தீபம் ஏற்றிக்கோண்டு வருங்காலங்களில், ஒருநாள் ஸ்ரீகைலாயபதியாகிய சிவபெருமான் திருவுளமிரங்கிக் கார்த்திகை மாதம் பூர்வபக்ஷம் கார்த்திகை நக்ஷத்திரத்தில் தேசோமயமா யெழுந்தருளி அச் சக்கிரவர்த்திக்குச் சாயுச்சியபதமளித் தருளினர்.

அக்காலத்தில் சிவதரிசனத்துக்கு வந்திருந்த தேவர்க ளெல்லாம் அந்தச் சோதியைக்கண்டு பயந்து துதிசெய்து சுவாமியினுடைய உஷ்ணந் தணியும்பொருட்டுப் பொரியவல் நிவேதனம் பண்ணிஞர்கள். இவ்வாறு கைலாயபதியாகிய சிவ பெருமான் மாபலிச்சக்கிரவர்த்திக்குச் சோதிசொருபமாகத்

தரிசனங் கொடுத்த காரணமாகச் சிவாலயங்கள் தோறும் கார்த்திகை மாதம் பூர்வபக்ஷம் கார்த்திகை நக்ஷத்திரத்தில் தீபம் வைக்கவும் சுட்கப்பனை (சொக்கப்பானை) கட்டவும் ஆயின.

கார்த்திகை நக்ஷத்திரத்துக்கு முன்னாள் பரணி நக்ஷத்திரஞ் சாயங்காலை அதிவாச தீபத்தில் அக்கினி காரியம் முதலியவைகளின் மூலமாய் மகாலிங்கமூர்த்தியை ஆவாகனம்பண்ணி அந்தத் தீபத்தைச் சுவாமி சன்னிதானத்திற்றானே பூசித்து வைக்க வேண்டும்.

மற்றையநாள் சாயங்காலை அர்த்த சூரியமண்டலத்தில் தென்னைமரம், பனைமரம், பாக்குமரம், வாழைமரம், மூங்கில் என்னும் இம்மரங்களில் ஒருவிதமரத்தை ஆலயத்திற்கும், இந்திர திக்குக்கும் மத்திய ஸ்தானமாகிய பிரமஸ்தானத்தில் நாட்டவேண்டும். இந்த மரத்துக்குத் தீபதண்டமென்று பெயராம் தண்டவுன்னதப் பிரமாணம், சுவாமி கர்ப்பகிருகத்துக்கு விமானம் எவ்வளவு உயரமோ அவ்வளவு உயரமாவது விமானம் கழுத்தினளவாவது இருக்கவேண்டும். இவ்விதமான தீபதண்டத்துடன் உலர்ந்த தென்னோலையாவது பனையோலையாவது பாக்கோலையாவது வாழைச்சருகாவது தாழஞ்சருகாவது அசோகச் சருகாவது கொண்டு விமானம்போல் கட்டவேண்டும்.

மேற்சொன்ன பரணி நக்ஷத்திர மறுநாளாகிய கார்த்திகை நக்ஷத்திரத்தில் பஞ்சமூர்த்த சமேதராய்ச் சோமாஸ்கந்த மூர்த்தியை உற்சவாலங்காரத்துடன் எழுந்தருளப்பண்ணி, ஷ தீபம் சுவாமிக்கு முன்னே வரும்படியாகச் செய்து தீபதண்டத்தைச் சமஸ்காரப் படுத்திக்கொண்டு அத்தீபத்தை அத்தண்டத்தின் மேல் வைத்துச் சருகுகளைக் கொளுத்திவிட்டு அந்தச் சருகுகள் எரிந்த பின்பு மேற்படி தண்டத்தைச் சேதித்து விடவேண்டும். அச்சோதியைச் சிவபெருமானாகப் பாவனை செய்து தரிசிப்பவர்களுக்கு இம்மையில் செல்வமும் மறுமையில் மோக்ஷமும் கிடைக்குமென்று ஆகமங்கள் சொல்லுகின்றன.

தண்டவிதி

உத்தமம் தென்னைமரம்,

மத்திமம் பனைமரம்,

அதமம் பாக்குமரம்,
அதமாதமம் வாழையும் மூங்கிலும்.

தண்டவுன்னதப் பிரமாணம்

உத்தமம் விமானத்தளவு,
மத்திமம் கழுத்தளவு,

மலையைச் சேர்ந்த ஸ்தலங்களில் நக்ஷத்திரம் பிரதானமாகவும் சமுத்திரத்தைச் சேர்ந்த ஸ்தலங்களில் பௌர்ணமி திதி பிரதானமாகவும் தீபம் வைக்க வேண்டுமென்று ஆகமங்கள் கூறுகின்றன.

அண்ணாமலையனை
உண்ணாமுலையொடு
பண்ணாற்பழிச்சிடில்
நண்ணாவினைகளே.

இந்த அருணாசலத்தின் மான்மியத்தைப் படித்தவர்களும் கேட்டவர்களும் எழுதினவர்களும் எழுதி வைத்துக்கொண்டவர்களும் அதைப் பூசித்தவர்களும் கரியகடல் சூழ்ந்த பூமி முழுதுங் காத்துத் தகுந்த புத்திர சம்பத்தும் போக சவுக்கியமும் தழை பெற வாழ்ந்து யாவருக்கும் ஆதாரமாகிய அருணாசலேசுரர் கிருபையினாலே அவர் திருவருளுக்குப் பாத்திரராவார்கள்.

திருச்சிற்றம்பலம்

(சைவம் ம. 7, இ 4, பக்கம் 86-92)

நிந்தாஸ்துதி

41. முளரிவிழியா னஞ்சக்க ரத்தினான் பாரதத்தை முடியச் செய்தான், வளமருவு மாவுரத்தா னிராவணனைச் செற்றானீர் வனத்தார் பூண்டா, னளிகோளு மாதவன் கண்ண னன்னவா கன்றந்தை யரிசேர்கையன், பளகறுசீ ரானையுவந் தானென்று சிவனையாம் பணியலாமே.

தாயுமானவர் நெறி

திருவாதவூரன்

முன்னாளில், இந்நாளிற்போல நூல்களை அச்சிடுதல் முதலியவை இல்லாமையால், பல இடர்ப்பாடுகள் நேர வழி இருந்தன. ஒருவர் எழுதியவற்றை மற்றொருவர் எழுதியனவாக்கொள்ள இடமிருந்தது. அச்சுப்பொறி வந்த பின்பும் ஒருவர் செய்தநூல் மற்றொருவர் செய்ததாக வெளிவருகின்றதென்றால், அப்பொறியில்லாத பழங்காலத்தில் அம்மாற்றம் உண்டாவதில் ஐயம் உண்டோ? சிவஞான சித்தியார்க்கும் சிவப்பிரகாசத்துக்கும் எழுதியவர் அல்லாத பிறர்பெயரால் வெளிவந்தவுரைகள் இன்றும் நிலவுகின்றன. இத்தகைய மாற்றங்கள் போலிப் புகழையும் பொய்வாழ்வையும் விரும்பும் மாக்கள் இருக்கும் அளவும் உலகில் இருக்கும்.

‡நம் தாயுமானவர் அருளிய திருப்பாடற்றிரட்டும், பாட்டைப் பற்றிய வரையில் அத்தகைய மாற்றத்திற்கிடமாக இல்லை. அவற்றின் பொருளைப்பற்றிய நோக்கத்தில் முற்றும் மாறான கொள்கை உலகில் ஒரு கூட்டத்தாரால் பரவிவிட்டது. அதை உலகர் அறியச் செய்வது சைவசித்தாந்திகளின் முக்கிய கடனாகும். சொற்களவு பொருட்களவு என்னும் இருவகைக் களவும் இங்குக்காணலாம்.

தாயுமானப் பெருந்தகையார் பதினேழாவது நூற்றாண்டில், பிற்பாதியின் தொடக்கத்தில், சுத்தாத்துவித சித்தாந்த முத்தி எய்தினார். (கி. பி. 1659) அவரது சமாதி இராமநாதபுரத்துக்குக் கீழ்பால் இலக்குமிபுரம் ஊருணிப்பக்கத்தில் இருக்கின்றது. இப்பெருமான் முத்திபெற்ற காலத்தில், (இவர் ஜீவன்முக்தராயிருந்தபோது) உடனிருந்து சிவாநந்தத்தில் தோய்ந்தவர்களாகிய கோடிக்கரை ஞானிகள்,

---

‡ 2—11—'56 அன்று திருவெண்காட்டில் நிகழ்ந்த மெய்கண்டார் திருநாளில், சொற்பொழிவாற்றிய துணைவர் வித்துவான், சைவத்திரு. சி. அருணைவடிவேலு முதலியார் அவர்களும் இக்கருத்தை வெளியிட்டார்கள்.

" துகளறு சாலி வருடம்ஆ யிரத்தைந்
நூற்றேடேண் பத்தோன்று தோடரும்
மிகுசுப கிருதாம் வருடம்தை மாதம்
வேண்மதி வாரநாள் விசாகம்
மகிமைசேர் பூர்ணைத் திதியினில் அருத்த
மண்டல சமயத்திற் கங்கை
திகழ்கரை யதனிற் ருயுமா னவனுர்
சிவத்தினிற் கலந்தநற் றினமே "

என்று பாடினுர்கள். இதனுல் தாயுமானவரடைந்த காலமும், அக்காலத்தின் சிறப்பும், சிவமான வுண்மையும் விளங்கும். தாயுமானவர் நேறி இது என்று இப்பாட்டாலும் உணர்தல் கூடும்.

தாயுமானவர் சீடர்களுட் சிறந்த அருளையர் என்பவர் அருளையர் (அம்மையப்பர்) ஆகவே விளங்கினவர். அவ் வுண்மையை அவர் குருதுதியாக அருளிய " அருள் வாக்கிய அகவல் " மிக்க தேளிவாக வுணர்த்தும். அம் முனிவர், தாயுமானவர் அடைந்த காலத்திலும் பாடியிருக்கின்ருர். அவற்றுள் ஒன்று,

" உலகினுக் கணியாம் இராமநா தபுரத்
துயர்நறை வாவியின் குணபால்
மலர்நிறை வனத்திற் சிவத்துறு நிட்டை
மருவிமெய் யோருவிவே தாந்தத்
திலகிய போருளாய் வானமாய் நிறையும்
எந்தையே யேனதுபந் தமும்போய்
நிலையுற நினது திருவருள் அளிப்பாய்
நின்மலா னந்தமே போற்றி "

என்பது. இத்துதியால், தாயுமானவர் நேறி இன்னதேனல் இனிது விளங்கும். " சிவத்துறு நிட்டை " என்றதால் வேதாந்தம் பிறர் கூறும் வேதாந்தம் அன்று என்பது நன்கு உணரப்படும். " தீதில் பராபரமான சித்தாந்தப் பேரோளி " யானவர்க்கு மாயா வாதம் மிக்க தோலைவிலுள்ளது.

ஸ்ரீ சிவஞானபாடியத்துள், " அறிதலோப்புமையாற் சரியை முதலிய நான்கும் ஞானமேயாம் " எனவும் ஆயினும், " அரும்பு மலர் காய்கனி " (பராபரக்கண்ணி - 157) ஆதல் போலச் சோபான முறையாகிய தம்முள் வேறுபாட்டான் முறைே

ஒன்றற்கொன்று அதிகமாய் நான்காம் எண்ணு முறைமைக்கண் நின்ற ஞானமே முடிவாகிய ஞானமாம் எனவும் ...... உணர்ந்து கொள்க'' எனவரும் பகுதியுள், தாயுமானவர் திருவாக்காகிய

''விரும்புஞ் சரியைமுதல் மெய்ஞ்ஞானம் நான்கும்
அரும்புமலர் காய்கனிபோல் அன்றோ பராபரமே''

என்பதிலடங்கிய உவமம் மேற்கோளாதலறிக.

ஸ்ரீ மாதவச் சிவஞானயோகிகள் தம்முரையுள் தாயுமானவர் திருப்பாடல்களினின்றும் பல மேற்கோள் காட்டாமைக்குக் காரணம் சிவஞானபோதம் சிவஞான சித்தியார் முதலியவற்றின் காலத்திற்குப் பிற்பட்ட தென்பதே. முன்னூற்குப் பின்னூலை மேற்கோளாக் காட்டுதல் தக்கதன்று. மாபாடிய கருத்தர் தம் நெறியின் வேறும் மாறும் கொண்ட நெறியினர் பாடலைத் தம் நெறிவிளக்கத்திற்கு மேற்கோளாகக் கொள்வாரோ? கொள்ளார்: தாயுமானவர் பாடற்பகுதியை மேற்கொண்ட ஆசிரியர் சிவஞான சுவாமிகளின் திருவுள்ளத்தை நோக்கினால், தாயுமானவர் நெறி இன்னதெனல் விளங்கும். இதுவரையில், புறச் சான்றுகச் சில காட்டப்பட்டன. இனித் தாயுமானவர் பாடலினின்றே அவரது நெறியை உணரலாம்.

(க)

தாயுமானவர் சுத்தாத்துவித சைவ சித்தாந்த நெறியில், பேரின்பம் பெற்றவர் என்பதற்கு அவர் பாடல்களிற் காணுஞ் சான்றுகள் பலவுள. அவற்றுட் சில இங்குக் காட்டப்படும். பிறவற்றை அந்நூற்குள் நுழையும் அறிஞர் அறிவர்.

தாயுமானவர்க்குத் திருமூலர் மரபில் வந்த மௌனகுரு தேசிகர் உபதேசித்தருளிய நெறி, சைவசித்தாந்த நெறியே என்பது சொல்லாமலே பெறப்படும். சைவத் திருமுறைகளுட் பத்தாவதன் ஆசிரியராகிய திருமூலர் மரபு என்றலும் அவரது சித்தாந்த நெறியை அன்றி வேற்று நெறி தோற்றுமோ? திருமந்திரத்தைத் தம் நெறிக்குரியதாகக் கூறிக்கொண்டு காட்டிவருவோர், அதன்வழி வந்த தாயுமானவர் பாடலைத் தம் நெறிக்கு உரியதாகக் கொள்வதில் (அவர்க்குத்) தடை ஒன்று உண்டோ?

'' எந்தை வடவாற் பரம குருவாழ்க வாழ அரு
ளியநந்தி மரபு வாழ

என்றடியர் மனமகிழ வேதாகமத் துணி
பிரண்டில்லை ஒன்றென்னவே
வந்த குருவே வீறு சிவஞான சித்திநெறி
மவுனோப தேச குருவே
மந்த்ரகுருவேயோக தந்த்ர குருவே மூலன்
மரபில்வரு மவுன குருவே.''

என்பதில், தம் நெறியையும், அதற்குரிய பெயரையும், உபதேச குருவையும், அவர் மரபையும், அம்மரபிற்குரிய வேதாகமங் களாகிய பொருணூலையும். அவையடங்கும் அரனடியையும் தெளிவாகக் கிளந்து வாழ்த்தியருளிய தாயுமானவர் திருவுள் ளத்தைச் சைவ நன்மக்கள் அறியப் பொழுதின்றி, ''இருள்தரு துன்பப் படலம் மறைப்ப மெய்ஞ்ஞான மென்னும் பொருள்தரு கண் இழந்து உண் பொருள் நாடிப்'' பொழுது போக்குவது மிக்க வருத்தம் விளைப்பது ஆகும். அது மட்டுமோ? தாயுமானவர் பாடலைப் பிறர், தம்நெறிக் குரியன என்று கொள்ளவிட்டுத் தம் முன்னோர் தேடிவைத்த அருட் செல்வத்தை இழக்கும் நிலையிலிருக்கின்றனர் அம்மக்கள்.

சிவாலயங்களை வழிபடுவோர் தொகை குறைந்து விட்டது. சிவநூல்கள் கற்போரில்லாமல் மறையலாயின. சிவாசாரியர்கள் வேற்றுக்கொள்கையை விரும்புகின்றார்கள். திருமுறைகள் இரப்போர் சொல்லி வரும் தெரு முறையாயின. இல்லையெனல் நேர்ந்துவிடுமோ என்றஅச்சமும் உண்டாகின்றது. யானேகடவுள் எனக் கொண்டவனுக்கு இவை எல்லாம் ஏன்? ஏகான்மவாதிகளை இத்தமிழகத்தில் எங்குந் தலைகாட்டாமல் இறைவன் செய்தருளுங் காலத்தில்தான், சிவாலயம் சிவநூல் சிவனடியார் சிவசாதனம் எல்லாம் விளங்கப்பெற்று உய்வோம்.

'' முத்தாந்த வித்தே முளைக்குநில மாயெழுந்த
சித்தாந்த மார்க்கச் சிறப்பே பராபரமே. ''

என்று தம் நெறியையும் அதன் சிறப்பையும், அந்நெறியின் பயனையும் தெள்ளத் தெளிவாக விளக்கிய தாயுமானவரையே சைவசித்தாந்தி அல்லர் என்று கூறித் தமிழகத்தின் கோயில் வழிபாடு, சமயாசாரம், சமயாதீதக் கோட்பாடு எல்லாவற்றையும் குழறுபடை வழக்கத்துக்கு இடமாக்கும் பெருந்தீமை மிகுந்து விட்டது. தாயுமானவர் நெறிக்கு மாயாவாதக் கொள்கை முரண் என்பது பின்னர், அவர் அருளிய பாடற்பகுதிகளால் விளக்கப்படும்.

(தொடரும்)

அடியார் பெருமை

இது அடியார்களது பெருமையென விரிந்து பொருள் தரும். முதலில் அடியாராவார் யார் என்றும் பின்னர் அவர் பெருமை எது என்றும் ஆராய்வாம். சைவ சித்தாந்த சாத்திரம் அடியாரிலக்கணங் கூறுங்காலத்து இருவினையொப்பு, மலபரிபாகம்' சத்திநிபாதம் ஆகிய இவை அடைந்தாரையே அடியாரெனக் கூறும். அதாவது, இருவினையொப்பு எனில், நல்வினையால் வரும் இன்பத்தினையும் தீவினையால்வரும் துன்பத்தினையும் இரண்டையும் ஒன்றுகக் கருதுவதாம். மலபரிபாகமாவது ஆணவமலத் தடிப்பு நீங்கி யான் எனது என்னும் அகப்பற்றும் புறப்பற்றும் நீங்குதல். அதாவது, மலம் தனது சத்தி தேய்தற் குரிய துணைக்காரணங்கள் எல்லாவற்ருேடும் கூடுதலேயாம்.

சத்திநிபாதமாவது அருட்சத்தி பதிதல். அதாவது, சத்தி நிபாதம் என்னும் சொல்லியல்பு சத்தியினது வீழ்ச்சி என்றவாறு. "நி" என்பது ஏற்றமாக என்னும் பொருள் குறித்து நின்றதோர் இடைச்சொல். ஓர் அவைக்களத்தின் நடுவே ஓர் கல் வந்து வீழுமாயின் அவ்வீழ்ச்சி அவ்வவைக்களத்துள்ளாரை ஆண்டு நின்றும் அகல்விக்கும். அதுபோலச் சத்திநிபாதம் நிகழ்ந்த அளவே அது அவ் ஆன்மாவை மனைவி மக்கள் முதலிய தொடர் புடையாரிடத்து ஆசை நீங்கச் செய்து உலக வாழ்க்கையை வெறுத்து உண்மைக் குரவனை நாடித் தேடுமாறு செலுத்துதலின் அவ்வொப்புமை தோன்றச் சத்தி நிகழ்ச்சி என்னுது சத்தி வீழ்ச்சி என்று சொல்வது. இதனைச் சிவஞான சுவாமிகள் சரியை முதல் நால்வகைப்பட்டு அவற்றுள்ளும் பலவேறு வகைப்பட்டு நிகழ் தற்கு ஏற்பப் பக்குவமாதற்பொருட்டு மலத்திற்கு அனுகூலமாக நின்று நடாத்திய திரோதானசத்தி, மலபரிபாகம் எய்தியவழி, அக் கருணை மறமாகிய செய்கை மாறிக் கருணையெனப்படும் முன்னைப் பராசத்திருபமேயாய் ஆன்மாக்கள் மாட்டுப் பதிதலாகிய சத்திநி பாதமும் சோபான முறையால் மந்தம் மந்ததரம் தீவிரம் தீவிர தரம் என நால்வகைப்பட்டு அவற்றுள்ளும் பல வேறு வகைப் பட்டு நிகழ்வதால் அச் சத்திநிபாதத்திற்குக் காரணம் மலபரி பாகம் என்பர். என்னை ? "வேண்டுதல் வேண்டாமை யில்லா னடி சேர்ந்தார்க் கியாண்டு மிடும்பையில" என்னும் திருக் குறளின்படி விருப்பு வெறுப்பு அற்றவனுகிய இறைவனது திரு

வடியைச் சேர்ந்தார்க்கே எக்காலத்தும் துன்பமில்லை. ஆதலால் அவ்விதம் இறைவனடியைச் சேர விரும்பும் ஆன்மா விருப்பும் வெறுப்பும் அற்று இருத்தல் வேண்டும். ஆதலால் இருவினை யொப்பென்பது முதலில் வேண்டுவதாம். " யானெனதென்னும் செருக்கறுப்பான் வானோர்க்குயர்ந்த வுலகம்புகும் " என்றபடி பொன்விலங்கைத் தரிப்பதுபோல் வானுலகத்துச் சென்றும், மீண்டும் பிறப்பினிற் செலுத்தும் இன்பமில்லாத பதவியாகிய தேவ உலகத்தைக் காட்டிலும், உயர்ந்த உலகமாகிய மோட்ச உலகத்தில் செல்லுதல் வேண்டுமாகில், யான் எனது என்னும் அகமும் புறமுமாகிய பற்றுக்கள் நீங்கவேண்டும். பின்னர் அருள் வடிவினனாகிய அருளாளனது திருவடியை அடைதல் வேண்டு மாயின், அவனது அருட்சத்தி பதிந்தாலன்றி அவனடியை அடைதல் கூடாதாதலால், அருட் சத்தி பதிதலே வேண்டும்.

இவ்வித லட்சணமுடையவரே அடியாராவர். இது கருதி யன்றோ புண்ணிய உடலாகிய மானிட உடல் தாங்கினோர், இருவித அறமாகிய இல்லறம் துறவறங்களுள் " இல்லற மல்லது நல்லற மன்று " என்றபடி இல்லறம் ஒன்றையே கருதி ஓர் இல்லறக் கிழத்தியை மணந்து பெறுவதற்கரிய மக்களைப் பெற்று, விருந்தினரையும் சுற்றத்தாரையும் ஓம்பி, பிறர்மனை நயவாது, இன்சொற்கூறி, அன்புடையராய், பொறையுடன் வாழ்ந்து இம்மையிற் புகழுடையராய் நின்றனராயினும், " வையத்து வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும் " என்றபடி தாம் இல்லறத்தால் அடையப் போகும் பயன் சுவர்க்க இன்பமேயன்றிப் பிறப்பை அறுத்தற்கு ஏதுவாகாது என்று எண்ணித் தம்பொருட்டும், மனைவியர், மக்கள், சுற்றத்தார் விருந்தினர் பொருட்டும் போற்றிநின்ற உடலை வெறுத்து உயிர்க்கு உறுதி தேடுவான் எண்ணி, முன்பு தாம் பயின்ற அன்பை அருளாக்கி, எவ்வுயிரையும் தம் உயிரா கப் பாவித்து, புலையுங் கொலையுங் தவிர்த்து, தவம் முயன்று வாய்மை பேசிக் கூடாவொழுக்கம் நீத்து, நிலையாமை உணர்ந்து நீங்காத இயல்புடைய அவாவினை மற்றவைகளிடத்துச் செலுத் தாது நித்தியானந்தமாகிய இறைவனது திருவடியிற் செலுத்தி வாழ்கின்றவர் ஆகின்றனர்.

அன்றியும் அடியாராவார், மேற்சொல்லிய லட்சணங் களுடன் பொருந்தியிருத்தலோடு ஆண்டவன் ஒருவன்; ஆன் மாக்கள் அவன் அடிமைகள். அவனை அகமும் புறமுமாகத்

தேரிசித்தல் வேண்டும் என எண்ணிச் சரியை கிரியை யோக ஞானங்களாகிய படிகளில் நின்று சர்வசங்காரகர்த்தாவே இறைமைக் குணங்கள் எல்லாம் உடைய இறைவன் என்று தேர்ந்து அவன் திருவடிப் போதாகிய அருட் சத்தியை அடைய ஐந்தெழுத்தை ஓதிச் சர்வசங்காரகாரணனுகிய சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் சிவாலயங்களேயும் அவரது அடியவரையும் சிவனுகவே பாவித்து வணங்குவோர் ஆதல் வேண்டும். இவ்வித லட்சணங்களேல்லாம் உடையோர் அறுபான்மும்மை நாயன்மாரும், சந்தானகுரவராகிய நால்வரும், சேந்தனுர் முதலிய ஒன்பதின்மரும், பட்டினத்தடிகள் முதலிய பதிஞேராந் திருமுறையில் சோல்லியவர்களுமேயாவர். இனி இவர் பெருமை கூற வேண்டுமாயின், சமயாசாரிய சுவாமிகளாகிய நால்வர் சேய்த அற்புதச் சேயல்களும் மற்றைய நாயன்மார்களும் ஏனையோரும் சேய்த அற்புதச் சேயல்களும் அவர்களது பேருமையை விளக்குவது ஆகும். இனி ஆசாரிய சுவாமிகள் நால்வரது சேயல்களேயும் ஏனையோர் சேபல்களேயும் சுருக்கமாகக் கூறுவோம்.

"பாலைநேய்தல் பாடியதும் பாம்போழியப் பாடியதுங்
காலனையன் றேவிக்கராங் கோண்ட—பாலன்
மரணந் தவிர்த்ததுவும் மற்றவர்க்கு நந்தங்
கரணம் போலல்லாமை காண்."

"ஓடஞ் சிவிகை யுலவாக் கிழியடைக்கப்
பாடல் பனைதாளம் பாலைநேய்த—லேடேதிர்வேப்
பேன்புக் குயிர்கோடுத்த லீங்கிவைதா ஞேங்குபுகழ்த்
தேன்புகலி வேந்தன் சேயல்."

"கோல்கரியி னீற்றறையி னஞ்சிற் கோலைதவிர்தல்
கல்லே மிதப்பாய்க் கடனீந்தல்—நல்ல
மருவார் மறைக்காட்டில் வாசல் திறப்பித்தல்
திருவா மூராளி சேயல்."

"மோக மறுத்திடில் நாம்முத்தி கோடுப்பதேன
ஆகமங்கள் சோன்ன அவர்தம்மைத்—தோகையர்பாற்
றூதாகப் போகவிடும் வன்றேண்டன் தோண்டுகளே
யேதாகச் சோல்வேன் யான்."

"பாய்பரி யேறந்தப் பரமானந்தப் பரனைத்
தூயதிரு வாய்மலராற் சோற்சேய்து—மாயக்
கருவாதை யாமறியா வாறுசேய்தான் கண்டாய்
திருவாத வூராளுந் தே."

என்னுந் திருச்செய்யுள்களே சமயாசாரிய சுவாமிகளது புகழையும் அற்புதங்களையும் நிலைநாட்டும். அதாவது பசுகரணம் நீங்கப்பெற்றுச் சிவகரணமாகி அருட்டிருமேனிகொண்ட இறைவனது திருவடியையே பற்றாகக்கொண்டு பற்றுடையார் பலர் பிறவிப் பிணியைப் போக்கி முத்தியங்கரையில் சேர்ப்பித்தார்கள் என்று நாம் அறிகின்றோம். இவ்விதப் பெருமைவாய்ந்த உண்மை நாயன்மார்கள் எழுந்தருளிய சற்சமயமாகிய சைவ சமயத்தில் தோன்றிய ஆன்மாக்களாகிய நாம் அவ்வடியவரது திருவடிச் சுவடுகளைப் பின்பற்றி, நில்லாத உலக வாழ்வைத் துறந்து, நிலையாகிய இன்பத்தினைப் பெறும் பொருட்டு “ ஓர்த்துள்ளம் உள்ளது உணரின் ஒருதலையாப் பேர்த்துள்ள வேண்டாப் பிறப்பு ” என்றபடி அவனது திருவடியை எக்காலமும் எண்ணி “ பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும் செம்பொருள் காண்பதறிவு ” என்றபடி அறியாமையால் உண்டாகும் பிறப்பென்னுங்கடலைத் தாண்டத் தோற்றக் கேடுகளில்லாத செம்பொருளாகிய சிறப்பினையுடைய திருவடிப்புணையை அடைவதற்கு முயல்வோமாக.

(சித்தாந்தம் தொகுதி 8, பகுதி 4, பக்கம் 73.)

நிந்தாஸ்துதி

42. ஊடலுறு செவ்வேளுக் கொருபழத்துக் கநேகபழ முதவுதற்கோ, ஆடலுறு திருவாலங் காட்டில்வரு மிளைப்பெல்லா மகல்வதற்கோ, வேடரணிக் கொருபகைவன் அவன்கணை விட்டாற்பசலை விளைக்காதென்றோ, வீடறுமே கம்பாமற் றியாதெண்ணி மாவின்கீழிருக்கு மாறே.

43. ஒருமனைவி மீனுருவா யொருமனைவி யிருப்பிடத்தை யுழக்கநீக்கி, பெருமனைவி யிருவரோடு நினைச்சுமக்க வெருதாக்கப் பினுமம் மீனாய், வருமனைவி தந்தையுள முழக்கவதைப் பிடிப்பதற்கோ வையகத்தோர், திருமனைவி கிடைப்பதற்கோ வலைஞனாய் மதுரைச் சிவபிரானே.

சிவோபாசனை

ஞானசித்தி

வேத சிவாகமங்கள் சிவனை உபாசிக்குமாறு விதிக்கின்றன. சரியை கிரியை யோகம் ஞானம் என்னும் நான்கும் சிவோ பாசனையேயாம்.

சிவம் ஞானானந்தவஸ்துவாகலின் ஆன்மா அதனை வழி படுதலால் அச்சிவப் பொருளுக்கு வரக்கடவதோர் பிரயோசனம் இருக்கமாட்டாது. சிவம் அருட்பிழம்பாகலின் வணங்கியவர்க்கு அருள் புரிதலும் அல்லாதார்க்கு நிக்கிரகஞ்செய்தலும் ஒவ்வாது. ஆதலால் அவ்வணக்கம் ஆன்மப் பிரயோசனங் கருதியதாகவும், அவ்வணக்கமின்மை ஆன்ம சுகத்துக்குக் கேடுள்ளதாகவும் இருக்கவேண்டும்.

ஆன்மா பளிங்குபோன்று எதையேதைச் சார்ந்ததோ அத னதன் குணத்தைத் தன்குணமாகக் கொள்ளும் இயல்பிற்று. அதனால் அனாதியே தன்னோடு இயைந்துள்ள மலமாயாகன்மங் களின் தன்மைகளைத் தன்றன்மையாகக்கொண்டு இடர்ப்படு கின்றது. ஆணவ மலக்குணத்தைத் தன் குணமாகக் கொண்ட தனால் யான் எனது என்னுஞ் செருக்கும், மாயையின் குணத் தைத் தன் குணமாகக் கொண்டதனால் யான் எனது என்னுஞ் செருக்கும், மாயையின் குணத்தைத் தன் குணமாக் கொண்ட தனால் சுகதுக்கமோகங்களும், கன்மத்தின் குணத்தைத் தன் குணமாக் கொண்டதனால் எண்ணரிய பிறவிகளும் உண்டாயின. ஆன்மா ஞானசொரூபியாயிருந்தும் தன்னதல்லாத பிற குணங்களைத் தன்னதாகக்கொள்ளுதற்கு ஏதுவாயிருந்தது சார்ந்ததன் வண்ணமாம் இயல்புடைமையே யாம். அதனால் அவ்வுபாதியினின்றும் நீங்கவேண்டின் மலமாயா கன்மங்களின் சேர்க்கையை விடவேண்டும். அப்படி விடுமிடத்து அவற்றிற்குந் தனக்குமுள்ள சம்பந்தத்தை முன்னர் அறியவேண்டும்.

ஆன்மாவும் மலமும் உள்பொருள்களாகலின் அவ்விரண் டிற்கும் ஒன்றுபடும் சம்பந்தம் இருத்தல் கூடாது. இருக்கு மேனின், ஒரு காலத்தும் நீங்கவுமாட்டாது. அதனால் அவ்விரு பொருளுந் தம்முள்ளே கலந்திருக்குமென்றல் அமையாது.

பளிங்கும் அதனை யடுத்த செவ்வரத்தை முதலிய பொருள் களும் தம்முள்ளே கலந்திருப்பன வல்ல. ஆயினும் அம்மலர் முதலியவற்றின் நிறங்கள் பளிங்கினிடத்து விளங்கக் காண் கின்றோம். அக்காட்சியை உற்று நோக்குமிடத்துப் பளிங்கினும் அந்நிறம் காணப்படமாட்டாது. பளிங்கின் நிறமே மலர் முதலியவற்றின் நிறத்தைக் கவர்ந்து செம்மை கருமை பொன்மை முதலிய வண்ணங்கள் தோன்ற நிற்கும்.

அதுபோல் ஆன்மாவில் அப்பந்தம் இருப்பதில்லை. ஆன்ம சிற்சத்தியிலே மலத்தின் குணம் காணப்படும். அதனால் அவ் விருபொருட்குமன்றி, அவற்றின் குணங்களுக்கே சம்பந்த மிருப்பதாக அறியவேண்டும். அச்சம்பந்தமும் உண்மையன்று உண்மையாயின ஒருகாலத்தும் நீங்கமாட்டாது. பளிங்கு செம்மை முதலிய நிறமுடையதாகக் காணப்படும் போது அந் நிறமும் உள்ளவாறே பளிங்கின் நிறத்திலிருக்கவில்லை. இல்லாத குணமே உள்ளது போல் காணப்படுகின்றது. இல்லாத ஒன்று தன்னிடத்து உள்ளதாகக் காணப்படின் அதனை உபாதி யென்பர். அவ்வாறே ஆன்மாவினில்லாத மலகுணம் ஆன் மாவுக்கு உண்மையன்று, உபாதியாம். ஒரு காரணம் பற்றிக் காணப்படும் உபாதிக்குணம் மற்றொரு காரணத்தால் நீங்கிவிடும். அது எதுபோலுமென்னில், உச்சிப்பொழுதில் ஆதித்த வொளி யில் அடங்கி நிற்கும் பளிங்குக் கல்லில் வேறு நிறங்கள் காணப்படாமைபோலுமென்க.

இங்ஙனம் ஆன்மாவின் பந்த நிலை உபாதிபற்றியதாயிருத் தல் கண்டு அவ்வுபாதியினின்று நீங்குதல் ஏதுவாகவே சிவோ பாசனை விதிக்கப்பட்டது.

ஆதித்த வொளி எப்படியோ அப்படியே சிவசத்தி பிரகாச மாயிருக்கும். ஆதித்த வொளியில் அடங்கிய பளிங்கு வேறு நிறத்தை வாங்காமை எப்படியோ அப்படியே சிவசத்தியின் அடங்கிய உயிர் மல குணத்தைத் தன் குணமாகக் கொள்ள மாட்டாது. அப்பொழுது அவித்தையும் இன்பதுன்பங்களும் இறப்புப் பிறப்புக்களும் எய்தமாட்டா. அதனால் ஆன்மா மலபந்தத்தினின்று அகலவேண்டில் அச்சிவ சத்திப் பிர காசத்தை அடைய வேண்டும். அடைந்து அதன் நீழலில் இருக்கவேண்டும். அப்பொழுது உச்சிக்காலப் பளிங்குபோல யாதொரு உபாதியுமில்லாது இருக்கலாம்.

ஆதலின், இந்நிலை கைகூடும் நிமித்தமே சிவோபாசனை விதிக்கப்பட்டது. சார்ந்ததன் வண்ணமாமியல்புடைய ஆன்மா சிவத்தைத் தியானித்து அதன் பிரகாசத்தில் அடங்கியிருப்ப தாகப் பாவிக்கின், அப்பாவனு விசேடத்தினுலே, சிவம் வெளிப் பட்டு ஆன்மாவினிடத்து அருளை நிறுத்தும். அதனுல் ஆன்மா மலபந்தத்துட்படாது திருவருள்வசப்பட்டு, அவ்வருளின் வண்ணமே தன் வண்ணமாகக்கோண்டு சிவானந்தாநுபூதியை யெய்தும். மலத்தின் குணத்தைத் தன் குணமாகக்கோண்டு உபாதியுற்ற ஆன்மாவுக்குச் சிவத்தின் குணத்தைத் தன் குண மாகக் கோள்ளுதலாகிய உபாயமே சிறந்த சாதனமாம். அச் சாதனம் பக்குவத்துக்கு ஏற்பப் பலவகைப்படும்.

மலமாயை கன்மங்களி னீங்கிச் சிவவியாபகத்துள் அடங்கி ஆனந்தகரமாக இருக்கும் வல்லமை யுண்டாயின் அது ஞான வழிபாடு எனப்படும்.

அவ்வியல்பில்லாதார் அகத்து ஒரு குறியின் கண் அவனது அருவ நிலையைத் தியானித்து அது வேளிப்பட அவ்வடிவுள் அடங்கி யிருக்கப்பேறின், அது யோக வழிபாடு எனப்படும்.

அவ்வியல்பில்லாதார் அகத்தும் புறத்தும் அவனது மந்திர வடிவாகிய அருவுருவைத் தியானித்து வழிபடின், அவ்வடிவு பிரகாசமாகி ஆன்மாவை அவ்வடிவினதாக்கும்.

அவ்வியல்பு மில்லாதார் ஆலய முதலியவற்றில் அருவுரு வத் திருமேனியை அல்லது உருவத்திருமேனியை அமைத்து வழிபடின், அவ்வடிவங்கள் வேளிப்பட்டு ஆன்மாவைத் திரு வருள் வசப்படுத்தி அவ்வண்ணமாக்கும்.

இன்னும் முதல்வனைக் குறித்த வழிபாடுகள் ஒவ்வோன்றும் இக்கருத்துடையனவேயாம்.

அநுட்டானமாகிய சந்தியாவந்தனத்தில் மலகன்ம மாயைகள் அகல ஆன்மா சிவத்தையடைந்து அருள் வசப்பட்டு ஆனந்த நிலையுறும் பாவனையாகச் சிவோபாசனை வைக்கப் பட்டது.

இங்ஙனம் வைத்த சிவோபாசனைகளின் கருத்தைச் சுருக்கிச் சொல்லில், எதையேதைச் சாரினும் அதனதன் வண்ணமாமியல் புடைய ஆன்மா பாவனு விசேடத்தாற் சிவத்துவ மெய்தி முத்தி பெற வேண்டுமென்பதேயாம்.

ஆகலின், அறிவுடையோர் தம்மை மனிதர் முதலிய வடிவப் பொருளென்றும், தமதல்லாத உலகப்பொருளைத் தமதென்றும், உடலுக்கு வரும் இன்பத் துன்பங்களை தமக்கு வருபவை யென்றும் அபிமானிக்கும் அறியாமையினுல், மீண்டும் உபாதி யுற்று வருந்தாமல், இவற்றின் வேருகிய ஆன்ம இயல்பை யுணர்ந்து சிவோபாசனை பண்ணிச் சிவமாந்தன்மை பெற முயல வேண்டும்.

இதுவே சிவோபாசனையின் கருத்தாம்.

(சைவம் மலர் 6, இதழ் 12.)

நிந்தாஸ்துதி

44. வாங்கியுண்ண வழிகாத்துன் பெரியமக னிருக்கின்ருன் வனக்கு றத்திக், கேங்கிவரை யிடங்தோறு நின் சிறியடிகன் றிரிகின்ருன் யிலமி லான்போற், றூங்கிமைத் துனன்கடலிற் கிடக் கின்ருன் மனைவியரைத் துவக்காய் விட்டாள். ஈங்குநீ கூத்தாடி யிரந்துநஞ் சுண்ணும லென்செய் வாயே.

நிந்தாஸ்துதி முற்றிற்று.

போய்கைநாடு கிழவன்

திரு. கே. எம். வேங்கடராமையா M.A., B.O.L. அவர்கள்

பிரின்ஸிபால், செந்தமிழ்க் கல்லூரி, திருப்பனந்தாள்.

பொய்கைநாடு:

சோழமண்டலம் முதலாம் இராசராசசோழனது ஆணையின் படி ஒன்பதுவளநாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. [1]அவற்றுள் இராசேந்திர சிங்கவளநாடு என்பது ஒன்று. ஒவ்வொரு வளநாடும் சிலநாடு[2]களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. போய்கை நாடு என்பது இராசேந்திர சிங்க[3]வளநாட்டைச் சேர்ந்தது. திருவையாறு[4], திருநேய்த்தானம்[5], திருமழபாடி[6] என்பன இப் போய்கைநாட்டைச் சேர்ந்த தலங்கள் என்றால் இப்போய்கை நாட்டின் எல்லை ஒருவாறு அறியப்பெறும். இவ்விராசேந்திர சிங்கவளநாடு காவிரியின் வடகரைநாடு என்பதும் திருவை யாற்று[6] ஒலோகமாதேவீச்சரத்துக் கல்லெழுத்தால் அறியலாம்.

---

[1]அவையாவன: அருண்மொழி தேவவளநாடு; க்ஷத்திரிய சிகாமணி வளநாடு; உய்யக்கொண்டான் வளநாடு; நித்தவிநோத வளநாடு; பாண்டிய குலாசனி வளநாடு; கேரளாந்தக வளநாடு; இராசாசிரிய வளநாடு; இராசராச வளநாடு; இராசேந்திர சிங்கவள நாடு (பண்டாரத்தார் - சோழர் வரலாறு - பாகம் 1 - பக்கம் 118 அடிக்குறிப்பு.)

[2]நாட்டை இக்காலத்துத் தாலூகாவிற்குச் சமமாகவும், வள நாட்டை ஜில்லாவிற்குச் சமமாகவும் கொள்ளலாம்.

[3]இராசேந்திர சிங்கன் என்பது முதலாம் இராசராசனது சிறப்புப் பெயர்களில் ஒன்று.

[4]ராஜராஜ தேவர்க்கு யாண்டு 22வது வடகரை ராஜேந்திர சிங்கவளநாட்டுப் போய்கை நாட்டுத்தேவதானம். திருவையாற்று ஒலோகமாதேவீச்சரத்து மகாதேவர் (S. I. I. Vol. V 516)

[5]ஸ்வஸ்திஸ்ரீ கோவிராச கேசரி பன்மர்க்கு யாண்டு 3வது போய்கை நாட்டுக்கீழ் பிலாற்றுத் தேவதானம் திருநேய்த்தானத்து மகாதேவர் (S. I. I. Vol. V No. 580)

[6]கோப்பரகேசரிபன்மரான உடையார் ஸ்ரீ ராஜேந்திர சோழ தேவர்க்கி யாண்டு 16வது ராஜேந்திர சிங்கவளநாட்டுப் போய்கை நாட்டுத் திருமழபாடியுடைய மகாதேவர்.

போய்கைநாடு கிழவன் அலுவல் :

இப்போய்கைநாட்டின் தலைவனாக விளங்கியவன் ராசராசன் I காலத்தில் போய்கைநாடு கிழவன் எனப் பெற்றான். இவன் இயற்பெயர் ஆதித்தன் சூரியன் என்பதும் தேன்னவன் மூவேந்த வேளான் என்பது இவன் சிறப்புப் பெயராக இருத்தல் வேண்டும் என்பதும் அறியத்தகும். இப்போய்கைநாடு கிழவன் இராசராசன் I ன் 9வது ஆட்சியாண்டாகிய கி.பி. 985ல் திருச்சோற்றுத் துறையில் சில அறங்களைச் செய்துள்ளான். அக்கல்லேழுத்தில் "போய்கைநாடு கிழவன் ஆதித்தன் சூரியனான தேன்னவன் மூவேந்த வேளான்" என்று குறிக்கப் பேற்றுள்ளான். முதல் இராசராசனது 29ம் ஆட்சியாண்டுக் கல்லேழுத்துக்களிலும் முதல் ராசேந்திரசோழனது 3வது ஆட்சியாண்டுக் கல்லேழுத்துக் களிலும் (கி. பி. 1015ல்) அதாவது முதல் இராசேந்திரன் பட்டத் திற்கு வந்த ஆண்டில் காணும் பல கல்லேழுத்துக்களிலும் "ஸ்வஸ்திஸ்ரீ உடையார் ஸ்ரீ ராஜராஜீஸ்வரமுடையார்க்கு ஸ்ரீகார்யம் செய்கின்ற போய்கைநாடு கிழவன் ஆதித்தன் சூரியனான தேன்னவன் மூவேந்த வேளான்" என்று குறிக்கப் படுவதால் தஞ்சையில் இராசராசேச்சரம் ‡எடுப்பித்த பிறகு இராசராசசோழனால் ஸ்ரீகார்யம் செய்கின்ற அலுவலில் நியமிக்கப் பட்டிருந்ததாக அறியப்பெறுகிறது. இவன் சிறந்த சிவபக்தி யுடையவன். இவன் தன் வாழ்நாளில் சிவனடியார்களிடத்தும் அரசனிடத்தும் ஒப்பற்ற அன்பு பூண்டொழுகியவன். ஆதலின், இவனது சிறந்த பண்புகளையறிந்து, இராசராசன் இராசராசேச் சுரத்தில் ஸ்ரீகாரியஞ் செய்யும் வேலையில் இவனை அமர்த்தினன் போலும்.

திருச்சோற்றுத்துறைக் கல்லெழுத்து :

இராசராசன் I ன் 9-ம் ஆண்டில் திருச்சோற்றுத்துறை மகாதேவர்க்குப் போய்கைநாடு கிழவன் போன்னின் வேண் சாமரைக்கை-1க்கு; நிறை 19; கணபதியார்க்கு இராசந்தி விளக்கு ஐந்தனுக்கும் நொந்தாவிளக்கினுக்கும் .... வைத்தகாசு 10; (இங்ஙனம் பல தருமங்கள் சோல்லப்பட்டுள்ளன) மேற்படியானே

‡ கி. பி. 1009ல் இராசராசேச்சுரத்திருப்பணி முடிவுற்றதாதல் வேண்டும் - உலகநாதபிள்ளை.

யாண்டு 10வது ... ... திருப்பதியம் பாடுவார்க்கு நெல்லு 70 கலத்துக்கு வைத்தபொன் 33; துர்க்கையார்க்கு திருவமிது நெல்லு 20க்கு வைத்தகாசு 10 ...... இரண்டு திருவிழாவுக்குப் பெருந்திருவமிர்து செய்ய நெல்லுக்கு வைத்தகாசு 12; என்ற இக்கல்லெழுத்துப் பகுதியினின்று கி. பி. 985ல் திருச்சோற்றுத் துறை மகாதேவர் கோவிலுக்குப் பொய்கைநாடு கிழவன் சில அறங்கள் செய்துள்ளான் என்று அறியப்படுகிறது. இதில் திருப்பதியம் பாடுவார்க்குப் பொன் அளித்துள்ளமை குறிப்பிடத் தக்கது.

மூவர் படிமங்களை எழுந்தருளுவித்தமை:

திருச்சோற்றுத் துறையில் தேவாரம் பாடுவதற்கு நிபந்தம் அளித்த பொய்கைநாடு கிழவன், தஞ்சை இராசராசேச்சுரத்தில் ஸ்ரீகாரியம் செய்கின்ற அலுவல் ஏற்றுக்கொண்டதும் சமய குரவர்களுடைய படிவங்களைத் தஞ்சை இராசராசேச்சுரத்தில் எழுந்தருளுவித்து அவற்றுக்கு அணிகலன்களும் அளித்தான் என்பதை இரண்டு கல்லெழுத்துக்களினின்றும் அறியலாம்.[1]

விளக்கம் வருமாறு:—

1. நம்பி ஆரூரர் - சுந்தரமூர்த்தி சுவாமிகள் படிவம்:

பாதாதி கேசாந்தம் பதினேழுவிரல் இரண்டு தோரை[2] உயரமும் இரண்டு திருக்கையும் உடையவராய்க் கனமாக [3]எழுந்தருளுவிக்கப்பெற்றது; இது செப்புப் பிரதிமம்; இவர் நின்ற பத்மம் இரு விரவனர் உயரமுடையது. இதனோடுங்கூடச் செய்த பீடம் எண்விரல் சம சதுரத்து மூவிரலே இரண்டு தோரை உயரம் உடையது.

இவர்க்குப் பொய்கைநாடு கிழவன் கொடுத்தது:

ருத்ராக்ஷத் தாழ்வடம் ஒன்றில் பொன்னின் சுரி 56-ம் ருத்ராக்ஷம் 56-ம் உள்பட நிறை 8-கழஞ்சு, 9-மஞ்சாடி[4]; விலைகாசு 25.

---

1 S. I. I. Vol. II Part II No. 38 & 41

2 தோரை - நெல்; { 8 தோரை - 1விரல்; 12 விரல் - 1 சாண்; 2 சாண் - 1 முழம்.

3 Solid image.

4 2 குன்றி - 1 மஞ்சாடி; 20 மஞ்சாடி - 1 கழஞ்சு.

குறுவாணியக் குடியாகிய *பரகேசரிபுரத்து நகரத்தார் கொடுத்தது :

ருத்ராக்ஷம் போன்னின் சுரி கட்டிற்று ஒன்றும், நாண்படு கண்ணும் கோடுக்குவாயும் உள்பட நிறை கழஞ்சு, 7 மஞ்சாடி; விலைகாசு 3.

வெண்ணி ‡ நகரத்தார் கொடுத்தன :

திருக்கம்பி ஒன்று, போன் கழஞ்சேமஞ்சாடியும் குன்றி; திருக்கம்பி ஒன்று; போன் கழஞ்சே மஞ்சாடி; திறள்மணிவடம் ஒன்று, போன் இரு கழஞ்சேமஞ்சாடியும் குன்றி; திருக்கைக் காறை ஒன்று, போன் $1\frac{3}{4}$ கழஞ்சு, 4 மஞ்சாடி; திருக்கைக் காறை ஒன்று, போன் $1\frac{3}{4}$ கழஞ்சு, 3 மஞ்சாடியும் குன்றி; திருக்காற்காறை ஒன்று, போன் $1\frac{3}{4}$ கழஞ்சே, 3 மஞ்சாடியும் குன்றி; திருக்காற்காறை ஒன்று, போன் $1\frac{3}{4}$ கழஞ்சே 4 மஞ்சாடியாக இரண்டிற்கு $3\frac{3}{4}$ கழஞ்சே, 3 மஞ்சாடி.

2. நங்கை பரவையார் படிவம் :

பதினறு விரல் உயரத்து இரண்டு திருக்கையுடையாராகக் கனமாக எழுந்தருளுவிக்கப்பெற்றது; இவர் எழுந்தருளிநின்ற பத்மம் இருவிரலே இரண்டு தோரை உயரமுடையது. இதனேடுங் கூடச்சேய்த பீடம் 6 விரலே 2 தோரை சம சதுரத்து மூவிரல் உயரமுடையது.

இவர்க்குப் பொய்கைநாடு கிழவன் கொடுத்தன :

திருக்கைக்காறை ஒன்று, போன் $1\frac{1}{2}$ கழஞ்சாக இரண்டினல் போன் முக்கழஞ்சு; திருக்காற்காறை ஒன்று, போன் $1\frac{1}{2}$ கழஞ்சாக இரண்டினல் போன் முக்கழஞ்சு; மோதிரம் ஒன்று, போன் $\frac{1}{2}$ கழஞ்சே, மஞ்சாடியும் குன்றி;

* இது இராசேந்திர சிங்க வளநாட்டில் இருந்த ஊர். தஞ்சை ராசராசேச்சுரத்துத் தேவதானங்களுள் ஒன்று.

‡ இதுவும் இராசராசேச்சுரமுடையார் தேவதானம்; நித்த விநேதவளநாட்டது.

பரகேசரிபுரத்து நகரத்தார் கொடுத்தது :

திருகு ஒன்று உள்பட பட்டைக்காறை ஒன்று, போன் முக்காலே குன்றி.

வெண்ணி நகரத்தார் கொடுத்தன :

திருக்கம்பி ஒன்று, போன் $\frac{3}{4}$ கழஞ்சு, 2 மஞ்சாடி, குன்றி. திருக்கம்பி ஒன்று, போன் $\frac{3}{4}$ கழஞ்சு, 2 மஞ்சாடி.

3. திருநாவுக்கரசர் பிரதிமம் :

பாதாதி கேசாந்தம் 22 விரலே 2 தோரை உயரத்து இரண்டு திருக்கையுடையாராகக் கனமாக எழுந்தருளுவிக்கப்பெற்றது; இவர் எழுந்தருளி நின்ற பத்மம் இருவிரலே ஆறு தோரை உயரமுடையது; இதனேடுங்கூடச் செய்த பீடம் எண்விரலே ஆறு தோரைச் சம சதுரத்து நால்விரல் உயரமுடையது.

இவர்க்குப் பொய்கைநாடு கிழவன் கொடுத்தன :

ருத்ராக்ஷச்சுரி போன்னின் நூலிற் கோத்த ருத்ராக்ஷம் ஒன்று உள்பட நிறை ஆறு மஞ்சாடியும் இரண்டுமா; விலே காசு ஒன்று. ருத்ராக்ஷச்சுரி போன்னின் நூலிற் கோத்த ருத்ராக்ஷம் ஒன்று உள்பட நிறை ஆறு மஞ்சாடியும் இரண்டுமா; விலே காசு ஒன்று. கண்டிகை ருத்ராக்ஷம் ஒன்றும் சுரி ஒன்றும் நிறை ஐங்கழஞ்சே மஞ்சாடியும் குன்றி; விலே காசு எட்டு, திருப்பொற்பூ ஒன்று, போன் $\frac{3}{4}$ கழஞ்சு 4 மஞ்சாடியும் குன்றி, திருக்கைக்காறை ஒன்று, போன் இரு கழஞ்சு, திருக்கைக் காறை ஒன்று, போன் $1\frac{3}{4}$ கழஞ்சு 4 மஞ்சாடி.

பரகேசரிபுரத்து நகரத்தார் கொடுத்தது :

ருத்ராக்ஷம் போன்னின் சுரி கட்டிற்று ஒன்றும் நாண்படு கண்ணும் கோக்கு வாயும் உள்பட நிறை கழஞ்சே ஏழு மஞ்சாடி விலே காசு மூன்று.

(தொடரும்)

குருபாதம்

தருமையாதீனம் இருபத்தைந்தாவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்

திருவடிக்குச் சார்த்திய பாமாலை

இருபா இருபஃது*

வித்துவான் திரு. சொ. சிங்காரவேலன் அவர்கள்
ஆதீனப் பல்கலைக்கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர், தருமபுரம்

காப்பு

உள்ளத் தறியணையும் ஓங்குமதக் கன்றினையான்
உள்ளத்தே உள்ளிடுவன் ஓவாதே — தள்ளருஞ்சீர்
நற்றருமைச் சுப்ரமண்ய நாதரிரு தாள்புனையும்
சொற்றமிழ்தான் வாழியெனச் சூழ்ந்து.

நூல்

பூமலிந்த பொன்னிப் புறத்தே பொலிந்துதமிழ்ப்
பாமலிந்த நல்ல பதியாகும் — நாமலிந்த
சீர்த்தருமைச் சுப்தரமண்யச் சிற்குருவின் பொற்பாதம்
ஆர்த்திடுவன் நெஞ்சுள் அளித்து.

அகவல்

அளிக்கும் செந்தமிழ்த் தெளிக்கும் செந்தேன்
களிக்கும் சுரும்பெனக் குளிக்கும் புலவோர்
ஆயும் பெருந்திறம் தோயும் ஒருபுறம்
பாயும் மடையினிற் சாயும் வாளைகள்

* இப் பாக்கள் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் நாண்மங்கல நன்னாளன்று (31—10—'56) திருவடிகளைப் போற்றிப் பாடியன

செய்யிடைத் துள்ளிச் செய்யசெந் தாமரை
மொய்யிடை வீழ்ந்து மெய்யிடை தழுவிடத்
தேனெழுந் தூற்றும் கானெழுந் தோங்கி
வானெழும் நறுமணம் தானெழும் ஒருபுறம்
குடகிடைப் பிறந்து கடற்றிடைத் தவழ்ந்து
கடலிடைக் கலக்கும் திடமோடு விரைந்திடும்
பொன்னிப் பெருநதி செந்நெற் கழனிகள்
நன்னர்ப் புரந்திடும் அன்னைத் திருநதி
அலைகளிற் றேயும் சிலையெழிற் சிறுவர்
தலையெழில் பொங்க நலங்கிளர் ஒருபுறம்
நில்லா உலகினிற் பொல்லாப் பிகந்து
சொல்லாய்ப் பொருளாய் வல்லான் திருவடி
நெஞ்சிற் பதித்த செஞ்சொல் லாளர்
வஞ்சமில் நெறியார் செஞ்சடை முனிவர்
ஞானத் துறையினில் வானத் தவர்மகிழ்
தானத் துறைபல பேணும் ஒருபுறம்
எப்புறம் திரும்பினும் அப்புறு சடையனின்
மெய்ப்புறு வளங்கமழ் வைப்பெனும் தருமைத்
திருநகர் தன்னில் அருளா சோச்சிக்
குருவருள் வழங்கும் திருவருளாள!
சுப்பிர மணியச் செப்பமார் தேசிக!
இப்புவி யதனில் தப்புறும் அடியவன்
வேண்டுவ தாகிய மாண்டகு பயனே
ஆண்டுட னருளுக ! சேண்டரு புகழோய் !
எல்லாம் பெறினும் எல்லாம் இழப்பினும்
நல்லார் சிவனடித் தொல்புகழ் பேணவும்
அடியவர்க் கடிமை முடியநான் புரியவும்
குடியவர்க் காகிக் கடமைக ளாற்றவும்
ஓர்வரம் தருக சீர்வர எளியவன்
தேர்வரியோ னருள் ஆர்தரற் பொருட்டே. 2

வெண்பா

பொருளல் லவற்றைப் பொருளாய் மயங்கி
இருளிற் கிடக்கும் எளியேன் — தெருளுற்றுத்
தூயசிவ வாழ்வில் துலங்கத் தருமையருள்
நாயக நின் பொன்னடியே நல்கு. 3

அகவல்

குதிக்கும் சிற்றுயிர்க் கொதிப்பை யடக்கி
உதிக்கும் தவத்தைப் பதிக்கும் பரம !
பெருமைக் குணஞ்சால் தருமைக் குரவ ! நின்
அருமைத் திறத்தின் பெருமையென் சொல்கேன்
நாயினேன் தனையும் தாயினை அன்பால்
சேயனுக் கொண்டு தூயனுக்கிடு நின்
கடைக்கண் ணேக்குக் கிடைக்குமோ வென்றே
அடைக்கலம் புகுந்தனென்: புடைக்குமைங் கள்வர்
அகத்தராய் நின்றே மிகத்துயர் தந்தனர்:
சகத்தினில் இன்னல் உகத்தரும் உன்னருள்
காட்சிக் கெளிமையாம் மாட்சிசேர் குருமணி !
மீட்டுநான் வாரா நாட்டுளே ஞயிடச்
சுப்பிர மணியனும் அப்பனே அருளுக !
செப்பிடும் செந்தமிழ் ஒப்புக ! அடியவன்
நன்னெறிச் சைவச் செந்நெறி மாருது
தன்னெறி பேணிட நன்னராள் குவையே. 4

வெண்பா

ஏத்தும் தொழிலன்றி ஏதும் அறியேனுன்
மூத்தும் பரம்பொருளை முன்னியிடேன் — மாத்தும்
குறைந்தேன் தருமைக் குருவேநின் தாளில்
உறைந்தேனி தொன்றே உறும். 5

அகவல்

உறுபொரு ளறியும் செறிவுடைக் குணமும்,
அறுபொருளறிவும் பெறுமுறைக் கிழமையும்,
முப்பொருள் உணர்வும் மெய்ப்பொருள் நாட்டமும்
உய்ப்புணர்கின்ற மெய்ப்புறு திறமும்
உலகியற் சுழியில் பலநாள் கிடந்து
அலமரலின்றி நலம்பெறும் பெற்றியும்,
அருளுக என்றே உருகிடும் அடியனைப்
பொருளெனக் கொண்டு தருகென நின்தாள்
பற்றினன் தருமை நற்றவத் தேசிக !
முற்றறிவார்ந்த கற்றைச் செஞ்சடை
இருபதொ டைந்தாம் வருபதக் குருமணி !

திருமக ளகலாத் தருமபுரம் பதிக்
குணப் பெருங்குன்றே ! தணப்பருங் காதல்
வணத்தினி லுழலும் குணத்தினே யவித்து
நல்லருள் ஊட்டுக ! நல்லிசைச் சான்றோய் !
தோல்லேழிற் பாரினில் வல்லகாட்டுவையே. 6

வேண்பா

காண விழியுண்டு: காதுண்டு கேட்டிடவும்:
பூண நலமெல்லாம் பூத்ததுண்டு — வீணில்
உழல்வேன் தருமை ஒருமணியே ! நின்ருட்
கழலே அருளக் கருது. 7

அகவல்

கருத்திற் சிறியவன் பேரிதும் உய்குவன்;
அரிதினிற் பேற்றும் உரியவை வழாஅது
ஓம்புத லின்றித் தேம்பினன் உடலால்
வாம்பரியாகி ஆம்புகல் இன்றி
ஓடுமேன் மனனும் வாடுமேன் னறிவும்
தேடுமேன் னிதியே ! நாடுமேன் குருவே!
அருளார் முருகே ! இருளார் வழியில்
மருளா மயங்கும் ஒருகுழவியேனைக்
காட்டிநின் பேரருள் நாட்டி வைக்குவையே 8

வேண்பா

நாட்டிற் சிறந்த நலஞ்சால் தருமபுரம்
பாட்டிற் சிறந்து பயில் குருவே — ஏட்டில்
இயலாச்சீர் சுப்ரமணிய எம்திருவே ! காட்டாய்
உயலாகு மாறே உவந்து. 9

அகவல்

உவப்பன செய்தே தவப்பயனிழந்தேன்
அவிக்குவை ஐம்புலன்; குவிக்குவை பேரருள்;
ஊழிதோ றூழி வாழி நீ தருமை
ஆழிசால் குருமணி ! வாழி நீ பேரிதே. 10

வேண்பா

பேரிதேநின் தோண்டு பேரிதேநின் நேஞ்சு
பேரிதேநின் வாழ்வு பேரிதே — பேரிதேநின்

தண்ணருள் ஞானத் தருமைக் குருநாதா!
என்னருளேன் றைக்கோ இனி 11

அகவல்

இனிக்கும் உலகெனத் தோனிக்கும் உரையால்
எளியவன் மயங்கினன் அளிபெரு துயங்கினன்,
எம்மணி யாயினும் இம்மணி தன்னை
ஒத்திடா தேனவே நத்துசீர் சுப்பிர
மாமணி நின்னுளி நாமநீரு லகினில்
வழியினைக் காட்டும் விழியோளி கூட்டும்
கமலைவாழ் குரவன் அமலநற் றிருவடித்
தேனுூர்ந்திடுவோய்! வானூர் இன்பம்
தேக்கிய செந்தமிழ் வாக்கினிற் புரண்டு
அவநெறி மாற்றிச் சிவநெறி காட்டிச்
சிவபோக சாரம் தவபோக மாக
அருளிய ஞானக் குருமணி! சைவ
சிகாமணி யாகிய உகாமணி யாவோய்
ஞானசம்பந்த ஞான தேசிகனும்
பரமாசாரிய! உரமாம் உலகியல்
இரும்பினைச் சுவையார் கரும்பெனக் காட்டும்
பொய்யினைத் திறம்பா மெய்யெனப் பாடும்
இவ்வலைப் பட்டஅது செவ்விதின் நின்னிழல்
வாழ்ந்திட விழைகுவன் சூழ்ந்திடு மடியேன்
அன்னதோர் நல்வரம் நன்னிலை யெய்திடத்
திருவருள் பெறுவகை அருளினுள் குவையே. 12

வேண்பா

வகைபட்ட செல்வம் வளம்பட்ட வாழ்வு;
தோகைபட்ட இன்பத் துயரம் — நகைபட்ட
மாதர் இவற்றில் மயங்கிடுவேன் மாமணியே!
ஆதல்நான் என்றே அருள். 13

அகவல்

அருளார் கனியே! இருளார் உலகக்
கானகத் திடையே நானகப் பட்டு
ஐம்புல வேடருள் மோய்ம்புறத் திரிந்து
என்னிலை மாறி என்னிலை கேட்டு

உன்னையே மறந்தேன் என்னையே மறந்தேன்
அம்பு தொடுத்தும் வம்புகள் செய்தும்
வலையினை மாட்டியும் அலைத்திடல் புரிந்தும்
மானென மயிலென வானென வளியென
மயக்கிடுகின்றார் தயக்கமேன் ? தருமைச்
சுப்பிரமணியச் செப்பமார் தேசிக !
வருகுவை என்மல அருவலை நீக்கி
மலரடி வைகும் நலமருள்குவையே. 14

வெண்பா

மலரேநின் தாள்கள்; மலரேநின் கண்கள்;
மலரேநின் மேனி மலரே — மலர்முகமே
சீர்த்தருமைப் பொய்கைச் சிறந்த மலர்க்குவையே !
தூர்த்தனேனை அன்பாய்த் துலக்கு. 15

அகவல்

அன்பினை அறியேன்; வன்பினைப் புரிவேன்;
வாழ்வினை உணரேன்; தாழ்வினிற் பிணைவேன்;
செந்தமிழ் அறியேன்; நோந்திடல் செய்வேன்;
இந்த ஏழையினை முந்தியாளுவையே. 16

வெண்பா

முந்தி முளைத்த முழுமுதலோன் சொக்கேசன்
சிந்தை அகலாத சிற்குருவே !—வந்தேன்
அடியேனின் பாத அருணிழற்கீழ்; ஆட்கொண்
டடியேற்கு இன்பம் அருள். 17

அகவல்

அடிமுடி அறியா வடுநீங்கு சிறப்பின்
சிறுமான் கரத்துப் பெருமான் பேரருட்
கொழுந்தே யாகி விழுந்தெழு மடியவர்
அல்லல் அறுத்து மல்லல் பெருக்கும்
செந்தமிழ் முருகன் பைந்தமிழ் நிலத்தே
குன்று தோறாடி நின்றிடும் கொள்கைபோல்

மூவோன் பானுய் யாவரும் போற்றும்
தேவாலயங்கள் மேவா அமர்ந்து
அருளரசோச்சும் திருமரு கோள்கைத்
துறவரசே ! நின் அறவழி நிற்கும்
செம்பொருள் உணர்ந்த தம்பிரானுர்கள்
நொடிப்போதேனும் அடித்துணை வழாஅது
உருகுதல் கண்டே பேரிதுவந்தனனே. 18

வெண்பா

உருகும் அடியேன் உளமே புகுந்து
பருகும் படிக்குன் னருளே—பெருகி
யிடல்வேண்டு மென்றுன் இணையடிகள் போற்றும்
அடல் வேண்டும் என்றும் அறிந்து. 19

அகவல்

அறிவும் சிவமும் சேறியும்; ஆன்மா
உலகபாசத்தில் உலவும்; ஆண்டவன்
அருளிலை யானுல் தேருள்விலை; இறைவன்
மானைக் காட்டி மானைப் பிடிப்பது
போலே குருவாய் நூலே புகன்று
உபதேசத்தால் உபதேசித்து
மனத்திடை மன்னிய இனத்திருள் போக்கிக்
கதிரோளி காட்டுவன்; உதித்திடும் ஞானம் என்(று)
உரைக்குவ வேல்லாம் தரைப்பாலுண்மை
யாதலைத் தருமைத் தீதறு திருநகர்
ஞானபீடத்து ஊனமில் குரவ ! நின்
பேரருளதனுல் நேரிதினின் அறிந்தனேன்
வாழிநின் பணிகள் ! வாழிநின் பணிகள் !
வாழிநின் தேய்விகம் ! வாழிநின் பேரருள் !
சுப்பிரமணியத் திப்பிய சான்றேய் !
திருவடிகட்கே சிறுவடிவாக
மங்காத் தமிழால் சிங்காரவேலன்
நேஞ்சினில் மலர்ந்தஇச் சேஞ்சோல் பாமலர்
திருவடி மணக்கும் திருவார் பூவே.

கடிதங்கள்

C. RAJAGOPALACHARI

60 BAZLULLAH ROAD
TYAGARAYANAGAR
MADRAS 17
14—9—'56

வணக்கம்.

"சிவபோகசாரம்" புஸ்தகம் தமிழ் மூலமும் ஆங்கிலம் ஹிந்தி மொழிபெயர்ப்பும் ஆகிய மூன்றும் அடங்கியது வந்தது. பார்த்து மிக மகிழ்ந்தேன்.

அநேக புஸ்தகங்கள் வந்துகொண்டிருக்கின்றன. அதற்கெல்லாம் வரவு செய்தி தெரியப்படுத்தவில்லையாயினும் இது விசேஷம். அதனால் எழுதினேன்.

இராஜகோபாலாச்சாரி.

ம. க. சுந்தரேச பட்டர்

மதுரை
2—10—56.

சிவராஜதானியாகிய தருமைப்பதியில் எழுந்தருளி அடியார்களுக்கு அருள்பாலித்தும் சிவக்ஷேத்திர பரிபாலனம் செய்தும் விளங்கிவரும் சிவஞான மாமணியாம் தருமைக் குருமணி ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் திருவுருவப்படம் செந்தமிழ்க் கல்லூரியில் அமைவது செந்தமிழ்க் கல்லூரி மாணவர்கள் குருவருளும், திருவருளும் பெற வாய்ப்பாகும் எனக் கருதுகிறோம்.

திருவுருவப் படத்தைத் திறந்த வைபவங்கள் அவைகள் கண்மணியாக விளங்கும் காசித் திருமடத்து சிவஞானமாதவரும் சிவஞானச் செல்வருமாகிய இளவரசு சுவாமிகளது திறப்புரையோடு கூடிய அருளுரை கல்லூரி மாணவர்களது வருங்கால வாழ்வுக்கு வழிகாட்டியாக அமைய நமது ஆன்மார்த்த மூர்த்தியாகிய சோக்கலிங்கப்பெருமானின் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

வாழ்க பனசைக் கல்லூரி, வாழ்க காசித் திருமடம்.

(ஒ-ம்) ம. க. சுந்தரேச பட்டர்

அ. வேதரத்தினம் வேதாரண்யம்
3—10—56.

தாங்கள் அன்புடன் அனுப்பிய, தங்களின் செந்தமிழ்க் கல்லூரியில் தருமபுரம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் திருவுருவப்படத் திறப்புவிழா ஸ்ரீ கந்தவேள் கழகக் கலைமகள் விழா அழைப்பிதழ் பார்த்து மிகவும் சந்தோஷம்.

அ. வேதரத்தினம்.

ஆர். கந்தசாமி மூப்பனுர், கும்பகோணம்
பி. ஏ., பி. எல்., 4—10—1956.

அன்புள்ள ஐயா,

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிநாத சுவாமிகள் செந்தமிழ்க் கல்லூரி, ஸ்ரீ கந்தவேள் கழகக் கலைமகள் விழாவின் அழைப்பிதழ் கிடைக்கப் பெற்றேன். மட்டிலா மகிழ்ச்சி. மிக்க நன்றி.

அவ்வமயம் நமது தருமபுர ஆதீன கர்த்தராய் இப்போழுது அமர்ந்து அருட் செங்கோல் செலுத்திவரும் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களின் திரு உருவப்படம் பனசைச் செந்தமிழ்க் கல்லூரியில் ஸ்ரீ காசி மடம் இளவரசு ஸ்ரீமத் மகாலிங்கத் தம்பிரான்சுவாமிகள் அவர்களால் எழுந்தருள்விக்கப் பெறுவதை அறிந்து அடியோங்கள் யாவரும் அகமகிழ்ச்சிகோள்கிருேம். திருவுருவப்படங்கள்வைப்பது என்பது மிக மலிவாக இருக்கின்ற இக்காலத்திலும், சில திருவுருவப் படங்களுக்கே தனிப்பெருமையும், போற்றக்கூடிய இயல்புகளும் உள்ளன. அத்தகைய படங்களைத்தான் நமது ஆதீனங்களில் எழுந்தருளச் செய்வார்கள். அவைகளிலும் இப்போது அமைக்கப்பேறும் திருவுருவப்படம் தலைசிறந்தது; உருவத் திருமேனியை வணங்கும் எம்போன்றவர்கள் குருவின் உண்மை உருவப் படத்தைக் கடவுளின் திருமேனியாகவே கருதக் கடமைப்பட்டுள்ளோம். தருமையாதீனத்தையே தமக்குரிய குருபீடமாகக் கோண்டுள்ள, பனசை ஸ்ரீ காசிமடாலயக் கர்த்தர்கள், தங்கள் நிர்வாகத்திலுள்ள செந்தமிழ்க் கல்லூரியிலும், தருமை ஆதீன கர்த்தரது திருவுருவப்படத்தை எழுந்

தருள்விப்பது கல்லூரியில் தொடர்ந்து பயின்றுவரும் மாணவர் குழாங்களுக்கு மட்டுமின்றி, ஏனையோர்களுக்கும் குருவின் அருட்பிரசாதம் பாலிக்கும்படி செய்துள்ள பெருஞ்செயலுக்கு நாங்களும், எங்கள் வழித் தோன்றல்களும் என்றென்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம்.

போதுவாக ஸ்தாபனத்தின் பெருமையினாலேயே சில படங்கள் விளக்கமுறும். ஆனால் இத்திருவுருவப்படம் குறிக்கும் பெரியார் தம் குணத்தாலும், அறிவாலும், செயலாலும் தருமை யாதீனத்திற்கே தனிப்பெருமை கொடுத்துள்ளார்கள். அறிவு, உருவு, ஆராய்ந்த கல்வி ஆக இம்மூன்றில் செறிவுடையவர் களாய்த் தம்நலம் கருதாத தகைமையுடையவர்களாய், காலத்திற் கேற்றவாறு மக்களின் நலத்துக்காக ஆவன புரிபவர்களாய்ப் பரந்த நோக்கமுடையவர்களாய், மக்கள் உடலுக்கும் உயிர்க்கும் வன்மையும் உறுதியும் பயக்கும் மருத்துவச் சாலைகள், கல்லூரிகள், பிரசார நிலையங்கள், அரிய பெரிய புத்தக வெளியீடுகள் இலவசமாக வழங்குதல், தாமே பிரசங்க வாயி லாக மக்கட்குப் போதித்தல், போதிக்கும் காலத்தில் நன்னெறி அறச் செயல்களைச் செய்து கலங்கரை விளக்காகப் பிரகாசிப்பவர் களாய்த், தமிழ் அன்னையின் தவப்புதல்வராய் அற நிலயப் பாது காப்பாளர்களும், அதிசயிக்கும்படி ஆலயங்களைப் பரிபாலனம் செய்பவர்களாய் இன்று தருமையாதீனத்தில் அரசு செய்கின்ற பரமாசாரிய சுவாமிகள் அவர்களை, திருவுருவப் படத்தின் வாயி லாக என்றும், எல்லோர்க்கும் நினையாமல் நினைக்கும் வண்ணம் செய்யும் ஸ்ரீ காசிமடத்து அதிபர் அவர்களது செயலை மன மொழி மெய்களால் போற்றுகின்றோம். தருமை ஆதீனத் தலைவர் அவர்களை நினைக்கும் தோறும், அன்று அப்பர் அடிகளது மணி வாயினின்றும் பிறந்த நின்னுவார் பிறரன்றி............என்னும் திருத் தாண்டகம் மனக்கண் முன் நிற்கின்றது.

இப் பெருவிழாவை அடியேனது கண்சிகிச்சை காரணமாகக் கண்டுகளிக்க முடியாமையைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்றும் வணக்கமுடையோன்,

கந்தசாமி மூப்பனார்.

கே. சுப்பிரமணிய அய்யர் சென்னை
4—10—56.

முதல்நாள் நிகழ்ச்சியில் சிறப்பாக மற்றோர் நிகழ்ச்சி நடை பெறுவது போற்றற்குரியது. தருமையாதீனத் தலைவரவர்களின் திருவுருவப்படத்தை, புவனியெலாம் போற்றும் புகழ்க் காசி மடத்து இளவரசு சுவாமிகள் அவர்கள், செந்தமிழ்க் கல்லூரி சுவாமிகள் அவர்கள், செந்தமிழ்க் கல்லூரியில் எழுந்தருள் விப்பது குறித்து மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். சிறந்த தலைவர் களின் திருவுருவப் படங்கள் கல்லூரியில் அமைவது மாணவர் கட்கு எஞ்ஞான்றும் நன்மையும் ஆசியும் பாவிக்கும் வகையில் உதவும் என்பதை அடியேன் கூறவும் வேண்டுமோ.

கே. சுப்பிரமணிய அய்யர்.

கும்பகோணம்
த. ச. மீனுட்சிசுந்தரம் பிள்ளை 4—10—56.

தருமையாதீனம் ஸ்ரீ மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் திருவுருவப்படம் நமது செந்தமிழ்க் கல்லூரியில் திறந்துவைப்பது பெரிதும் பொருத்தமுடையதே.

சுப்பிரமணியம் தமிழ்த் தெய்வம், தமிழ் ஞானசம்பந்தராக குருஞானசம்பந்தர் திருவருள் தமிழ்மொழி பயில்வார்க்கு இன்றி யமையாதது. செந்தமிழ் சொக்கநாதர் பூசா மூர்த்தி கல்லூரித் தோடக்கத்திலே முன்னுள் மகாசந்நிதானம் பளசைத் திரு மடத்துக் கெழுந்தருளி மாணவர் யாவருக்கும் தீட்சை செய்து நன்னெறியில் உய்த்தருளிய செய்தி உலகம் அறியும்.

செந்தமிழ்க் கல்லூரி குருவருளும் பெற்று இனிதோங்குக எனப் பன்முறை வாழ்த்துகின்றேன். ‘பெற்றவட்கே தெரியும் அந்த வருத்தம்’ என்பது தாயுமானவர் திருவாக்கு.

த. ச. மீனுட்சிசுந்தரம் பிள்ளை.

மதிப்புரை

திருவாய்மொழி

திருவாய்மொழி ஈட்டின் தமிழாக்கம் ஏழாம் பகுதி (சென்னைப் பல்கலைக்கழக வெளியீடு விலை ரூ. 10-0-0 தமிழாக்கம் செய்தவர்' சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் விரிவுரையாளர் வித்துவான், திரு. பி. ஆர். புருஷோத்தம நாயுடு அவர்கள்.

வடமொழி வேத வேதாந்தங்களில் தெளியாத மறை பொருள் களையும் தெளிவிப்பது திருவாய்மொழி, அதன் நுண்பொருள்களைத் தெள்ளிதின் விளக்குவது, 'ஈடு முப்பத்தாருயிரப்படி' என்னும் பேருரை; இவ்வுரை மணிப்பிரவாள நடையில் அமைந்துள்ளது. தமிழ்ப்புலவர்கள், அவ்வுரையிலுள்ள வடமொழித் தொடர்க்குப் பொருள்காண இயலாது மருள்வர், வடமொழிப் புலவர்கள் அதில் வரும் அருந்தமிழ்த் தொடர்கட்குப் பொருள்காணமாட்டாது வெருள்வர். இவ்வாறு இருதிறத்தாரையும் மருட்டி வந்த ஈடு இல்லாத ஈடு இன்று தமிழர்கள் எளிதில் பொருளுணர்ந்து மகிழ் தற்குரிய ஈடிலாத இனிய உரையாகத் திகழ்கின்றது. காரணம், திருவாளர் நாயுடு அவர்களின் தமிழாக்கமே, ஈட்டின் கட்டுக் கோப்புச் சிதையாமல் அதில் விரவியிருக்கும் வடசொற்களை மட்டும் தமிழ்ப்படுத்தியுள்ள முறை சாலச் சிறப்புடையதாகும். இதுவரை எழுநூறு பாசுரங்கட்கும் தெளிவான பிண்டப்பொருள் வரைந்தும் இன்றியமையாத இடங்களில் இலக்கணக் குறிப்புக்களை எழுதியும் சிறந்த இடங்களை விளக்க ஒப்புமைப் பகுதிகளைக் காட்டியும் இருப்பது பாராட்டுதற்றியதாகும். இந்நூல் தமிழ் மக்களுக்குக் கிடைத்த பெரும்பேறு எனலாம். பல்லாண்டு கல்லூரித் தமிழ்ப் பேராசிரியராய்த் தொண்டாற்றிவந்த அநுபவத்தாலும் வைணவ மரபிற்றுன்றிக் கைக்கொண்டொழுகிய பத்திநெறிப்பழக்கத்தாலும் சான்றோரின் சார்பாலும் திருவாளர் நாயுடு அவர்கள், இத்தகைய அரிய பெரிய தெய்வத்தமிழ்த் தொண்டினைத் திறம்படச் செய்து முடித்து வருகின்றார்கள். விரைவில் எஞ்சியுள்ள பகுதிகளையும் இவ்வாறே எழுதி வெளியிட இறையருள் அவர்க்குத் துணை நிற்பதாக. பெரும்புலமையும் சொல்வன்மையும் உடையவர்கள் அவர்கள் என்பது உலகம் முன்பே அறியும். மொழி பெயர்த் தெழுதும் வன்மையும் அவர்கட்கு உண்டு என்பதை இத்திருவாய் மொழி விளக்கம் காட்டிக்கொண்டு திகழ்கின்றது. இத்தொண்டுக்கு இவர்களைத் தேர்ந்துகொண்ட சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு நன்றி மிக உரியது.

வித்துவான், சே. வேங்கடராமச் செட்டியார்.
தமிழ்ப் பேராசிரியர், பல்கலைக் கல்லூரி, தருமபுரம்.

ஆதீனத்திலும் * ஆதீன தேவஸ்தானங்களிலும்

கலைமகள் விழா

தருமபுர ஆதீனத்தில்

தருமபுர ஆதீனக் கல்விநிலையங்களின் சார்பில் ஆதீன மடாலயமுகப்பில் உள்ள திருநெறிய தெய்வத் தமிழ் மன்றத்தில் 5—10—'56 முதல் 12—10—'56 வரையுள்ள நாட்களில் அறிஞர் பலர் தலைமையில் ஒவ்வொருநாளும் மாலை 6 மணிக்குத் தொடங்கி சொற்பொழிவுகள் நிகழ்ந்தன. சிறப்பு நிகழ்ச்சிகளாக நாடகம், கும்மி, கோலாட்டம், நாட்டியம் முதலியன கல்விநிலைய மாணவ மாணவிகளால் நிகழ்த்தப்பெற்றன.

5–10–'56 தலைவர்: திரு சி. பாலசுப்பிரமணியம் பி.ஏ., பி.எல்., அவர்கள், டிஸ்ட்ரிக்ட் முன்சீப், மாயூரம். பேச்சாளர்: வித்துவான், திரு. சே. வேங்கடராமச் செட்டியார், ஆதீனப் பல்கலைக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் ''பெரியநாயகி திரு விருத்தம்''. திரு. ஞானபண்டிதன், ஆதீனக் கல்லூரி மாணவர் 'சகலகலாவல்லிமாலை'. நாடகம்: 'கிழக்கும் மேற்கும்' ஆதீனப் பல்கலைக் கல்லூரி மாணவர்கள்.

6–10–'56 தலைவர்: திரு. எம். சந்தானம் பி.ஏ., பி எல்., அவர்கள், சப்-மாஜிஸ்ட்ரேட், மாயூரம். பேச்சாளர்: வித்துவான், திரு. சோ. சிங்காரவேலன், ஆதீனப் பல்கலைக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் 'மீனாட்சியம்மை குறம்'. வித்துவான், திரு. ஆ. இராசதுரை, ஆதீன உயர்பள்ளித் தமிழாசிரியர் 'அருட்சக்தி'. திரு. ஆ. இராமபத்திரன், ஆதீனப் பல்கலைக் கல்லூரி மாணவர் 'பெரியநாயகி கலித்துறை'. நாடகம்: 'சகுந்தலை' ஆதீனப் பல்கலைக் கல்லூரி மாணவர்கள்.

7–10–'56 தலைவர்: திரு. எம். சுவாமிநாதன் M.B.B.S. அவர்கள், டாக்டர், மாயூரம். பேச்சாளர்: வித்துவான், திரு. வி. சா. குருசாமி, ஆதீனப் பல்கலைக் கல்லூரித் தமிழ்ப்

பேராசிரியர் 'கோற்றவை'. திரு. ச. குப்புசாமி, ஆதீனப் பல்கலைக் கல்லூரி மாணவர் 'அமுதாம்பிகைப் பிள்ளைத்தமிழ்'. ஒலி நாடகம்: 'பத்தினி விழா'. ஆதீனத் தோடக்கப்பள்ளி மாணவர்கள், தருமபுரம். இசை நடன நிகழ்ச்சி: ஆதீன உயர் பள்ளி மாணவியர் 'உயிராவணமிருந்து'. ஆதீனத் தோடக்கப் பள்ளி மாணவியர் 'திருவுந்தியார்'.

8-10-'56 தலைவர்: திரு. டி. என். பாலசுப்பிரமணியம் (B.Sc., A.G.) அவர்கள், விவசாய ஆபீசர், மாயூரம். பேச்சாளர்: சிரோமணி, வித்துவான், திரு. வி. சபேசன், ஆதீனப் பல்கலைக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் 'மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்'. திரு. க. வேலாயுதம், ஆதீனப் பல்கலைக் கல்லூரி மாணவர் 'அபிராமி அந்தாதி'. நாடகம்: 'பட்டினத்தார்' ஆதீன உயர் பள்ளி மாணவர்கள்.

9-10-'56 தலைவர்: திரு. A. இராமநாதம் பிள்ளை எம்.ஏ., அவர்கள், அன்பநாதபுரம் வகையார் அறத்துறைக் கல்லூரி முதல்வர், மாயூரம். பேச்சாளர்: திரு. துரை. திருமால், ஆதீனப் பல்கலைக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் 'மீனாட்சியம்மை இரட்டைமணிமாலை'. திரு. இரா. கோவிந்தராசன், ஆதீனப் பல்கலைக் கல்லூரி மாணவர் 'சரசுவதியந்தாதி'. திரு. வை. வேங்கடராமன், ஆதீனத் தோடக்கப்பள்ளி மாணவர் 'திருவள்ளுவர்'. திரு. முத்துக்குமரசாமி, ஆதீனப் பல்கலைக் கல்லூரி மாணவர் 'யோகாசனப் பயிற்சி'. இசை நாட்டியம்: ஆதீன உயர்பள்ளி மாணவியர் 'வனபவளம்'.

10-10-'56 தலைவர்: பண்டித வித்துவான், திரு. லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார் அவர்கள் Professor & Head of the Dept. of Tamil (Oriental), Dean Oriental Faculty, Annamalai University & Compiler. Tamil Section, National Bibliography, Sahitya Akademi. New Delhi. பேச்சாளர்: சித்தாந்த சிரோமணி, சித்தாந்த ரத்நாகரம், மதுரகவி, முது பெரும்புலவர், திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார், ஆதீனப் பல்கலைக் கல்லூரி பிரின்ஸிபால் 'காமக்கோட்டி'. திருமதி. இராதாபாய், ஆதீனப் பல்கலைக் கல்லூரி மாணவி, 'திலகவதியார்'. திருமதி. க. விமலா, ஆதீன உயர்பள்ளி மாணவி, 'காரைக்காலம்மையார்'. திருமதி. எம். திலகவதி,

ஆதீன உயர்பள்ளி மாணவி, 'மங்கையர்க்கரசி'. உரையாடல்: 'கோச்செங்கணன்' ஆதீனத் தேவாரப் பாடசாலை மாணவர்கள்.

11-10-'56 தலைவர்: திரு. எம். மகாலிங்கம் பிள்ளை, பி.ஏ., எல்.டி., அவர்கள், ஸ்கூல் டிப்டி இன்ஸ்பெக்டர், மாயூரம் வட்டம். பேச்சாளர்: சிரோமணி, கே. இராஜகோபால சாஸ்திரிகள், ஆதீனப் பல்கலைக் கல்லூரி, வடமொழிப் பேராசிரியர் 'தேவி மகாத்மியம்'. தேவார இசைமணி, வித்துவான், திரு. சா. ஞானப்பிரகாசம், ஆதீன உயர்பள்ளித் தமிழாசிரியர் 'திருமகள்'. திரு. ஜி. குருமூர்த்தி, ஆதீன ஆகமப் பாடசாலை மாணவர் 'சௌந்தர்யலகரி'. சிறுவர் திறன்: ஆதீனத் தொடக்கப்பள்ளிச் சிறுமியர் 'பின்னல் கோலாட்டம்'. ஆதீன ஆகமப் பாடசாலை மாணவர் 'காவிய விளக்கச் சொல்லாடல்'.

12-10-56 தலைவர்: திரு. கே. கே. சுப்பையாக் கவுண்டர் பி.ஏ., அவர்கள், ரேவின்யூ டிவிஷனல் ஆபீஸர், மாயூரம். பேச்சாளர்: திரு. கு. பரமசிவம் B A. (Hons.) அவர்கள், தமிழ்ப் பேராசிரியர், அன்பநாதபுரம் வகையார், அறத்துறைக் கல்லூரி மாயூரம் 'காந்திமதி பிள்ளைத்தமிழ்'. தேவார இசைமணி வித்துவான், திரு. வை. கல்யாணசுந்தரம், ஆதீன உயர்பள்ளித் தமிழாசிரியர் 'பால் நினைந்தூட்டும் தாய்'. திரு. எஸ். சுயம்புநாதன், ஆதீன உயர்பள்ளி மாணவர், 'அம்பிகையின் அருள்வடிவம்'. நாடகம்: 'பரதன்' ஆதீனத் தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள்.

அன்னபூர்ணி ஹோமம்

தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான ஸ்ரீ தர்மபுரீசுவரர் ஆலயத்தில் திருக்கோயில்கொண்டு எழுந்தருளி அருள் வழங்கும் ஸ்ரீ அஷ்டாதசபுஜ மகாலக்ஷ்மி துர்க்காம்பிகைக்கு 19-10-'56 வெள்ளிக்கிழமை யன்று காலை தொடங்கி நண்பகல் வரை அன்னபூர்ணி ஹோமம் மிக்க சிறப்போடு நிகழ்ந்தது. ஸ்ரீ துர்க்காம்பிகைக்கு விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனைகளும் நிகழ்ந்தன. அன்பர்கள் பலர் வந்து கண்டு இருமைப் பயனும் எய்தினர்.

ஏகதின லக்ஷார்ச்சனைகள்

தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான ஸ்ரீ தர்மபுரீசுவரர் ஆலயத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி அருள் வழங்கும் ஸ்ரீ அஷ்டாதசபுஜ மகாலக்ஷ்மி துர்க்காம்பிகைக்கு 26–10–'56 வெள்ளிக்கிழமை யன்று ஏகதின லக்ஷார்ச்சனை மிக்க சிறப்போடு நிகழ்ந்தது. ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றினார்கள். அன்பர்கள் பலர் வந்து தரிசித்தார்கள். வந்திருந்தோரனைவருக்கும் பிரசாதங்கள் வழங்கப்பெற்றன.

தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான ஸ்ரீ ஞானாம்பிகா சமேத ஸ்ரீ ஞானபுரீஸ்வரர் ஆலயத்தில் 25–10–56 வியாழக் கிழமை யன்று ஸ்ரீ ஞானபுரீஸ்வரருக்கு ஏகதின லக்ஷார்ச் சனையும், ஸ்ரீ ஞானம்பாளுக்கு நவசக்தியர்ச்சனையும் மிக்க சிறப் போடு நிகழ்ந்தன. ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் எழுந் தருளி வழிபாடாற்றினார்கள். அன்பர்கள் பலர் வந்து கண்டு மகிழ்ந்தனர். வந்திருந்தோரனைவருக்கும் பிரசாதங்கள் வழங்கப் பெற்றன.

திருக்கடவூரில்

தருமபுர ஆதீனத்திற்குச் சொந்தமான திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் நவராத்திரி நாட்களில் ஸ்ரீ அபிராமி அம்பாளுக்கு விசேஷ அபிஷேக அலங் கார ஆராதனைகள் நிகழ்த்தப்பெற்றன. 6—10—56 முதல் 11—10—56 முடிய உள்ள நாட்களில், சிறந்த அறிஞர்களைக் கொண்டு சமயச் சொற்பொழிவுகள், பிரசார சபா மண்டபத்தில் மாலை 6-மணிக்குத் தொடங்கி நடைபெற்றன. அன்பர்கள் பலர் வந்து கண்டும் கேட்டும் மகிழ்ந்தனர்.

வேளூரில்

தருமபுர ஆதீனத்திற்குச் சொந்தமான வேளூர் ஸ்ரீ வைத்திய நாதசுவாமி தேவஸ்தானத்தில் நவராத்திரி நாட்களில் ஸ்ரீ தையல் நாயகி அம்பாளுக்கு விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனைகள் நிகழ்த்தப்பெற்றன. 6—10—56 முதல் 11—10—56 முடிய

உள்ள நாட்களில், சிறந்த அறிஞர்களைக்கொண்டு சமயச் சொற்பொழிவுகள், மாலை 6-மணிக்குத் தொடங்கி பிரசாரமண்டபத்தில் நடைபெற்றன.

தருமபுர ஆதீனத்திற்குச் சொந்தமான தேவஸ்தானங்களின் சார்பில் வைத்தீஸ்வரன்கோயிலில் நடைபெறும் இந்து அனாதைக் குழந்தைகள் விடுதியில் கலைமகள் விழா 7, 8, 9—10—'56 ஆகிய மூன்று நாட்களிலும் மாலை 4 மணிக்குத் தொடங்கி நிகழ்ந்தது. சிறந்த அறிஞர்களைக்கொண்டு பல சொற்பொழிவுகளும், விடுதிக் குழந்தைகள் நடனம், கும்மி, கோலாட்டம், தேவார இசையரங்கு, உரையாடல் முதலியனவும் நடைபெற்றன.

சீகாழியில்

தருமபுர ஆதீனத்திற்குச் சொந்தமான சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானத்தில் நவராத்திரி நாட்களில் ஸ்ரீ திருநிலைநாயகி அம்பாளுக்கு விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனைகள் நிகழ்த்தப்பெற்றன. 6—10—56 முதல் 11—10—56 முடிய உள்ள நாட்களில், சிறந்த அறிஞர்களைக் கொண்டு சமயச் சொற்பொழிவுகள் திருஞானசம்பந்தர் ஆலயத்தில் மாலை 6-மணிக்குத் தொடங்கி நடைபெற்றன.

திருப்பனந்தாளில்

தருமபுர ஆதீனத்திற்குச் சொந்தமான திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் நவராத்திரி நாட்களில் ஸ்ரீ பிருகந்நாயகி அம்பாளுக்கு விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனைகள் நிகழ்த்தப்பெற்றன. 6—10—56 முதல் 11—10—56 முடிய உள்ள நாட்களில் சிறந்த அறிஞர்களைக் கொண்டு சமயச் சொற்பொழிவுகள், மாலை 6-மணிக்குத் தொடங்கி நடைபெற்றன.

திருவையாற்றில்

தருமபுர ஆதீனத்தித்குச் சொந்தமான திருவையாறு ஸ்ரீ பஞ்சநதீசுவரசுவாமி தேவஸ்தானத்தில் நவராத்திரி நாட்

களில் ஸ்ரீ அறம்வளர்த்தநாயகி அம்பாளுக்கு விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனைகள் நிகழ்த்தப்பெற்றன. 6—10—56 முதல் 11—10—56 முடிய உள்ள நாட்களில், சிறந்த அறிஞர்களைக் கொண்டு சமயச் சொற்பொழிவுகள், மாலை 6-மணிக்குத் தொடங்கி நடைபெற்றன.

திருபுவனத்தில்

தருமபுர ஆதீனத்திற்குச் சொந்தமான திருபுவனம் ஸ்ரீ கம்பஹரேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் நவராத்திரி நாட்களில் ஸ்ரீ அறம்வளர்த்தநாயகி அம்பாளுக்கு விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனைகள் நிகழ்த்தப்பெற்றன. 6—10—56 முதல் 11—10—56 முடிய உள்ள நாட்களில் சிறந்த அறிஞர்களைக்கொண்டு சமயச் சொற்பொழிவுகள், மாலை 6-மணிக்குத் தொடங்கி நடைபெற்றன.

திருக்குவளையில்

தருமபுர ஆதீனத்திற்குச் -சொந்தமான திருக்குவளை ஸ்ரீ தியாகராஜசுவாமி தேவஸ்தானத்தில் நவராத்திரி நாட்களில் ஸ்ரீ வண்டமரும்பூங்குழலாள் அம்பாளுக்கு விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனைகள் நிகழ்த்தப்பெற்றன. சிறந்த அறிஞர்களைக் கொண்டு சமயச் சொற்பொழிவுகள் ஒவ்வொருநாளும் மாலை 6-மணிக்குத் தொடங்கி நிகழ்ச்சியிற் குறித்தவாறு நடைபெற்றன. அன்பர்கள் பலர் வந்து கண்டும், கேட்டும் உய்ந்தார்கள்.

கொறுக்கையில்

தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான கொறுக்கை ஸ்ரீ வீரட்டேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ ஞானம்பிகை அம்பாளுக்கு நவராத்திரி நாட்களில் விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனைகள் நிகழ்த்தப்பெற்றன. அவ்வமயம் சிறந்த அறிஞர்களைக் கொண்டு சொற்பொழிவுகள் நடைபெற்றன. அன்பர்கள் அனைவரும் வந்து கண்டு கேட்டு இன்புற்றனர்.

திருக்கடவூரில்

நாள்மங்கல விழா

நிகழும் துன்முகி௵ ஐப்பசிமீ 15உ (31—10—'56) ஆம் நாள் புதன்கிழமை தருமபுர ஆதீனம் 25ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களது நாள் மங்கல விழாவைக் குறித்து திருக்கடவூர் ஸ்ரீ அபிராமி அம்பாள் சமேத ஸ்ரீ அமுதகடேசுவர சுவாமிக்கும் ஸ்ரீ அபிராமி அம்பாளுக்கும் அபிடேகம், அலங்காரம், ஆராதனைகள் நடைபெற்றன. ஸ்ரீ அமுதகடேசுவர சுவாமிக்குப் பஞ்சமுகார்ச்சனையும், ஸ்ரீ அபிராமி அம்பாளுக்கு நவசக்தி அருச்சனையும் நிகழ்ந்தது. நிகழ்ச்சியில் குறித்தவாறு அறிஞர்கள் பலர் சொற்பொழிவாற்றினார்கள். திருமுறைப் பாராயணமும் நடைபெற்றது அன்பர்கள் வந்து கண்டும் கேட்டும் இன்புற்று உய்ந்தார்கள்.

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றி விழாவிற்கு வந்திருந்தோரனைவருக்கும் திருக்கை வழக்கமும் செய்தருளினார்கள். விழா மலராக " மெய்கண்ட சாத்திரம் " வெளியிடப்பெற்றது.

சென்னை தருமையாதீன சமயப் பிரசார நிலையத்தில்

திருமுறை வகுப்பு மூன்றாவது ஆண்டு நிறைவு விழா

சென்னை தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலைய மன்றத்தில் திருமுறை வகுப்பு மூன்றாவது ஆண்டு நிறைவு விழா 14-10-56 ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்குக் கொண்டாடப்பெற்றது.

அவ்வமயம் தருமபுர ஆதீன இசைப் புலவர், இசையரசு, M. M. தண்டபாணி தேசிகர் அவர்கள் (இசைப்பகுதித் தலைவர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்) தலைமையுரையில் மாணவ மாணவிகளுக்கு அறிவுரை வழங்கிப், பரிசுகளும் வழங்கினார்கள். தருமபுர ஆதீனத் தமிழ்ப் புலவர், திரு. க. வச்சிரவேல் முதலியார் B. A., L. T. அவர்கள் (உதவித் தலைமை ஆசிரியர்,

பச்சையப்பன் உயர்நிலைப்பள்ளி, காஞ்சிபுரம்) திருமுறைப் பெருமை என்னும் தலைப்பில் சிறந்ததோரு சொற்பெருக்காற்றி னார்கள். பின்னர் பிரசார நிலையத் திருமுறை வகுப்பு மாணவ, மாணவியர்களால் "காரைக்காலம்மையார்" என்ற நாடகம் நடிக்கப்பெற்றது.

சமயப்பிரசார நிலையத்தின் ஆண்டு நிறைவு விழா

சென்னை தருமபுர ஆதீன சமயப்பிரசார நிலைய மன்ற மூன்றுவது ஆண்டு நிறைவு விழா 25—10—56 வியாழக் கிழமை மாலை 6—மணிக்கு, சென்னை அரசாங்கக் கவர்னர், கனம் ஸ்ரீ பிரகாசா அவர்கள் சீரிய தலைமையில் நிகழ்ந்தது. தலைவர் அவர்கள் பல அரிய கருத்துக்களைத் தமது தலைமையுரையில் நிகழ்த்தினார்கள்.

26—10—56-ம் நாள் முதல் மூன்று நாட்கள் திருமுறை மாநாடு திரு P. ஆறுமுக முதலியார் அவர்கள் தலைமையில் நிகழ்ந்தது. மாநாட்டைத் திருப்புகழ்மணி, திரு. T. M. கிருஷ்ண சாமி அய்யர் அவர்கள் தோடங்கிவைத்தார்கள். திருமுறைப் பண்ணிசை யரங்கு, சொற்பொழிவு, நாடகம் முதலியன நிகழ்ச்சியிற்கண்ட வண்ணம் நிகழ்ந்தன. 26—10—56 மாலை 5-30 மணிக்கு மாம்பலம் சிவ-விஷ்ணு ஆலயத்திலிருந்து திருமுறைப் பாராயணத்துடன் யானைமீது திருமுறை ஊர்வலம் நடைபெற்றது.

வித்துவான் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் மாநாட்டில் வரவேற்புரை நன்றி முதலியன கூறி உடனிருந்து சிறப்புற நிகழ்த்தினார்கள்.

முதல் நாள் 26-10-56 வெள்ளிக்கிழமை மாலை 6-30 மணி கடவுள் வணக்கம் சங்கீதபூஷணம் திரு. P. சுவாமிநாத முதலியாரவர்கள். தோடக்கவுரை திருப்புகழ் மணி அவர்கள். தலைமையுரை திரு. P. ஆறுமுக முதலியாரவர்கள் Dy. Secretary of Revenue., Govt. of Madras. பேச்சு: "சம்பந்தர் திருமுறை". திரு. கி. வ. ஜகந்நாதன் அவர்கள் M.A., ஆசிரியர் 'கலைமகள்'. "அப்பர் திருமுறை". திருமதி இராஜ ரத்தினம் அம்மையாரவர்கள், M. A., L. T., வில்லிங்டன்

பெண்கள் ஆசிரியை பயிற்சிக் கல்லூரி, சென்னை. " திருமுறைப் பண்ணிசையரங்கு ". திரு. M. சுப்பிரமணிய முதலியார், திரு. K. சோக்கலிங்கம் பிள்ளை குழுவினர், தருமபுர ஆதீனம். நாடகம் : " தோடுடைய செவியன் " நிலையத் திருமுறை வகுப்பு மாணவ மாணவியார்.

இரண்டாம் நாள் 27—10—56 சனிக்கிழமை மாலை 6 மணி கடவுள் வணக்கம் தேவார இசைமணி திரு. M. சுப்பிரமணிய முதலியாரவர்கள். தலைமையுரை திரு. டாக்டர் V. இராகவன் M. A. வடமொழிப் பேராசிரியர், பல்கலைக் கழகம், சென்னை. பேச்சு : " சுந்தரர் திருமுறை ". திரு. C. ஜகந்நாதாசாரியார் அவர்கள், M. A. தமிழ் விரிவுரை யாளர், விவேகாநந்தர் கல்லூரி, சென்னை. " மாணிக்கவாசகர் திருமுறை ". திருமதி காஞ்சனமாலை அம்மையார் அவர்கள், சென்னை. " திருமுறைப் பண்ணிசையரங்கு ". திருமதி M. நாக லக்ஷ்மி அம்மாள், திருமதி L. இந்திரா குழுவினர் (நிலையத் திரு முறை வகுப்பு மாணவியர்). நாடகம் : " புலமைப் பயன் " நிலையத் திருமுறை வகுப்பு மாணவ மாணவியர்.

மூன்றும் நாள் 28—10—56 ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணி கடவுள் வணக்கம் திரு. K. சோக்கலிங்கம் பிள்ளை யவர்கள். தலைமையுரை திரு. M. K. சண்முகம் அவர்கள். M. A., தியாகராயர் கல்லூரித் தலைவர், சென்னை. பேச்சு : "9—10ங் திருமுறை" திரு. ச. சிவ குமாரன் அவர்கள், M. A. சென்னை. "11—12ங் திருமுறை" திருமதி வித்துவான், மீனுட்சிசுந்தரசிவை அவர்கள், சென்னை. " திருமுறைப் பண்ணிசையரங்கு " திரு. P. சுவாமிநாத முதலியார், திரு. S. திருஞானசம்பந்தம் குழுவினர், தருமபுர ஆதீனம். நாடகம் : " புனிதவதி " நிலையத் திருமுறை வகுப்பு மாணவ மாணவியர்.

கந்த சஷ்டி விழா விரிவுரை

சேந்தமிழ்ச் சோக்கலிங்கப் பெருமான் திருவருளால் கந்த சஷ்டி விழாவை முன்னிட்டு வேளூர் தேவஸ்தான இறைபணி மன்றத்தில் 3—11—56 முதல் நாள் தோறும் மாலை 6-15 மணிக்குக் கயப்பாக்கம் திரு. சோமசுந்தரம் செட்டியார் அவர்கள்

"கந்தபுராண விரிவுரை" நிகழ்த்துகிறார்கள். நிகழ்ச்சியிற் காணும் வண்ணம் தலைமையுரைகளும், விரிவுரைகளும், நிலையத் திருமுறை வகுப்பு ஆசிரியர், மாணவ மாணவியர்களால் தேவார, திருப்புகழ் பாராயணமும் நடைபெறுகிறது.

தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான வேளூர் ஸ்ரீ வைத்திய நாத சுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ செல்வமுத்துக்குமார சுவாமிக்கும் மாயூரம் குமரக்கட்டளை ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிக்கும் 3—11—'56 முதல் தொடங்கி கந்த ஷஷ்டி விழா மிக்க சிறப்போடு நிகழ்கிறது. கந்த ஷஷ்டி விழாவை முன்னிட்டு மாயூரம் குமரக்கட்டளையிலும், வேளூர் ஸ்ரீ வைத்தியநாத சுவாமி தேவஸ்தானத்திலும், சீகாழி ஸ்ரீ சட்டைநாத சுவாமி தேவஸ்தானத்திலும் பல அறிஞர்களைக் கொண்டு ஒவ்வொரு நாளும் மாலை 6-மணிக்குச் சொற்பொழிவுகள் நிகழ்த்துகின்றனர்.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின்
ஜன்ம நக்ஷத்திர அபிஷேக ஆராதனை

தருமபுர ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் மாத ஜன்ம நக்ஷத்திர நாட்களில் திருப்பதிகம் பெற்ற சிவதலங்களில் ஆதீனச் சார்பில் அபிஷேக ஆராதனைகள் செய்வித்து, தலப் பதிகங்களையும் அச்சிட்டு வழங்கி வருதல்போல இம்மாதத்திலும் 31—10—'56 புதன்கிழமை அன்று திருநெல்லிக்கா ஸ்ரீ நெல்லி வனநாத சுவாமி ஆலயத்தில் அபிஷேக ஆராதனைகள் ஆதீனச் சார்பில் செய்விக்கப்பெற்றன. ஆதீன வெளியீடாக அச்சிட்ட திருநெல்லிக்காத் திருப்பதிக உரையை வழங்கி, திரு. ஆர். வேலாயுத ஓதுவாமூர்த்திகளால் பண் முறைப்படி பதிகம் முழுவதும் பாராயணமாக ஓதப்பட்டது.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள்
திருச்செந்தூர்த் தலயாத்திரை

துன்முகி ஆண்டு ஐப்பசித் திங்களில் நிகழ்கின்ற கந்த ஷஷ்டி விழாவை முன்னிட்டு, தருமபுர ஆதீனம், ஸ்ரீலஸ்ரீ குரு மகாசந்நிதானம் அவர்கள் 1—11—56 வியாழக்கிழமையன்று காலை திருச்செந்தூருக்கு ஆண்டுதோறும் செய்துவருகின்ற கந்த ஷஷ்டி விரதத்தை மேற்கொள்ள எழுந்தருளினார்கள்.

எதிர்காலம்

ஜோதிஷார்ணவம், பிரமஸ்ரீ. கே. முத்துஜோதிடர் அவர்கள்,

திருவிடைமருதூர்.

(துன்முகிஹு கார்த்திகைமீ 1௳ முதல் 30௳ முடிய)

(16–11–56 முதல் 14–12–56 முடிய)

1. மேஷம். அசுவதி - பரணி - கார்த்திகை ¼

மேஷராசி 9 பாதங்களும் ஷ முதற்பாதியில் சகல நன்மைகளையும் லாபத்தையும் தரும். பரணி முதல் பாதம் எதிர்பாராதபடி விசேஷ தனலாபத்தைத் தரும். பரணி 2, 3, 4 பாதங்கள் பிரமாதமாய் தூக்கிவிட்டு பதனத்தை உண்டுபண்ணும். மாதம் பிற்பாதியில் கார்த்திகை முதல் பாதம் சுபத்தையும் தொழிலையும் தரும். சனி, செவ்வாய் சுபமாகும்.

2. விருஷபம். கார்த்திகை ¾, ரோஹிணி - மிருகசீரிஷம் ½

விருஷப ராசி 9 பாதங்களும் ஷெ மாதம் எல்லா நன்மைகளையும் உண்டுபண்ணும். வியரபாரம் ஓங்கும் விவசாயம் பலன் தரும். உத்தியோக ஏத்தம் ஏற்படும். வியாதி நீங்கும். கடன் தொலையும் குடும்பம் அமைதியாயும் சந்தோஷமாயும் நடக்கும் புதன், வியாழன் சுபமாகும்

3. மிதுனம். மிருகசீரிஷம் ½, திருவாதிரை - புனர்பூசம் ¾

மிருகசீர்ஷம் 3, 4 பாதங்கள் மிசிரமான பலனைத் தரும். அதிக விரயம் ஏற்படும். பிரபுக்களுக்கு பீடை ஏற்படும். திருவாதிரை நான்கு பாதங்களும் கவலை உண்டுபண்ணி நிவர்த்தியாகும். தொழில் ஓங்கும். கடன் தொலையும் சத்துருமைத்திரம் ஏற்படும். புனர்பூசம் 1, 2, 3 பாதங்களும் ஈதிபாதைகளால் துக்கம் அனுபவிக்கச் செய்யும். அதிக கஷ்ட நஷ்டங்களும் வியாதி பீடையும் தந்து சதா கவலையைத் தரும். புதன், வெள்ளி சுபமாகும்.

4. கடகம். புனர்பூசம் $\frac{1}{4}$, பூசம் - ஆயில்யம்.

புனர்பூசம் 4ம் பாதம் தூர பிரயாணத்தைத்தந்து தொழிலைத் தரும். பூசம் நான்கு பாதங்களும் எஜமான் கோபத்தையும் தொழில் நஷ்டத்தையும், குடும்ப கஷ்டத்தையும் இடம் மாறலையும் நாஸ்திகத்தையும் தந்து துக்கமடையச்செய்யும். ஆயில்யம் 4 பாதங்களும் தூரத்திலிருந்து எதிர்பாராத லக்ஷக்கணக்கான லாபத்தைத் தந்து உலகில் நன்மதிப்பைத் தரும். புதன் வெள்ளி சுபமாகும்.

5. சிம்மம். மகம் - பூரம் - உத்திரம் $\frac{1}{4}$

மகம் நான்கு பாதங்களும் அலைச்சலுடன் சுகம் தரும். தூரத்திலிருந்து தொழில்மூலம் லாபம் காட்டும். பூரம் நான்கு பாதங்களும் கலகங்களையும் நஷ்டங்களையும் தரும். உத்திரம் முதல் பாதம் உயர்பதவிகளையும் பெரியோர் மேலோர் அன்பையும் தெய்வ பக்தியையும் தந்து உலக பிரஸித்தியை உண்டுபண்ணும்

6. கன்னி. உத்திரம் $\frac{3}{4}$, ஹஸ்தம் - சித்திரை $\frac{1}{2}$

உத்திரம் 2, 3 பாதங்கள் ஆரண்ய சஞ்சாரத்துக்கு சமான பலன் தரும். உத்திரம் 4ம் பாதம் உயர்பதவிகளையும் லாபத்தையும் பெரியோர்களால் கொண்டாடும் தன்மையும் தரும். ஹஸ்தம் 1, 4 பாதங்கள் மஹாவைபவத்தைத் தந்து நிறைந்த செல்வத்தையும் உலகில் பிரமாதமான புகழையும் தெய்வ சக்தியையும் தரும். சத்துருக்கள் சரண் அடைவார்கள் வியாதி நீங்கும் சுகம் தரும். ஹஸ்தம் 2, 3 பாதங்கள் மிகுந்த கஷ்டத்தையும் தொழில் நஷ்டத்தையும் தந்து அபவாதத்தைக் கொடுக்கும் குடும்ப கஷ்டம் தாங்காது புத்தியானது சிதறும். சதா துன்பமாகவே இருக்கும். தெய்வ சகாயம் ஏற்படும். சனி, செவ்வாய் சுபமாகும். சித்திரை முதல் இரண்டு பாதங்கள் சந்தோஷத்தை அனுபவிக்கும்படி செய்யும். சுபமாகும்.

7. துலாம். சித்திரை $\frac{1}{2}$, சுவாதி - விசாகம் $\frac{3}{4}$

சித்திரை 3, 4 பாதங்கள் கஷ்ட பலனைத்தரும். மனம் நிம்மதி இராது. சுவாதி நான்கு பாதங்களும் சுபமாகவே நடக்கும். தொழில் ஓங்கும். ஜயம் உண்டாகும். சந்தோஷ வாழ்வு

ஏற்படும் வியாதி நீங்கும். கடன் நிவர்த்தியாகும். விசாகம் 1, 2, 3 பாதங்களும் கலஹத்தையும் நஷ்டத்தையும் தீராத வியாதி பயத்தையும் தரும். புதன், வெள்ளி சுபமாகும்.

8. விருச்சிகம். விசாகம் $\frac{1}{4}$, அனுஷம் - கேட்டை.

விசாகம் 4ம் பாதமும் அனுஷம் 4 பாதங்களும் சுபத்தைத் தராது. பந்துவர்க்க குறையும் அபவாதமும் தொழில் நஷ்டமும் கடனும் ஏற்படச் செய்யும். கேட்டை 4 பாதங்களும் சமமாய் நடக்கும். இல்லற சுகமும் ஆடையாபரணச் சேர்க்கையும் தந்து சந்தோஷம் உண்டுபண்ணும். சனி, செவ்வாய் சுபமாகும்.

9. தனுசு. மூலம் - பூராடம் - உத்திராடம் $\frac{1}{4}$

உத்திராடம் முதல் பாதம் சந்தோஷத்தைத் தரும். மூலம், பூராடம் அனேகவித கவலைகளைத் தந்து மாதக் கடைசியில் சந்தோஷம் உண்டுபண்ணும். ஈதிபாதைகள் நீங்கும் விவசாயம் ஓங்கும். அடிக்கடி புத்திமாறுதல் ஏற்படும். நாஸ்திகம் தலை காட்டும். அப்போது உடனே கஷ்டங்களும் தலைகாட்டும். ரொம்ப நிதானமாய் பயத்துடன் நடப்பவர்கள் சுபமடைவார்கள். புதன், வியாழன் சுபமாகும்.

10. மகரம். உத்திராடம் $\frac{3}{4}$, திருவோணம் - அவிட்டம் $\frac{1}{2}$

உத்திராடம் 2, 3, 4 பாதங்களும் மேலோர் அன்பைத்தந்து நிரந்தர சுகத்தையும் ஸ்திர ஜீவனத்தையும் தரும். திருவோணம் நான்கு பாதங்களும் கீர்த்தியையும் மேல் பதவிகளையும் நல்ல ஒழுக்கங்களையும் தரும். அவிட்டம் 1, 2 பாதங்கள் எதிர்பாராத ராஜாங்க உதவிகளையும் உயர் பதவிகளையும் விசேஷ தனலாபங்களையும் இடம் மாறுதல்களையும் தந்து சந்தோஷம் உண்டு பண்ணும். புதன், வியாழன் சுபமாகும்.

11. கும்பம். அவிட்டம் $\frac{1}{2}$, சதயம் - பூரட்டாதி $\frac{3}{4}$

கும்பராசி 9 பாதங்களும் மாதம் முதல் பாகத்தில் சகல சந்தோஷங்களையும் தரும். பிற்பாதியில் வியாதி பயத்தையும் கவலையும் உண்டுபண்ணும். அடிக்கடி தெய்வ காரியங்களும்

இடம் மாறலும் க்ஷேத்திராடனங்களும் உண்டுபண்ணும். புதன், வெள்ளி சுபமாகும்.

12. மீனம். பூரட்டாதி $\frac{1}{4}$, உத்திரட்டாதி - ரேவதி.

மீன ராசி 9 பாதங்களும் சுபமாகவே நடக்கச்செய்யும். தொழில் லாபம் கிடைக்கும். வெற்றி ஏற்படும் ரோகம் நீங்கும். குடும்பம் ஓங்கும் புத்திராதிகளால் லாபம் ஏற்படும். கீர்த்தி கிட்டும். நூதன முறைகளால் ஜீவனலாபம் ஏற்படுத்தும். தெய்வ பலம் பிரகாசிக்கும். புதன், வியாழன் சுபமாகும்.

குறிப்பு:— ஷெமாதம் உலகில் பலவித மாறுதல்களையும், ஈதி பாதைகளையும் உண்டுபண்ணுமாதலால் மஹாஜனங்கள் ஆஸ்திகத்தோடு கடவுளை இடைவிடாது பஜிக்கவேணும் பயம் நீங்கும் சுபிக்ஷமுண்டாகும் கடவுளை நம்பினோர் கைவிடப்படார் என்றும் பழமொழி சத்தியமாகும்.

மதிப்புரை

தீர்க்கதரிசி

தமிழாக்கம் செய்தவர், டாக்டர் பா. நடராசன் எம். ஏ. டி. லிட். (பொருளாதாரப் பேரறிஞர். வெளியிட்டோர்: பாரி நிலையத்தார். விலை ரூ. 1—8—0. பக்கம் 107.)

இந்நூல் அரபு மொழியிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டது. இந்நூலுக்குப் பேராசிரியர் கி. சுவாமிநாதன் எம்.ஏ. அவர்களுடைய அணிந்துரை அணியாக விளங்குகிறது. இந்நூல் அரபு ஆசிரியர். கலீல்ஜிப்ரானின் சிந்தனைகளைக் கூறும் சிறப்பு வாய்ந்தது. கலீல் ஜிப்ரான் ஆத்மீக உண்மைகளை எளிய முறையில் பிறருக்கு உணர்த்துவதில் வல்லவர். அன்பு, மக்கட்பேறு, ஈகை என்ற பல தலைப்புக்களில் பல அரிய கருத்துக்கள் கூறப்பெற்றுள்ளன. ஒவ்வொரு தலைப்பும் படிப்பதற்கு ஆர்வத்தை ஊட்டி, படிப்போரை ஆத்மீகத் துறையில் படியச் செய்கிறது. இந்நூல் ஒவ்வொரு தமிழர் கையிலும் இலங்க வேண்டிய பெருமையுடையது.

வி. சபேசன்

தருமபுர ஆதீனம்

சென்னை சமயப்பிரசார நிலயத்தில்

தருமபுர ஆதீனம் சென்னை மடாலய தேவாலய சமயப் சார நிலய வேலூர் தேவஸ்தான இறைபணி மன்றத்தில் –8—54 முதல் 1–9—54 முடிய உள்ள நாட்களில் விநாயக த்தியை முன்னிட்டு நடந்த சொற்பொழிவுகள்:-

திவான்பகதூர் ஸ்ரீ R. V. கிருஷ்ணய்யர் B.A., M.L.C.I.E., கள் விழாவைத் தொடங்கிவைத்தார்கள். 28—8—54 கிழமை ஸ்ரீ பித்துக்கொளி முருகதாஸ் அவர்கள் விநாயக ம் முருகனையும்பற்றிய அருள்பாடல்களைப் பாடிப் பஜனை து எல்லோரையும் பரவசப்படுத்தினார்கள். மற்றைய ட்களில் தாம்பரம் பிரசங்காமிர்தம் திரு. பூ. சமரபுரி தலியார் அவர்கள் விநாயகர் தோற்றம், தத்துவம், திருவிளை டல், வழிபாடு என்று பகுத்து விளக்கமாகச் சொற்பொழி ற்றினர்.

29, 30—8—54 இருநாளிலும் பச்சையப்பன் கல்லூரித் தத்துவப்பேராசிரியர், வித்வான், திரு. தேவசேனாபதி M. A. அவர்கள் வழிபாடு, தோத்திரங்கள் என்ற தலைப்புக்களில் பேசினார். குகஸ்ரீ பு. பா. ரசபதி அவர்கள் விநாயகரைப்பற்றி அரிய பெரிய உண்மைகளைப் பலரும் மகிழச் சொற்பொழிவாற் றினார்கள். அந்நாட்களில் விரிவுரைக்கு முன்னும் பின்னும் திருமுறை ஆசிரியர், சங்கீதபூஷணம் திரு. P. சுவாமிநாதன் அவர்களாலும், திருமுறைப் பயிற்சி வகுப்பு மாணவ மாணவி களாலும் திருமுறை ஓதப்பெற்றது. பிரசாரநிலய விசாரணை வித்துவான் ஸ்ரீமத் மௌன சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிக ளவர்கள் தொடக்கவுரையும் நன்றியுரையும் நிகழ்த்தினார்கள்.

வித்துவான் ஸ்ரீமத். மௌன. சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் 1, 8, 22—8—54 ஆகிய மூன்று நாட் களிலும் திருநாவுக்கரசு நாயனார் புராணமும், திருநீலநக்க நாயனார் புராணமும் பற்றி அரிய சொற்பொழிவுகளை நிகழ்த் தினார்கள். 15, 21—8—54 ஆகிய நாட்களில் ஸ்ரீரங்கம்பாகவதர் பிர்மஸ்ரீ சடகோபாசாரியார் அவர்கள் அப்பூதியடிகள் நாயனார் புராணத்தை மிக்க ரசமான முறையில் பிரசங்கித்தார்.

Sri Panchanathiswaraswamy Devasthanam,

Thiruavaiyaru, Tanjore Taluk and Dt.,

I had the good fortune to visit this temple today and pay homiage at the several shrines. I als heard two girls sing Thevaram at the Amman sa nadhi. I understand that they had been tau Thevaram in a school run by the Adhinam. Th singing was of a high order. The premises are k tidy. The Headclerk (Sri Ganesa Iyer) was v helpful,

(Sd.) C. A. Ramakrishnan, I. C. S.,
Member, Dt. Rev. Admn. Enquiry Committ
Board of Revenue, Madras, 20—8—54

The temple is grand and we have not seen a modern temple built in such a grand scale. All credit to the builder.

(Sd.) P. C. Roy,
Dalmia Cements Ltd., Dalmiapuram,
20—8—54.

Much impressed by my visit. The temple is neat and the poojas celebrated well.

(Sd.) T. M. Narayanaswami, M. L. C.
Ex, President,
H. R. E. Boord, Madras, 20—8—54.

(True extract from the Visitors' Book.)

Printed & Published by K. Sundaresa Iyer, Agent, Dharmapuram Adhinam at th Gnanasambandam Press, Dharmapuram. (Mayuram). 10—9—1954.

உ

குருபாதம்

வேண்டுகோள்

" ஞானசம்பந்தம் "

அடுத்த இதழ் 16 ஆவது ஆண்டின் தோடக்கம் ஆகும். ஆதலின், இதுவரை, " ஞானசம்பந்தம் " பெருதவர்கள் இனியேனும் பேற்றுக் கற்றுணர்ந்து பேரின்ப வாழ்வு நடத்துவார்களாக. இக் காலத்திலே சமயத் தோண்டு புரியும் இதழ்கள் " ஞானசம்பந்தம் " " குமரகுருபரன் " ஆகிய இரண்டுமே. சமய ஞானம் ஒன்றே உயிர்க்கு உறுதுணை; பேரின்பக் கருவி.

ஓர் ஆண்டுக் கட்டணம் ஒன்றரை ரூபாய்தான். ஆயுட் சந்தா இருபத்தைந்துருபாய். சந்தாதாரராக முந்துக. சந்தா சேலுத்துவதற்கு ஒவ்வோரு நகரத்திலும் தக்க அன்பர்கள் நியமிக்கப் பேற்றுள்ளார்கள்.

திருவண்ணுமலைத் திருவிழாவிற்குச் சேல்லும் அன்பர்கள் இதிற் குறித்த விலாசங்களில் சந்தாவைச் சேலுத்தி ரசீது பேறலாம்.

1. திரு. அ. தா. ப. திருஞானசம்பந்தம் அவர்கள்
   Banker, குமரகோயில் தேரு, திருவண்ணுமலை.

2. திரு. A. T. P. தாண்டவராயன் B. A., B. L., அவர்கள்
   அட்வகேட், திருவண்ணுமலை.

3. திரு. A. நாராயணசாமி பிள்ளை B. A., B. L., அவர்கள்
   அட்வகேட், திருவண்ணுமலை.

4. திரு. S. ரங்காச்சாரியார் B. A., B. L., அவர்கள்
   அட்வகேட், திருவண்ணுமலை.

சேயலாளர்,

" ஞானசம்பந்தம் " அச்சகம்,

தருமபுரம், மாயூரம் P. O.

சென்னை, மதுரை & திருநெல்வேலி

"ஞானசம்பந்தம்" சந்தா நேயர்களுக்கு

ஞானசம்பந்தத்திற்குப் புதிதாகச் சந்தா செலுத்திச் சேர விரும்புவோர் கீழ்க்காணும் விலாசதாரர்களுக்குச் சந்தாத் தொகையை அனுப்பி ரசீது பெற்றுக்கொள்ளலாம்.

பழைய சந்தாதாரர்கள் தங்கள் பழைய சந்தா எண்ணைக் குறிப்பிட்டு, சந்தாவைப் புதிப்பித்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள். அடுத்தது முதல் இதழ்.

தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப்பிரசார நிலையம்
41. உஸ்மான்ரோடு, தியாகராயநகர்,
சென்னை - 17.

❋

உயர்திரு, இராம. கனகசபாபதிப் பிள்ளை அவர்கள்
2/107, கம்பராமாயணத் தெரு,
வண்ணாரப்பேட்டை P. O.
திருநெல்வேலி.

❋

உயர்திரு. ம. க. சுந்தரேச பட்டர் அவர்கள்
38 & 48, வடக்கு ஆவணிமூலவீதி,
மதுரை.

குறிப்பு :— இசையரசு, திரு. M. M. தண்டபாணி தேசிகர் அவர்கள் பாடிய தேவார இசைத்தட்டுகளின் தொகுதியும், தருமபுர ஆதீன வெளியீடு திருஞானசம்பந்தர் தேவாரம் மூன்றும் திருமுறையும், மதுரை, உயர் திரு. சிவதர்மபாஸ்கரர், ம. க. சுந்தரேச பட்டர் அவர்களிடமிருந்து விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம்.

Printed & Published by K. Sundaresa Iyer, Agent, Dharmapuram Adhinam at the Gnanasambandam Press, Dharmapuram. (Mayuram). 10—11—66.